ஆகஸ்ட் 10 - 16, 2008 August 10 - 16, 2008 பக்கங்கள் - 28 35.00

பொதுசன நூலகம்
நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAROLI

வார மலர்

## புலிகள் அல்லாத மாற்றுத் தலைமையை ஊக்குவிப்பதே இந்தியாவின் திட்டம்



Beijing 2008

## 'சார்க்' சங்கதிகள்






## ஒலிம்பிக் திருவிழா



# 'சப்' என்று முடிந்த 'சார்க்' மாநாடு


மகிந்த ராஜபக்ஷ

இலங்கை அரசால் பெரும் எடுப்பில், பெருஞ் செலவில் முன்னெடுக்கப்பட்ட 'சார்க்' மாநாடு இறுதியில் 'சப்' என்று முடிவடைந்திருக்கிறது.

'சார்க்' மாநாட்டுக்கு வரும் தலைவர்களை 'குறி'வைத்து பெரும் தாக்குதல்களை விடுதலைப்புலிகள் நடத்தப் போகின்றார்கள் என்று பெரும் பிரசாரத்தை முன்னெடுத்த இலங்கை அரசு -



றிச்சர்ட் பௌச்சர்

அத்தாக்குதலை முறியடிக்கும் நோக்கில் தமிழர்களைக் கொத்துக் கொத்தாகக் கைதுசெய்ததுடன் பாதுகாப்பு ஏற்பாடுகள் என்ற பேரில் தமிழ் மக்களுக்கு எதிராகக் கெடுபிடிகளையும் தீவிரமாக்கியிருந்தது.

அரசின் இந்தப் போக்குக்கு ஆப்பு வைப்பது போன்று, 'சார்க்' மாநாட்டை ஒட்டி ஒருதலைப்பட்சமாக 10 நாள்கள் யுத்த நிறுத்தத்தை விடுதலைப் புலிகள் அறிவித்தனர்.

இலங்கை அரசு கூறுவது போன்று, தாம் பயங்கரவாத அமைப்பு அல்ல, விடுதலையை நோக்கிய போராட்டம் ஒன்றையே நாம் மேற்கொள்கின்றோம் என்று அறிவித்த விடுதலைப்புலிகள்-

தெற்காசிய நாடுகளுடன் நல்லெண்ணத்தைக் கட்டி எழுப்பி நட்புறவை வளர்க்கும் நடவடிக்கையாக யுத்த நிறுத்தத்தை அறிவிப்பதாகத் தெரிவித்து மாநாடு வெற்றிபெற வாழ்த்தையும் வெளிப்படுத்தியிருந்தனர்.

விடுதலைப் புலிகளின் இந்த நல்லெண்ண வெளிப்பாட்டை ஏற்க மறுத்த இலங்கை அரசு யுத்த நிறுத்தத்தை முழுமையாக நிராகரித்து இருந்தது.

விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத அமைப்பாக வெளிப்படுத்தி பயங்கரவாதத்தை ஒழிக்க சார்க் நாடுகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என இலங்கை ஜனாதிபதி கோரிக்கை விடுத்தார்.

ஆனால் அந்தக் கோரிக்கை மாநாட்டில் பெரிதாக எடுபடவில்லை.

யுத்தம் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது, பேச்சு மூலமே தீர்வுகாண வேண்டும் என்று தமது நாட்டின் நிலைப்பாட்டை இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் வெளிப்படுத்தி உள்ளார்.

மாநாட்டில் அவதானிப்பாளராகக் கலந்துகொண்ட அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் றிச்சர்ட் பௌச்சரும் இலங்கை அரசுக்கு காட்டமான கருத்தை வெளிப்படுத்தி உள்ளார்.

இலங்கையில் அதிகரித்து வரும் ஆள்கடத்தல் மற்றும் காணாமற் போகச் செய்தல் போன்ற மனித உரிமை மீறல்களை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும். அதன் பொருட்டு இலங்கை அரசு காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம் என கூறியுள்ளார் பௌச்சர்.

அரசுடன் சேர்ந்தியங்கும் துணைப் படைகளின் ஆயுதங்களைக் களைய வேண்டும் என்று இலங்கை அரசைப் பகிரங்கமாகக் கோரியும் உள்ளார் அவர்.

சார்க் மாநாட்டில் கலந்துகொண்ட ஏனைய தலைவர்களிடம் இருந்து கருத்துக்கள் பகிரங்கமாக வெளிவராத போதும்-

தலைவர்கள் ஒன்றாக கூட்டுப் பிரகடனம் ஒன்றை வெளியிட்டனர்.

22 விடயங்கள் குறித்து மாநாட்டில் ஆராயப்பட்டதாகவும் ஏனைய விடயங்களுடன் சேர்ந்து பயங்கரவாதத்தை ஒழித்தல் விடயமும் கூட்டுப் பிரகடனத்தில் இடம் பெற்றதாகவும் அறிவிக்கப்பட்டது.

பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு 'சார்க்' நாடுகள் ஒன்றிணைந்து முயற்சி மேற்கொள்ள - செயற்பட - வேண்டும் எனப் புதிய தலைமைப் பதவியை ஏற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரையாற்றிய போதும் கூறினார்.

இலங்கை அரசு எதிர்பார்த்தது போன்று பயங்கரவாத ஒழிப்புக்கு 'சார்க்' மாநாடு உதவவில்லை என்று அவதானிகள் கூறுகின்றனர்.

விடுதலைப் புலிகளின் நல்லெண்ண சமிக்ஞை மாநாட்டை 'சப்' என்ற நிலைக்குத் தள்ளிவிட்டது என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

'சார்க்' மாநாட்டால் அப்பாவிப் பொது மக்கள் கெடுபிடிகளுக்கும் அசௌகரியங்களுக்கும் உள்ளாக்கப்பட்டமையைத் தவிர நாட்டுக்கு வேறு என்னதான் நன்மை விளைந்தது என்று தமிழ்த் தலைவர்களும் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே. கவின் தலைவர்களும் கேட்கிறார்கள்.

கூடிக் கலைந்த மாநாடாகத்தான் 'சார்க்' மாநாடு முடிவடைந்து விட்டது. இந்த மாநாட்டால் பயன் ஏதும் இல்லை என்று அவர்கள் கூறுகின்றனர்.


பெரும் எதிர்பார்ப்புடன் முன்னெடுக்கப்பட்ட மாநாடு 'சப்' என்று முடிந்து விட்டது.

சார்க் மாநாட்டுடன் விடுதலைப் புலிகளின் ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தமும் முடிவுக்கு வந்துவிட்டது.

இனித்தான் வன்னிக் களமுனை அதிரப் போகின்றது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஒரு வருடத்துக்கு முன்னர் - மன்னாரில் ஆரம்பமான வடக்கை மீட்கும் அரசின் போர் இப்போது தீவிரமடைந்து வருகிறது.

மன்னாரில் நிலை கொண்டுள்ள இராணுவத்தின் 58 ஆவது படையணியினர் தற்போது தமது நிலைகளில் இருந்து முன்னேறி கிளிநொச்சி மாவட்


மன்மோகன்சிங்

டத்துக்குள் முன்னகர்ந்துள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய இரு மாவட்டங்கள் மட்டுமே படையினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட வேண்டியுள்ளன என்பதும் அவர் கூறியுள்ளார்.

விரைவில் அந்தப் பிரதேசம் படையினர் வசமாகும் என்றும் அவர் எதிர்வு கூறியுள்ளார்.

'ஜெயசிக்குறு' இராணுவ நடவடிக்கை மூலம் மாங்குளம் ஊடாக ஒட்டிசுட்டான் வரை நீண்ட பிரதேசம் ஒன்றைப் படையினர் மீட்டிருந்தனர். அந்த நடவடிக்கையில் ஈடுபட்ட படையினரை விரட்டித் துடைத்தொழிக்கும் நடவடிக்கை ஒன்றை விடுதலைப் புலிகள் முன்னெடுத்து இருந்தனர். அதன் மூலம் படையினருக்குப் பெரும் இழப்பு ஏற்பட்டிருந்தது.

அதன்பின் கிளிநொச்சி வரை முன்னேறியிருந்த படையினரை ஆனையிறவு வரை விரட்டி, பின்னர் ஆனையிறவில் இருந்து முகமாலைக்கு விரட்டிய நடவடிக்கை ஒன்றையும் புலிகள் முன்னெடுத்திருந்தனர்.

இப்போதும் புலிகள் வகுக்கும் திட்டம் அத்தகையதாகவே இருக்கும் எனக் கூறப்படுகின்றது.

அகலக்கால் வைத்த படையினரை ஒரு வாரத்தில் விரட்டி அடித்த பழைய வரலாறை நினைவுபடுத்தும் விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் தீபன் படையினருக்கு விரைவில் பதிலடி கொடுப்போம் என்று சூளுரைத்துள்ளார். உள்ளே வரவிட்டுத்தான் எமது பதிலடி இருக்கும் என்று கூறுகிறார் மற்றொரு தளபதியான கேணல் அமுதாப்.

களநிலைவரங்களை ஆள ஆராய்ந்து நோக்கும் இடத்து, விரைவில் புலிகளின் பதிலடி ஆரம்பிக்கும் சாத்தியமே தென்படுகின்றது.

வன்னிக் களத்தில் வெடிக்கப்போகும் சமர் வாழ்வா? சாவா? என்ற மரணப் போராட்டமாக அமையப் போகின்றது.

# வன்னியில் தீவிரமாகும் போர்: அவலத்துடன் மக்கள் ஏக்கம்


மரங்களுக்குக் கீழ் மக்கள்

விடுதலைப் புலிகள் மௌனம் கலைந்து தொடுக்கும் போர் அரசுக்கு மரண அடியாக வரப்போகின்றது என ஆய்வாளர்கள் எதிர்வு கூறுகின்றனர்.

போர் தீவிரமாகத் தீவிரமாக மக்களின் அவல வாழ்வும் மோசமாகிக் கொண்டிருக்கின்றது.

ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் போக்கிடம் இன்றி மர நிழலுக்குக் கீழேயும் பாடசாலைகள் மற்றும் பொது இடங்களிலும் தங்கியிருக்கிறார்கள்.

**யாழவன்**

கிளிநொச்சி நகரை அண்டிய பகுதிகளில் மக்கள் சொல்லொணா கஷ்டங்கள், இன்னல்களுடன் வாழ்க்கையை ஓட்டுகிறார்கள்.

பாடசாலைகள் மூடப்பட்டுவிட்டன. மக்களின் தொழில்கள் ஸதம்பித்து விட்டன.

ஒரு பக்கம் இடப்பெயர்வு.

மறுபக்கம் தொழில் இன்றி, வருமானம் இன்றி அவல வாழ்வு.

எப்போது நிம்மதி கிட்டும் என ஏக்கத்துடன் தினமும் வாழ்க்கையை ஓட்டும் நிலையே வன்னியில் காணப்படுகின்றது.




பிள்ளைகள், பெரியவர்கள்,முதியோர்கள் அனைவருக்கும் விசேடமாக நோய் வாய்ப்பட்டுள்ள போதும் ( நோய்களிலிருந்து சுகம் அடையும் போதும் ) கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்களுக்கும் நலனுடன் இருப்பதற்கு மேலதிக போஷாக்கும் சக்தியும் தேவைப்படுகிறது.

ACTION சக்தி,புரதம்,கொழுப்பு,காபோவைதரேட்டு ஆகியவற்றுடன்,11 அத்தியாவசிய கனிப்பொருட்களையும்,13 அத்தியாவசிய விட்டமின்களையும் வழங்குகின்றது. பெறக்கூடியதாகவுள்ள கனிப்பொருட்களினுள் கல்சியம்,நாகம்,இரும்பு,ஆகியவை ACTION இன் போஷாக்கு பெறுமானத்தில் பெரும் பங்கு வகிக்கின்றன.

கல்சியம்

உடலின் பிரதான கனிப்பொருள் கல்சியம் ஆகும். இது உங்கள் பற்களையும் எலும்புகளையும் பலமாக வைத்திருப்பதில் பெரும் பங்காற்றுகின்றது. "ஒஸ்டியோபோரஸிஸ்" எனும் நோயை தடுப்பதற்கு இது அத்தியாவசியம் ஆகும். அங்கவீனம்,மன அழுத்தம்,முதிர்ச்சி ஆகியன கல்சியக் குறைபாடுகளுடன் தொடர்புபட்டவை.அண்மைய ஆய்வுகள் பழம்பமான சிதைவு நோய்கள்,ஒவ்வாமை,இதய நோய் ஆகியவற்றுடன் கல்சியம் குறைபாட்டினை தொடர்புபடுத்தி காட்டியுள்ளன.

நாகம் (ZINC)

வளர்ச்சி,கலப்பிரிவு,இனப்பெருக்கல் வளம்,நோய் எதிர்ப்பு சக்தி ஆகியவற்றிற்கு நாகம் மிக முக்கியமானது.காயங்களின் விரைவாக குணப்படுத்துதலையும்,சிகிச்சைக்கு பின்பான காலப்பகுதியில் நோய்களில் இருந்து விரைவான குணமடைதலையும் உறுதிப்படுத்துகின்றது.இது சுவை,மணம் ஆகியவற்றை உணரும் திறனை பேணுவதன் மூலம் பசியின்மையால் பாதிக்கப்பட்டோரின் பசியுணர்வை அதிகரிப்பதற்கும் உதவுகிறது. இது ஆரோக்கியமான சருமத்திற்கும்,தலைமுடி வளர்ச்சிக்கும் அவசியமான கனிப்பொருள் ஆகும்.

இரும்பு (IRON)

ஒட்சிசன் காவியான "ஹீமோகுளோபினின்" முக்கிய கூறு இரும்பாகும். இதன் பற்றாக்குறை கலங்களுக்கான ஒட்சிசன் விநியோகத்தை மட்டுப்படுத்துவதனால், மந்தமான தொழிற்பாட்டையும் களைப்பையும் ஏற்படுத்துகின்றது. சக்தி உற்பத்திக்கான சுரப்பிகளின் தொழிற்பாட்டிற்கு உறுதுணையாகின்றது. "ஒட்சியேற்றத்திற்கு" எதிரான தொழிற்பாட்டு தன்மையை கொண்டது.

சக்திவாய்ந்த நிரப்பீடனத்தொகுதிக்கு ஊக்கமளிக்கின்றது. இது மூளை அபிவிருத்திக்கு முக்கியமானதுடன்,ஞாபக சக்தியை அதிகரித்து,கற்பதற்கு உதவியளிக்கிறது.

பெறக்கூடியதாகவுள்ள உயிர்ச்சத்துக்களினுள் விற்றமின்B தொகுதி,விற்றமின்E,பயோட்டின் ஆகியவை மனித உடலின் வளர்ச்சிக்கும்,மேன்மைக்கும் அத்தியாவசியமானவை.

விற்றமின் B தொகுதி

B1 - இதய வீக்கம், கால் குரண்டல்,ஆகியவற்றை தடுப்பதுடன்,தசைநார்களை பலமடையச் செய்கின்றது.தாழ்வுணர்ச்சி, மனஅழுத்தம், அங்கவீனம் ஆகிய நிலைமைகளுக்கு அத்தியாவசியமாகும்.

B2 - செங்குருதி குழியங்களின் ஆக்கத்திற்கும் கொழுப்பு,புரதம்,காபோஹைதரேட்டு ஆகியவற்றின் அனுசேப தொழிற்பாட்டில் உதவுவதற்கும் அவசியமானது.சரும குறைபாடுகளையும்,ஒற்றைத்தலைவலியையும் குணமாக்க உதவுவதுடன்,விழி மென்சவ்வு உண்டாவதையும் தடுப்பதற்கு உதவுகிறது.

B3 - ( NIACINAMIDE ) -

கொலஸ்ரோலை குறைப்பதற்கு உதவுவதுடன்,சரும ஆரோக்கியத்தை மேம்படுத்துகின்றது. மன அழுத்தத்தில் இருந்து விடுபடவும் இதை உபயோகிக்கலாம்.

B5 - ( PANTOTHENIC ACID ) -

மாறாத களைப்பு,ஒற்றைத்தலைவலி, ஒவ்வாமை ஆகியவற்றிற்கு எதிராக தொழிற்படும். சக்தி உற்பத்திக்கு உதவும். ஆரோக்கியமான நரம்புத் தொகுதியை மேம்படுத்தும்.

B6 - உடலின் ஒவ்வொரு தொழிற்பாட்டிற்கும் தேவையானது. பலவேறு சுரப்பிகளினூடாகவும்,ஒத்திசைவாக செயற்படுகின்றது. செங்குருதிச் சிறு குழியங்களின் புரதங்கள், நரம்பியல் செயற்பாடுகள் ஆகியவற்றின் ஆக்கத்தில் பெரும்பங்காற்றுகின்றது.

B12 - இரத்தச் சோகையை தடுக்கின்றது. கர்ப்பத்தின் போது முக்கியமான உயிர்ச்சத்தாகவும் விளங்குகின்றது.

B9 - ( FOLIC ACID ) ஹீமோகுளோபினின் உருவாக்கத்திற்கு உடலினை இயலுமான தாக்குகின்றது. கர்ப்பத்தின் போது சிசுவின் வளர்ச்சிக்கு அத்தியவாசியமானது.

BIOTIN- ஆரோக்கியமான சருமத்திற்கும், தலைமுடிவளர்ச்சிக்கும் அத்தியாவசியமானது. முதுமைக்கு முன்பான நரையை தடுப்பதற்கும் உபயோகமாகின்றது. நரம்புத் தொகுதி,எலும்புகள்,தசைநார்கள் ஆகியவற்றை உருவாக்குவதற்கும் பேணுவதற்கும் உதவுகிறது. கொழுப்பின் அனுசேப தொழிற்பாட்டில் திறமையாக செயலாற்றுகிறது. இதனால் ஊளைச் சதையை குறைப்பதற்கு உதவுகிறது.

VITAMINE - E.

நரம்புத் தொகுதியின் தொழிற்பாடுகளை மேம்படுத்துவதில் நலன் மிக்கதாக கண்டறியப்பட்டுள்ளது. இதன் ஒட்சியேற்றத்திற்கு எதிரான செயற்படு தன்மை காரணமாக ஆரோக்கியமான சருமத்தையும்,தலைமுடியையும் மேம்படுத்த உதவுகின்றது.

சக்தி அடங்கியது - ( 27 அத்தியாவசிய கூறுகள் + Beta Carotene )

சீனி சேர்க்கப்படாதது.

இலங்கையர்களுக்கான சிபாரிசு செய்யப்பட்ட உணவு பழக்கள் தழுவி உருவாக்கப்பட்டது.

ACTION பானத்தை குளிராகவோ அன்றி சூடாகவோ நேரடியாக தயாரித்துக் கொள்ளலாம். நாளாந்தம் தேநீருடன் அல்லது பாலுடன் கலந்தும் பருகலாம்.

# அணுசக்தி ஒப்பந்தத்தால்
# பொலிவுறும் இந்தியாவும்
# நலிவுறும் பாகிஸ்தானும்

**எஸ்.சுரேந்திரஜித்**

இந்தியா - அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம் ஒருவழியாக நிறைவேறும் கட்டத்தை வந்தடைந்துள்ளது. காங்கிரஸ் அரசு தனது தலைக்கு உலை வைத்து இந்த ஒப்பந்தத்தை முன்னெடுத்துள்ளது.

இந்தியாவின் அரசுகள் நாடாளு மன்றத்தில் நம்பிக்கைத் தீர்மானத்தை இதற்கு முன்பும் எதிர்கொண்டிருக்கின்றன. ஆனால், இவ்வாறான ஒரு வெளிவிவகார கொள்கை என்ற ஒற்றை அம்சத்தை மட்டும் முன்னிறுத்தி எந்த அரசும் பந்தயம்


அப்துல்கலாம்

ஆடியதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. நம்பிக்கை வாக்கெடுப்பில் வென்றதை அடுத்து இந்திய அரசுக்கும் அந்நாட்டின் பெரும்பாலான பத்திரிகைகள் வாழ்த்துத்தெரிவித்தன. காரணம் இந்திய - அமெரிக்க நெருக்கம் காலத்தின் தேவை என்பதை பெரும்பான்மை இந்தியர்கள் உணர்ந்தமையே.

இந்தியாவானது சோவியத்துடன் நெருங்கி உறவாடிய பனிப்போர் யுகத்தில் கூட மேல்தர மற்றும் நடுத்தரவர்க்க இந்தியனின் கனவுத்தேசம் அமெரிக்காவாகவே இருந்தது; சோவியத்தாக இருக்கவேயில்லை.


சோம்நாத் சட்டர்ஜி

இன்றைய இஸ்லாமிய அடிப்படைவாத அச்சுறுத்தலின் பின்னணியில் இந்தியக்குடிமகனுக்கு அமெரிக்கா மீது இருக்கும் இந்த ஈர்ப்பு மேலும் அதிகரித்திருப்பதில் வியப்பேதுமில்லை.

மூத்தபத்திரிகையாளர் குல்தீப் நாயர் ''நம்பிக்கை வாக்கெடுப்பில் அரசு வென்றதால் தேசம் பிழைத்தது'' என எழுதியிருந்தார்.

''சபாநாயகர் சோம்நாத் சட்டர்ஜி மட்டும் பதவி விலகியிருந்தால் எல்லாமே தலைகீழாக மாறியிருக்கும்; இக்கட்டான தருணத்தில் கட்சியைத் தூக்கியெறிந்து விட்டு சோம்நாத் தேசநலனைக் காத்தார்'' எனவும் புகழாரம் இவரால் சூட்டப்பட்டுள்ளது.

இந்த எல்லாவிதமான பாராட்டும் சரியே என்பதை உணர்த்தும் சம்பவம் அடுத்தவாரமே நடந்தது. அதுதான் இந்த ஒப்பந்தத்துக்கு எதிராக பாகிஸ்தான் எழுப்பியிருக்கும் கூக்குரல். பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரஸா கிலானி அமெரிக்க விஜயம் ஒன்றையும் மேற்கொண்டுள்ளார். இந்தியா, பாகிஸ்தான் இரண்டுமே கிட்டத்தட்ட ஒரேகாலத்தில்தான் தமது முதல் அணுப்பரிசோதனையை நடத்தின. இப்போது இந்த ஒப்பந்தமூலம் இந்தியா ஒருபடி மேலே போய் விடும் என்ற நடுக்கம் பாகிஸ்தானுக்கு ஏற்பட்டுள்ளது. அந்த அச்சம் நியாயமானதே. மேலும்

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயக் கட்சி வேட்பாளர் ஒபாமாவின் அறிவித்தல் வேறு பாகிஸ்தானியர்கள் வயிற்றில் புளியைக் கரைத்திருக்கும். ஆப்கானிஸ்தானுடனான பாகிஸ்தானின் எல்லை மாகாணங்களில் தங்கிச் செயற்படும் தலிபான்களை ஒழிக்க பாகிஸ்தான் மீதும் தாக்குதல் நடத்த அஞ்சமாட்டோம் என்பதே அந்த எச்சரிக்கை. அமெரிக்காவில் குடியரசுக்கட்சி எட்டு ஆண்டுகள் தொடர்ந்து ஆட்சிசெய்து முடித்துவிட்ட நிலையில் ஒபாமாவின் வெற்றி வாய்ப்புகளும் பிரகாசமாகிவரும் தறுவாயில் இந்த அறிவிப்பு வந்துள்ளது.

ஆப்கானையும் ஈராக்கையும் அமெரிக்கா கைப்பற்றிய பிறகு அடுத்த இலக்கு ஈரானோ சிரியாவோ என்று உலகம் எதிர்பார்க்க, ஒபாமா சிறப்பான ஒரு இலக்கை சரியான முறையில் கண்டுபிடித்துள்ளார். அதுதான் பாகிஸ்தானாகும்.

தலிபான்களை, அமெரிக்காவை தாக்குவதை விடுத்து இந்தியாவை தாக்கும்படி தூண்டுவதே பாகிஸ்தானின் நோக்கம் என்பது எவரும் அறிந்த உண்மை. இதன் பொருட்டே பாகிஸ்தான் மண்ணிலுள்ள தலிபான்களை அந்நாடு போஷித்து வருவதும் தெரிந்ததே. ஆனால், சீனாவை தவிர்த்து வேறெந்த நாடும் இந்தியாவின் நலனுக்கு குறுக்கே வராது என்பதை பாகிஸ்தான் உணராததே பிரச்சினைகளுக்குக் காரணமாகும். ஈரான் கூட இந்தியாவை விரோதித்துக் கொள்ளத் தயாரில்லை. யதார்த்தம் இப்படியிருக்க

பாகிஸ்தான் இந்தியாவுடன் முட்டிமோதுவது சூரியனைப் பார்த்து விசர்நாய் குரைப்பதை ஒத்ததாகும்.

ஒன்பது வருடங்கட்கு முன் நடந்த கார்கில் யுத்தத்தில் அகில உலகமும் இந்தியாவின் பின்னால் அணியாகத் திரண்டது. அப்போதே நிலைமையை உணர்ந்து இந்தியாவிடம் சரணாகதி அடைந்திருந்தால் பாகிஸ்தானுக்கு நன்மையாக இருந்திருக்கும்.

மகாத்மாவினால் புடமிடப்பட்ட இந்தியாவின் ஜனநாயகம் அகில உலகின் அங்கீகாரத்தையும் வென்றுள்ளது. பாகிஸ்தானின் சர்வாதிகாரம் எவராலும் ஏற்கப்படவில்லை. அது மட்டுமன்றி இந்திய நாட்டுடன் நட்பு என்பது விலையுயர்ந்தது என்பதை எல்லா நாடுகளுமே ஏற்கின்றன. காரணம் இந்திய தேசம் வேறு எந்தத்தேசத்தினலும் முதுகிலும் குத்தியதுகிடையாது.

பாகிஸ்தான், பனிப்போர் காலத்தில் அமெரிக்காவின் செல்லப்பிள்ளையாக விளங்கியது. ஆனால், அதே அமெரிக்காவிற்கு தலிபான்கள் மூலம் பாகிஸ்தான் ஊறுவிளைவித்தது. பாகிஸ்தான் எப்போதுமே ஒரு நம்பத்தகுந்த கூட்டாளியல்ல. மறுபுறம் இந்தியா தன்னை நம்பிய நட்பு நாடுகளை ஒருபோதும் ஏமாற்றியதே இல்லை என்ற நற்பெயரை காண்டுள்ளது. ஒரு நாடாக பாகிஸ்தானின் அவலட்சணங்கள் ஒன்றல்ல, இரண்டல்ல, ஜனநாயகமின்மை, சர்வாதிகாரம், நேசநாடுகளுக்கு நம்பிக்கைத்துரோகம் செய்தல் என அப்பட்டியல் நீண்டு கொண்டு செல்கிறது.

இன்று இந்தியா அமெரிக்காவுடன் புதிய நட்பு பூண்டாலும் பழைய நண்பன் ரஷ்யாவுடன் இன்னும் இணக்கமாகவே நடந்து வருவதைக் குறிப்பிடவேண்டும். ஒரு நாடாக பாகிஸ்தானின் தப்புத் தாளங்கள் இவ்விதமிருக்க அந்நாட்டின் தனிப்பட்ட நபர்களின் திருகுதாளங்கள் சொல்லுந்தரமன்று.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் அணுகுண்டின் தந்தையர்கள் முஸ்லிம் விஞ்ஞானிகள்தான். ஆனால், இந்தியாவில் முஸ்லிம்கள் சிறுபான்மையினர். அவர்களின் உரிமை இந்திய அரசுகளால் மீறப்படுவதாக பாகிஸ்தான் அவப்பழி சுமத்தி இந்தியாவிற்கு எதிரான இஸ்லாமிய அடிப்படை வாதப்போருக்கு சகல ஆதரவும் வழங்கி வருகிறது. இப்படி இருக்க சிறுபான்மை முஸ்லிமான அப்துல் கலாம் தாய்நாட்டு விசுவாசத்தின் அதியுச்ச தன்மையை நிரூபித்தார். அதனால் நாட்டின் முதல் குடிமகன் என்ற அலங்காரத்தை இந்திய தேசம் அவருக்கு வழங்கியது. ஜனாதிபதி ஆசனத்தில் இருத்தி அழகு பார்த்தது. இது இந்திய அணுவிஞ்ஞானிக்கு கிடைத்த மகிமை.

மறுபுறம் பாகிஸ்தான் அணுகுண்டின் தந்தை இன்று சிறையில் கம்பி எண்ண வேண்டியவராக இருக்கிறார். தனது தாய்நாட்டுக்குத் துரோகம் செய்து அணுகுண்டு இரகசியத்தை வடகொரியாவுக்கு விற்ற குற்றத்தின் விலையே அது. அப்துல் காதிர் கான் என்ற இந்த விஞ்ஞானியைக் கொண்டு சகல பாகிஸ்தானியர்களையும் இலேசாக எடைபோட்டுவிடலாம். பணத்துக்காக பெற்ற தாயையும் பிறந்த பொன்னாட்டையும் காட்டிக்கொடுப்பவர்களே இவர்கள். அதேபோல அப்துல் கலாமை கொண்டு சகல இந்திய முஸ்லிம்களையும் எடைபோடலாம். இந்துவான இந்தியனைவிட முஸ்லிமான இந்தியன் அதிக தேசப்பற்றுடையவன் என்று கூடச் சொல்லமுடியும்.

நாட்டின் இராணுவ ரகசியத்தை பாதுகாக்க முஸ்லிமே ஆன அணுவிஞ்ஞானியை கூட நம்பி நடக்க முடியாத பரிதாப நிலையே இன்றைய பாகிஸ்தானின் இக்கட்டாகும்.

ஜனநாயக ரீதியில், இராணுவ ரீதியில், சர்வதேச உறவுகள் ரீதியில், பாகிஸ்தானின் கையாலாகாத்தனம் இதுவென்றால் பொருளாதாரத்தில் அதன் வங்குரோத்து நிலை இன்னும் கவலைக்குரியது. இந்திய தேசத்தின் தொழில் நுட்பம், பொருளாதாரம், உற்பத்தி என சகலதும் அசுர வேகத்தில் முன்னேறி வர பாகிஸ்தான் இந்த சகலதுறையிலும் பின்னடைந்து கொண்டே செல்வது தெரிந்ததே.

கேவலம் கிரிக்கெட்டில் கூட அந்நாட்டின் பெயர் சிதைந்து சின்னாபின்னமாகி கிடக்கிறது.


மன்மோகன் சிங்

இந்த வருடம் சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகள் பாகிஸ்தானில் நடத்தப்பட திட்டமிடப்பட்டிருந்தது. அந்நாட்டின் பாதுகாப்பு நிலை காரணமாக அவுஸ்திரேலியா, பிரிட்டன், நியூசிலாந்து உள்ளிட்ட நாடுகள் அங்கு விளையாட மறுப்பதால் சம்பியன்ஸ் கிண்ணப்போட்டி அங்கு நடத்தப்படாது போகலாம். மறுபுறம் சம்பியன்ஸ் கிண்ணத்தை தொடர்ந்து இந்தியாவில் மேற்கொள்ள திட்டமிடப்பட்ட டெஸ்ட் தொடரில் விளையாட அவுஸ்திரேலியா முடிவெடுத்துள்ளது. இத்தனைக்கும் பெங்களூர், அஹமதாபாத் என மாறி மாறி இந்தியாவில் தொடர் குண்டுகள் வெடித்த நிலையிலேயே இந்த அறிவிப்பு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்தியாவின் பாதுகாப்பு நிலை பாகிஸ்தான் போன்று ஆபத்தானதல்ல என ஒரு விளக்கத்தைக் கூட அவுஸ்திரேலியா தெரிவித்திருக்கிறது. அதாவது, இந்தியர்கள் புத்திசாலிகள்; பாகிஸ்தானிகள் போலன்றி சாமர்த்தியமாகச் செயற்பட்டு நிலைமையை கட்டுப்படுத்த தெரிந்தவர்கள் என்பதே இதன் அர்த்தம்.

இவ்வருடம் பெரும் பணமழை கொழித்த ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிகள் இந்தியாவில் ஜாம்ஜாம் என நடந்தபோது ஜெய்ப்பூரில் பாகிஸ்தான் தூண்டுதலில் குண்டுகள் வெடித்தன. அந்தோ பரிதாபம் பாகிஸ்தானின் நோக்கம் நிறைவேறவில்லை. போட்டிகள் சிறப்பாக நடந்து ஆவுஸ்திரேலியரான ஷேன்வோன் தலைமையிலான ஜெய்ப்பூர் அணியே கிண்ணத்தைத் தட்டியும் சென்றது. பல வெளிநாட்டு வீரர்களும் பங்கேற்று பெருமளவு வெளிநாட்டு ரசிகர்களும் வந்து, அந்நிய செலாவணி குவித்தது.


காதிர் கான்

பாகிஸ்தானால் இப்படி ஒரு போட்டியை நடத்துவதை கனவிலும் நினைக்கமுடியாது. அந்த நாட்டின் மற்றொரு திறமையான விளையாட்டான ஹொக்கியை வைத்துக் கூட அந்நாட்டினால் இவ்வாறு பன்னாட்டு வீரர்களை ஈர்த்து ஒரு போட்டியை நடத்தமுடியாது. இப்போது சம்பியன்ஸ் கிண்ணத்தினை நடத்த உதவும்படி இந்திய கிரிக்கெட் சபையிடம் பாகிஸ்தான் பிச்சை கேட்டுள்ளது.

உலகளாவிய கிரிக்கெட்டில் இந்திய கிரிக்கெட் சபையின் செல்வாக்கு இன்னதென்று எவருக்கும் தெரியும். இலங்கை கிரிக்கெட் சபை தலைவர் ரணதுங்க சபையின் நிதி நெருக்கடியை சமாளிக்க இந்திய சபையிடம் கடன் கேட்டுள்ளார். இங்கிலாந்தின் கவுண்டி கிரிக்கெட் போட்டிகளை அடுத்து அவுஸ்திரேலியா கூட நடத்தாத பன்னாட்டு வீரர்கள் கொண்ட போட்டியை நடத்தி இந்திய கிரிக்கெட் சபை சாதித்துள்ளது. கிரிக்கெட்டில்

(27ஆம் பக்கம் பார்க்க)

# நாராயணனுக்கு நேர்ந்த கதி!

## டாக்ஸியில் பயணித்தமை மட்டுமின்றி அதில் இருந்து இறங்கி நடு வீதியில் தனித்து நடந்து செல்ல வேண்டிய அவலமும்

வி. சிவராம்

'சார்க்' மாநாடு நடந்து முடிந்ததோ, என்னவோ அதையொட்டி எழுந்த 'நாராயண சர்ச்சை' மட்டும் இன்னும் ஒழிந்தபாடில்லை.

'இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்' என்ற பதவி இந்திய மத்திய அரசின் அமைச்சர் பதவிக்கு ஒப்பான இராஜதந்திர அந்தஸ்தையுடையதாகும்.

அந்தப் பதவியில் உள்ள எம்.கே. நாராயணனே இந்திய அரசின் சார்பில் - இந்தியப் பிரதமரின் சார்பில் - இந்தியப் பாதுகாப்பு விடயங்களைத் தீர்மானிப்பவர். அத்தகைய உயர் அந்தஸ்திலும், உயர்பாதுகாப்பு வழங்க வேண்டிய நிலையிலும் உள்ள ஒருவர், 'சார்க்' மாநாட்டின் ஆரம்ப நிகழ்வு முடிந்து - அந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளினின்றும் விலகி - 'டாக்ஸி' ஏறி, தாம் தங்கியிருந்த தாஜ் சமுத்திரா ஹோட்டலுக்கு - தலைநகரில் பல கிலோ மீற்றர்கள் பய்ணம் செய்து - வந்து சேர வேண்டியவரானார் என்ற செய்தி பலத்த அதிர்ச்சிகயையும் வாதப்பிரதிவாதங்களையும் கிளப்பியிருக்கின்றது.

இந்த சர்ச்சையில் விசேஷம் என்னவென்றால், இவ்விவகாரத்தில் முழு உண்மையும் வெளிவரவில்லை என்பதுதான். அரங்கேறிய அவலங்கள் முழுமையாக அம்பலமாகியிருக்குமானால் இந்த சர்ச்சை இன்னும் பூதாரமாகியிருக்கும்.

அன்றைய தினம் நாராயணன் டாக்ஸியில் மட்டும் பயணம் செய்யவில்லை. தாஜ் சமுத்திரா ஹோட்டலுக்குச் செல்ல 'டாக்ஸி' அனுமதிக்கப்படாததால் மெய்க்காவலர் எவருமின்றி தனித்து வீதியில் ஹோட்டலை நோக்கி நடந்து போகும் அநாதரவான - நிர்க்கதியான - நிலையில் விடப்பட்டார் என்ற தகவலை அறிய உங்களுக்கு அதிர்ச்சியாக இருக்கின்றதா? அதுதான் உண்மையில் நடந்தது.

அப்படி அரங்கேறிய உண்மைகளின் ஒரு பகுதியை இக்கட்டுரை அவிழ்த்து விடுகிறது.

'சார்க்' மாநாட்டில் பங்குபற்றும் இந்திய உயர் மட்டத்துக்கு கொழும்புப் பயணம் ஆபத்தானதாக இருக்கும் எனப் புதுடில்லி கருதியதால்தான் மாநாட்டுக்கு ஐந்து, ஆறு வாரங்களுக்கு முன்னரே இந்தியப் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கவனிப்பது உட்பட பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களுடன் ஓர் உயர் மட்டக் குழுவை இலங்கைக்கு அனுப்பியிருந்தது. அக்குழுவில் நாராயணனும் ஒருவர் என்பது தெரிந்ததே.

அக்குழுவின் வருகையுடன் இந்தியாவின் விசேட பாதுகாப்பு அணியைக் கொண்டு வருவது, இந்திய ஹெலிகள், வாகனங்கள், கப்பல்கள் போன்றவற்றைக் கொழும்புக்குத்

மாநாட்டு மண்டபத்தின் முன்புறம் பிரமுகர்கள் வந்திறங்கவும், புறப்படவும் இரு தளங்களில் தட்டுகள்.



தருவிப்பது முதலிய பல்வேறு முடிவுகள் எடுப்பட்டன. அவையெல்லாம் ஏற்கனவே வெளியான தகவல்கள். எனவே, அவற்றில் ஆழ இறங்காமல் மேற்கொண்டு பார்ப்போம்.

'சார்க்' மாநாட்டில் பங்குபற்றும் இந்திய உயர்மட்ட அணிக்கான பாதுகாப்புக்காக இந்தியப் படைகள் அந்த அணி தங்கியிருந்த தாஜ் ஹோட்டலைச் சுற்றி குவிக்கப்பட்டமையும் கொழும்புத் துறைமுகத்தில் இந்திய கண்காணிப்புப் போர்க் கப்பல்கள் நிறுத்தப்பட்டமையும், கட்டுநாயக்காவுக்கும் கொழும்புக்கும் இடையில் இந்திய ஹெலிகள் பறந்து திரிந்தமையும் கூட தெரிந்த சங்கதிகள்தான்.

'சார்க்' சமயத்தில் இந்திய உயர்மட்ட அணியின் நான்கு முக்கிய போக்குவரத்துப் பயணங்கள் குறித்து இலங்கை - இந்திய அதிகாரிகள் முன்னரே கூடி, விரிவாகப் பேசி முடிவு செய்திருந்தனர்.

அவை:-

1. தாஜ் சமுத்திரா ஹோட்டலில் இருந்து 'சார்க்' ஆரம்ப நிகழ்வுகளுக்காக பண்டார நாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்துக்கு சென்று திரும்புவது.

2. அன்று இரவு பொது விருந்துபசாரத்திற்குச் சென்று வருவது.

3. கோட்டே ஸ்ரீஜெயவர்த்தனபுர, நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் அடுத்த நாள் பகல் நடைபெறும் நிகழ்வுக்குச் சென்று திரும்புவது.

4.'சார்க்' இறுதி நிகழ்விற்குச் சென்று திரும்புவது.

இந்த நான்கில் முதலாவது விடயத்திலேயே விடயம் சிக்கலில் முடிந்தது.

ஓகஸ்ட் முதலாம் திகதி சனிக்கிழமை காலை 9.04 இலிருந்து 10.34 வரை இராகு காலம் என்பதால் மாநாட்டை இராகு காலம் முடிய ஆரம்பிப்பது என்று அரசுத் தலைமை முடிவு செய்திருந்தது என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

அதற்கேற்ப அந்த மாநாட்டு மண்டபத்துக்குள் பிரமுகர்களின் வருகை ஒழுங்கு செய்யப்பட்டது.

அழைக்கப்பட்ட ஏனையோர் 9 மணிக்கு முன்னர் ஆசனத்தில் அமருமாறு முற்கூட்டியே கேட்கப்பட்டனர்.

அதன் பின்னர் 9 மணி முதல் 9.30 மணி வரை பங்குபற்றும் நாடுகளின் வெளிவிவகாரச் செயலாளர்களும், 9.30 மணி முதல் 10.00 மணி வரை வெளிவிவகார அமைச்சர்களும், 10.00 மணி முதல் 10.30 மணி வரை நாடுகளின் தலைவர்களும் மண்டபத்திற்கு வந்து சேர்வார்கள் என்பது ஏற்பாடு.

இந்த ஒழுங்கில் இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகரை எந்த அணியின் சேர்ப்பது என முதலில் கேள்வி எழுந்தது.

வெளிவிவகார செயலாளர்கள் மேற்படி மாநாட்டுக்கு சுமார் ஒன்றரை மணி நேரம் முற்கூட்டியே வந்து காத்திருப்பார்கள் என்பதால், அப்படி நாராயணனைக் காக்க வைக்காமல் தவிர்ப்பதற்காகவும் -

அவரது பதவி அமைச்சர் அந்தஸ்துக்குரியது என்பதாலும் அவரை வெளிவிவகாரச் செயலாளர்களுடன் சேர்க்காமல், வெளிவிவகார அமைச்சர்களின் அணியில் சேர்க்க முடிவாயிற்று.

அதன்படி, இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி அன்று காலை தாஜ் சமுத்திர ஹோட்டலில் இருந்து புறப்பட்டு மாநாட்டு மண்டபத்துக்கு காலை 9.30 மணிக்கும் 10 மணிக்கும் இடையில் வந்து சேர்ந்தபோது அவரது வாகன அணியில் நாராயணனின் வாகனமும் இடம் பெற்றிருந்தது.

இந்திய வெளிவிவகாரச் செயலாளர் சிவ சங்கர் மேனனின் வாகன அணியில் நாராயணின் வாகனமும் அன்று மாநாட்டின் ஆரம்ப நிகழ்வுக்காக மண்டபத்தில் வந்தது எனக் கொழும்பு ஊடகங்களில் ஏலவே வெளியான செய்தி தவறாகும்.

அன்று மாநாட்டு மண்டபத்திற்கு வருகை தந்த வாகன அணிகளில் அந்தந்த நாடுகளின் வெளிவிவகாரச் செயலாளரோ, வெளிவிவகார அமைச்சரோ, நாட்டின் தலைவரோ பயணித்த வாகனங்கள் மட்டுமே மண்டபத்தின் முற்புறத்தில் மேற்புறப் படிகட்டுக்கு அருகே வர அனுமதிக்கப்பட்டன. வாகன அணியின் ஏனைய வாகனங்களில் வந்த அதிகாரிகளும் பிரமுகர்களும் மண்டப முற்புறத்தின் கீழ்ப்புறப் படிக்கட்டு அருகே இறங்கி, படிகட்டுகள் வழியே ஏறி மேலே மாநாட்டு மண்டபத்துக்குள் நுழைந்தனர். இதுதான் ஒழுங்கு முறை.

இந்த ஒழுங்கின்படி-

இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி வந்த வாகன அணியில் அவர் பயணித்த வாகனம் மட்டும் மண்டபத்தின் முற்புறத்தின் மேல்தட்டு படிக்கட்டுத் வரை செல்ல, அந்த வாகன அணியில் நாராயணனும் ஏனையோரும் வந்த வாகனங்கள் பிரிந்து முற்புறத்தில் கீழ்ப்படிக்கட்டுத் தட்டில் சென்று அங்கு அவர்களை இறக்கின.

இவ்வாறு இரண்டாகப் பிரிந்து பிரமுகர்களை இறக்கிய வாகனங்கள் பின்னர் வாகனத் தரிப்பிடத்தில் ஒன்றாகச் சேர்ந்து செல்லவோ ஒன்றாகச் சேர்ந்து தரிக்கவோ அனுமதிக்கப்படவில்லை. அங்கு கடமையிலிருந்த ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினருக்கு இது பற்றிய சரியான அறிவுறுத்தல்கள் கொடுக்கப்படாததால் இந்திய வெளிவிவகார அமைச்சரின் வாகனம் அதற்கான வாகனத் தரிப்புப் பகுதிக்கும் நாராணயனின் வாகனம் பிறிதொரு பகுதிக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

மாநாட்டின் ஆரம்ப நிகழ்வு முடிவுறும் சமயத்தில் இந்தியத் தூதரக அதிகாரி ஒருவர் இதனைக் கண்டுபிடித்து இந்திய வெளிவிவகார அமைச்சரின் வாகன அணிக்குள், நாராயணனின் வாகனத்தையும் சேர்ப்பதற்கு எடுத்த கடைசி நேரப் பகீரதப் பிரயத்தனம் பலிக்கவில்லை. வாகனத் தரிப்பிடப் பகுதியில் பொறுப்பாக இருந்த ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினருடன் வாய்த் தர்க்கம் வரைப் போயும் அவர் ஏச்சு வாங்கியதைத் தவிர வேறு பலன் அவருக்குக் கிட்டவில்லை.

மாநாட்டு மண்டபத்துக்குள் இருந்த உயரதிகாரிகள், தலைவர்கள் எல்லோரும் தங்களது கைத்தொலைபேசியை நிறுத்தி விட்டிருந்ததால் இந்த இந்தியத் தூதரக அதிகாரியாலும் அதற்கு மேற்கொண்டு எதுவும் செய்ய முடியவில்லை - கையைப் பிசைவதைத் தவிர.

இந்தச் சூழ்நிலையில்தான் மாநாடு முடிவுற்று ஒழுங்கு வரிசைப்படி பிரமுகர்கள் மண்டபத்தை விட்டு வெளியேறினர்.

முதலில் அரசுத் தலைவர்கள் புறப்பட்டனர். வந்த ஒழுங்கின்படி அவர்களுக்கான வாகனங்கள் மண்டப முகப்பில் மேற்படிக் கட்டுத் தளம் வரை வந்து அவர்களை ஏற்றிச் சென்றது.

அடுத்து வெளிவிவாகர அமைச்சர்களின் புறப்பாடு. இந்திய வெளிவிவாகர அமைச்சர் பிரணாப் முகர்ஜி தமது வாகனத்தில் ஏறுவதற்காக மேற்புறப் படிக்கட்டுத் தளத்துக்கு வரும்போது, அதே நேரத்தில் கீழ்ப்புறப் படிக்கட்டுத் தளத்துக்கு தமது வாகனமும் வரும் என எதிர்பார்த்து அந்த இடம் வரை இறங்கிப் போய் நின்றார் நாராயண[illegible]ர். மாநாட்டு மண்டபத்துக்கு வந்த ஒழுங்கின்படி இப்போது தம்மை அழைத்துச் செல்லவும் வாகனம் வரும் எனக் காத்திருந்த நாராயணனுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

பிரணாப் முகர்ஜியை ஏற்றிய வாகன அணி புறப்பட்ட பின்னரும் நாராயணனின் வாக[illegible]ம் வரவில்லை. பிரித்து வேறு எங்கோ நிறுத்தப்பட்ட அந்த வாகனம் அங்கேயே சிக்கிப் போய்விட்டது.

சுமார் பத்துப் பதினைந்து நிமிட நேரம் காத்துத் தவித்த எம்.கே.நாராயணனின் நிலையை அங்கு வந்த இரு பெண்கள் உட்பட மூன்று இந்தியப் பிரமுகர்கள் கண்டனர். அவர்களுள் ஒருவர் பட்டாக்சாரியா.



'சார்க்' மாநாட்டை ஒட்டிய நிகழ்ச்சிகளுக்கு வந்திருந்த அவர்களுக்கு ஹோட்டலின் டாக்ஸி ஒன்றை போக்குவரத்துக்கு மாநாட்டு ஏற்பாட்டுக் குழு வழங்கியிருந்தது.

தமது நாட்டின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் வாகனமின்றிப் பரிதவிப்பதைப் பார்த்த அவர்கள் தமது டாக்ஸியை அவருக்கு வழங்க முன் வந்தனர். ஆனாலும் தாம் வாகனத்தில் ஏறிக் கொண்டு, அம்மூவரையும் மாநாட்டு மண்டபத்தில் - நாட்டாற்றில் - பரிதவிக்கவிட - விரும்பாத நாராயணன் தம்மோடு அந்த டாக்ஸியில் வந்து தம்மை 'தாஜ் சமுத்திரா' ஹோட்டலில் இறக்கி விட்டுவிட்டு அவர்களை அவர்களது இடத்துக்குச் செல்லும்படி கேட்டுக் கொண்டார்.

இதுதான் இந்தக் கலாட்டாவின் ஆரம்ப'ஸீன்'. அடுத்த கட்டம் இன்னும் சுவாரசியமானது.

சரி, இலங்கையில் பாதுகாப்பு நிலைமை மோசம், இந்தியப் பிரதமர் இங்கு வருவதானால் இந்தியப் பாதுகாப்புப் படைகள் வரவேண்டும், இந்திய வாகனங்கள், ஹெலிகள் வரவேண்டும், இந்தியக் கண்காணிப்புக் கப்பல்கள் கொழும்பில் தரிக்க வேண்டும், கொழும்பின் கடல், வான் பிராந்தியங்களை இந்தியத் தரப்பு கண்காணித்து நோட்டமிட வேண்டும் என்றெல்லாம் கொழும்புக்கு முற்கூட்டியே வந்து வலியுறுத்தி நிபந்தனை விதித்தவர் இந்த நாராயணன்தான். அப்படிப்பட்டவர் - இந்தியத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் என்ற தமது உயர் பதவி குறித்துக் கூட சிந்திக்காமல் - இப்படிப் பாதுகாப்பின்றி டாக்ஸியில் தலைநகர் கொழும்பில் பயணிக்க முடிவெடுத்தமை ஏன்? ஒரு பத்துப் பதினைந்து நிமிட நேரம் காத்திருந்த அவருக்கு இன்னும் சற்று நேரம் காத்திருந்து, உரிய அதிகாரிகளைப் பிடித்துத் தொடர்பு கொண்டு பாதுகாப்பான வாகனம் ஒழுங்கு பண்ண முடியாமல் போய்விட்டதா என்று கேள்வி எழுவது நியாயமானதே.

அப்படி அவர் செய்யாதமைக்கு இரண்டு காரணங்கள் உள்ளன.

ஒன்று - அப்போது அவர் வசம் கைத்தொலைபேசி ஏதும் இருக்கவில்லை. 'சார்க்' ஆரம்ப விழாவுக்குக் கைத்தொலைபேசியைக் கொண்டு வந்து ஆரம்ப நிகழ்வு சமயம் அதில் அலட்டிக்கொள்ள அவர் விரும்பவில்லை போலும்.

அடுத்ததுதான் முக்கிய காரணம். வயிற்றில் தாங்க முடியாத பசி அவருக்குக் கிண்டிக் கொண்டிருந்தது.

காலை 9.30 மணிக்கு தாஜ் சமுத்திரா ஹோட்டலை விட்டுப் புறப்பட முன்னர் சாப்பிட்டதோடு சரி. அதன் பின்னர் சுமார் ஐந்து மணித்தியாலம் கடந்து, பிற்பகல் சுமார் 2.30 மணிக்கு ஆரம்ப நிகழ்வு முடிந்த பின்னரும் பச்சைத் தண்ணீரைத் தவிர அந்த வயோதிபப் பிரமுகருக்கு வேறு எதுவும் வாய் நனைக்கக் கிடைக்கவில்லை. அந்தப் பச்சைத் தண்ணீர் கூட, மாநாட்டு அரங்கில், ஆசனங்களுக்கு முன்னால் வரிசை மேசை ஒழுங்கில் அடுக்கப்பட்டிருந்த தண்ணீர் போத்தல்களி

(23ஆம் பக்கம் பார்க்க).

சுடர் ஒளி
ஓகஸ்ட் 10 - ஓகஸ்ட் 16, 2008
85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு-14 டெலிபோன் 0114734401—6 பாக்ஸ் 0114734404
E-mail: editorial@sudaroli.com

# வன்னிக் கொடூரம் குறித்து சர்வதேசம் மௌனம் ஏன்?

ஈழத்தமிழரின் பாரம்பரியத்தைப் பறைசாற்றி நிற்கும் வன்னி மண் இன்று பெரும் ஆக்கிரமிப்பு அச்சுறுத்தலை எதிர்கொண்டு நிற்கின்றது.

ஓயாதமழையாகப் பொழியும் விமானக் குண்டுவீச்சுகள், பல்குழல் ஏவுகணைகள், ஷெல்கள், பீரங்கிகளால் தமிழரின் வரலாற்று மண் மயான பூமியாக மாறிக்கொண்டிருக்கின்றது.

ஏ-9 பாதையை மூடி, வன்னிக்குள்ளும் தமிழ்மக்களை முடக்கிவைத்துக்கொண்டு, பெரும் எடுப்பில் கொடூரப் போரை முடுக்கிவிட்டபடி, பல லட்சக்கணக்கானோரை இடம்பெயர வைத்து, மனிதப் பேரவல நெருக்கடி ஒன்றை உருவாக்கியபடி, அந்தக் கொடூரத்துக்கு 'மனிதாபிமான நடவடிக்கை' என்ற பெயரிட்டு தமிழரின் நிலைமையை சிறுமைத்தனத்தோடு எள்ளி நகையாடும் விதத்தில் நடந்துகொள்கின்றது கொழும்பு.

இராணுவ அழுத்தம், பொருளாதார நெருக்குதல் என்ற இரண்டு முனைத் தாக்குதல் மூலம் வன்னியை அடிபணிய வைத்து, அதன்மூலம் ஈழத்தமிழினத்தையே அடிமைகொண்டுவிடத் துடியாய்த் துடிக்கின்றது கொழும்பு ஆட்சி. அதனையே வன்னி மண் மீதான ஆக்கிரமிப்பு வெறித்தீவிரம் வெளிப்படுத்தி நிற்கின்றது.

பல பக்கங்களிலும் மேற்கொள்ளப்படும் கண்மூடித்தனமான தாக்குதல்களினால் இன்று வன்னியில் ஏற்பட்டிருக்கும் பேரவலம், கொழும்பினால் மூடிமறைக்கப்பட்டுள்ளது - உலகத்தின் கண்களுக்குத் தெரியாமல்.

படை நடவடிக்கைகளினால் வீடு, வாசல்கள், உடைமைகளைத் துறந்து இடம்பெயர்ந்த லட்சத்துக்கும் அதிகமானோர் வன்னி எங்கும் மரங்களின் கீழும், காடுகளிலும், வெளிகளிலும், பாடசாலைகளிலும், அகதி முகாம்களிலும் தங்கி அல்லல்படுகின்றார்கள். போதிய குடிதண்ணீர், உணவு, பாதுகாப்பான இருப்பிடம் மற்றும் அடிப்படை சுகாதார வசதிகளின்றி அவர்கள் படும் துன்ப துயரங்கள் சொல்லிமாளாதவை.

இந்த மாபெரும் மனிதத் துன்பியல் கோரங்களும் கொடூரங்களும் முற்றாக மூடி மறைக்கப்பட்டு வெளியுலகுக்குத் தெரியாமல் ஒளிக்கப்பட்டிருக்கின்றமை குறித்து கத்தோலிக்க திருச்சபையின் நீதி, சமாதானத்துக்கான வன்னித் துணை ஆணைக்குழு விசனம் தெரிவித்திருக்கின்றது.

சோதனைக்கு மேல் சோதனையாக, வேதனைக்கு மேல் வேதனையாக, நமது வன்னித் தமிழ்ச் சகோதரர்கள் படும் கஷ்டம் அறிந்து தமிழுலகம் விக்கித்துப் பிரமித்துப் போய் அதிர்ந்து நிற்கின்றது.

ஆனால், தமிழர் தாயக மையமான வன்னி மண் மீது பேரழிவுப் போரை ஏவுதற்கான கட்டளையைப் பிறப்பித்த இலங்கையின் ஜனாதிபதியோ குதூகலமாக விடுமுறையைக் கழிப்பவராக - சீனாவில் ஒலிம்பிக் திருவிழாவில் பங்குகொண்டு மகிழ்ந்து திளைக்கின்றார்.

இனப்பிரச்சினை தொடர்பான தீர்வு விடயத்தில் பலாத்காரப் பிரயோகத்திலும் இராணுவ வழி அடக்குமுறை நடவடிக்கையில் தீர்க்கமாக உள்ள மஹிந்தரின் நிர்வாகம் தன்னுடைய சுயரூபத்தை - உண்மை முகத்தை - வன்னியை ரணகளமாக்குவதன் மூலம் வெளிப்படுத்திக் காட்டிக் கொண்டிருக்கின்றது.

மனிதாபிமானம், அடிப்படை மனித உரிமைகள், அடிப்படை வாழ்வியல் வசதிகளைப் பெறுவதற்கான உரிமைகள் பற்றியெல்லாம் அதிகம் பேசும் மேற்கு உலகம், வன்னி மண் மீது இலங்கை அரசு ஒருதலைப்பட்சமாகத் தொடுத்திருக்கும் கொடூரப்போர்வெறி நடவடிக்கைகளினால் ஏற்பட்டிருக்கும் மனிதப் பேரவலம் குறித்து அலட்டிக்கொள்ளாமல் - கண்டும் காணாமல் - அல்லது ஊன்றிக் கவனித்துக் கிரகிக்கும் சிரத்தையின்றி, விட்டேத்தியாக இருப்பது தமிழருக்கு பெரும் விசனத்தையும், சீற்றத்தையும், அதேநேரம் கவலையையும் தருவதாக உள்ளது.

இந்த மனிதப் பேரவலநிலை குறித்து சர்வதேசம் தனது கவனத்தைத் திருப்பவேண்டிய காலம் வந்துவிட்டது.

இன்னொரு டாபூர் கொடூரம் வன்னியில் உருவாகாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக சர்வதேசம் விரைந்து தலையிட்டு, நியாயம் செய்யவேண்டிய ஒருசூழல் உருவாகியிருக்கின்றது. சர்வதேச சமூகம் விழித்துக்கொள்ளுமா? ★

# புலிகள் அல்லாத மாற்றுத் தலைமையை ஊக்குவிப்பதே இந்தியாவின் திட்டம்

'சார்க்' மாநாட்டில் பங்குபற்றுவதற்காகக் கொழும்புக்கு வந்திருந்த இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கை ஏனைய கட்சித் தலைவர்களைப் போல தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களும் சந்தித்துப் பேசினர். அவருடன் படம் எடுத்துக்கொண்டனர். சந்திப்பு நேரம் சுமார் 15 நிமிடங்களுக்குக் குறைவானது என்றாலும் தமிழ்க் கூட்டமைப்பினர் தெரிவித்த கருத்துக்களை இந்தியப் பிரதமர் நன்கு செவிமடுத்தார். ஈழத்தமிழரின் பிரச்சினைகள் குறித்து மேலும் விரிவாகப் பேசுவதற்காக புதுடில்லிக்கு வாருங்கள் என்று அவர்களுக்கு இந்தியப் பிரதமர் அழைப்பும் கூட விடுத்தார் - அது வெறும் முகப் பேச்சுக்கான அழைப்பா அல்லது உண்மையில் விருப்புடன் விடுக்கப்பட்ட அழைப்பா என்பது இனிமேல் அத்தகைய ஒரு சந்திப்புக்கான வாய்ப்பு - சந்தர்ப்பம் - நிஜத்தில் நிகழும்போதுதான் கண்டுகொள்ள முடியும்.

இதேபோல, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் தலைமையில் அக்கட்சியின் உயர்குழுவும் இந்தியப் பிரதமரைக் கொழும்பில் சந்தித்தபோதும் ஈழத்தமிழர் பிரச்சினை குறித்து அங்கு பிரஸ்தாபிக்கப்பட்டதாக அறியவந்தது.



ஆறுமுகன் - மன்மோகன் சந்திப்பு

மலையகத் தமிழர்களின் பிரச்சினைகள், நெருக்கடிகள் குறித்து இந்தியப் பிரதமரிடம் எடுத்துரைத்த ஆறுமுகன் தொண்டமான், இறுதியாகப் புலிகள் விவகாரம் குறித்தும் குளறிப்பிட்டிருக்கின்றார்.

"இப்போதே இந்திய வம்சாவளியினரான மலையகத் தமிழர்களை கொழும்பின் சிங்கள அரசு மூன்றாந்தரப் பிரஜைகளாக நடத்துகின்றது.

வடக்கு - கிழக்கில் புலிகள் தோற்கடிக்கப்படுவார்களானால், இந்நாட்டில் ஒட்டுமொத்தத் தமிழ்பேசும் மக்களுக்கும் எச்சசொச்சமாக எஞ்சியிருக்கும் கொஞ்ச நஞ்ச மரியாதையையும் கூடப் போய்விடும். எங்களை இன்னும் மோசமாகவே - அடிமைகளாகவே - நடத்துவார்கள். ஆகவே, நாங்கள் தலைநிமிர்ந்து நிற்பதற்காவது புலிகள் பின்னடைவு கண்டுவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்" - என்ற சாரப்பட ஆறுமுகன் தொண்டமான் பக்கத்தில் கூறப்பட்ட கருத்துக்களையும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அமைதியாக செவிமடுத்தார் எனத் தெரிகின்றது.

எது, எப்படியிருந்தாலும், இலங்கைத் தமிழர் விவகாரத்தில் இந்தியத் தரப்பின் - குறிப்பாக புதுடில்லி மத்திய அரசின் போக்கில் - எந்த மாற்றமும் இல்லை என்பதே உள்வீட்டுத் தகவல்களாக இருக்கின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகளைப் புறமொதுக்கி நடக்கும் நிலைப்பாட்டிலிருந்து மன்மோகன் சிங் அரசும் சற்றும் விலகவே இல்லை என்கின்றன அந்த வட்டாரங்கள்.

புதுடில்லி ஆட்சிப்பீடத்தின் கடிவாளத்தைக் கையில் வைத்திருக்கும் சோனியா காந்தியுடன் இலங்கைத் தமிழர் விவகாரத்தை ஒட்டிப் புலிகளுக்குச் சார்பாக - பரிந்து - பேச யாரும் தயாரில்லை. உள்ளே அரசின் உயர்மட்டத் தலைவர்களுக்கோ, அதிகாரிகளுக்கோ, ராஜீவ் காந்தி படுகொலையால் விசனப்பட்டிருக்கும் அவரது துணைவியாருடன் புலிகளுக்காகப் பேசும் துணிச்சல் சிறிதும் கிடையாது.

போதாக்குறைக்கு இலங்கை விவகாரத்தை உளவுத்துறைத் தலைவர் என்ற பதவி உட்பட பல மட்டங்களில் இருந்து கடந்த நாற்பது ஆண்டுகாலம் கையாண்டு, இயல்பாகவே புலி எதிர்ப்புப் போக்கில் ஊறிப்போன எம்.கே. நாராயணனின் கைகளில்தான் இன்று தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பதவியும் அதிகாரமும் வேறு சிக்கிக்கொண்டுள்ளன.

இந்நிலையில் புலிகளுக்கும் அவர்களின் தலைமையிலான ஈழத்தமிழர்களின் நியாயமான - நீதியான - விடுதலைப் போராட்டத்துக்கும் ஆதரவு தரும் பேச்சுக்கே புதுடில்லியில் இடமில்லை என்கின்றன காங்கிரஸ் அரசுடன் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள்.

"புலிகளின் தலைமை வலுவிழந்து, வன்னியில் அவர்களின் அதிகாரக் கட்டமைப்பு சீர்குலைவது குறித்து புதுடில்லிக்குக் கவலையில்லை. அப்படி நடந்தால் நல்லது எனப் பார்த்திருக்கவே விரும்புகின்றது புதுடில்லி. புலிகள் நலிவுற்று ஈழத் தமிழர்களுக்கு மாற்று அரசியல் தலைமை ஏதும் வருமானால் அதனுடன் கூடச் சேர்ந்து கருமமாற்றி, தமிழர்களுக்கு ஏதேனும் பண்ணலாமா என்று புதுடில்லி பார்க்கின்றதே தவிர, புலிகளுடன் உறவாடும் எண்ணமே அதற்கு அடியோடு இல்லை. ஆகவே, இன்றைய நிலையில் ஈழத் தமிழர் தாயக நிலைமை குறித்து புதுடில்லியிடம் அதிகம் எதிர்பார்க்காதீர்கள். உங்களின் நியாயமான போராட்டத்துக்கு புதுடில்லியின் உதவி கிட்டும் என்று நீங்கள் காத்திருப்பதில் - பார்த்திருப்பதில் - அர்த்தமேயில்லை என்றே எமக்குப்படுகின்றது. இப்போதைய நிலையில் - இந்த அரசு புதுடில்லியில் நீடிக்கும் சூழலில் - இந்தியாவின் உபகாரத்தை எதிர்பார்த்திருப்பதைவிட அதனை உபத்திரவம் செய்யாமலாவது இருக்கும்படி பார்த்துக் கொள்வதுதான் நல்லது. அதற்குத் தான் முதலில் தமிழ்த் தலைவர்கள் முயற்சிக்க வேண்டும்" என்று புதுடில்லி அரசுடன் இலங்கை விவகாரத்தை ஒட்டி நெருங்கிப் பழகும் தரப்புகள் கூறுகின்றன.

எது, எப்படியென்றாலும் தற்போதைய மன்மோகன் சிங் அரசின் பதவிக்காலம் ஆகக் கூடியது இன்னும் ஒன்பது மாதம்தான். அதற்குப்பின் பொதுத் தேர்தலும் புதிய அரசும் வரும்.

ஆனால், தற்போதைய காங்கிரஸ் அரசே பொதுத் தேர்தலுக்குப் பின்னரும் ஆட்சிக்கு

## அதிரடி ரங்கு

வருமா அல்லது பாரதீய ஜனதாக் கட்சி அதிகாரத்தைப் பிடிக்குமா என்ற கேள்வி எழுகின்றது.

புலிகளின் தமது அதிகாரப் பிடியையும் போராட்ட வலுவையும் வெற்றிகாரமாகத் தக்க வைத்து -

அடுத்த வருடத்திலாவது புதுடில்லியில் பாரதீய ஜனதாக் கட்சித் தலைமையிலான அரசு பதவிக்கு வருமானால் -

களநிலை யதார்த்தங்கள் புலிகளுக்கு - தமிழருக்கு - சார்பான திருப்பத்தை எடுப்பதற்கு வாய்ப்பாக இருப்பதையும் அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டத் தவறவில்லை. ஆனால், அப்படியெல்லாம் நடக்குமா என்பதே கேள்வி.

அதுவரை, இலங்கை விடயத்தில், உரிமைகளுக்காகப் போராடும் ஈழத் தமிழர் விவகாரத்தில், 'உபகாரம் செய்யாவிட்டாலும் உபத்திரவம் செய்யாமலாவது இருக்கும்படி' புதுடில்லியைக் கேட்டுக் கொள்வதே - பார்த்துக் கொள்வதே - தமிழர்களுக்கு நல்லது என்பது அந்த வட்டாரங்களின் நிலைப்பாடு.

தங்களுடைய குறுகிய அரசியல் இலாபங்களுக்காகவும், அதிகாரப் போட்டிக்காகவும் ஈழத் தமிழர் போராட்டத்தைப் புறமொதுக்கி நடக்கும் தமிழ் நாட்டு அரசியல் தலைமைத்துவங்களாலும் இன்றைய நிலையில் புதுடில்லி அதிகார வர்க்கத்தை இவ்விடயத்தில் வழிக்குக் கொண்டு வர முடியாது என்பதும் ஓரளவுக்குத் திண்ணம்.

அதேசமயம், புலிகள் அல்லாத மாற்றுத் தலைமை ஒன்று ஈழத் தமிழர்களுக்கு வரும்போது அதன் மூலம் விடயங்களைக் கையாளலாம் என்று 'இலவு காத்த கிளி' ஆகப் பார்த்திருக்கும் புதுடில்லியும் கடைசியில் ஏமாற்றத்தான் போகின்றது. ★

# தாமிரபரணி ஆறும் தமிழக மின்சாரமும்

கடந்த மூன்று ஆண்டுகளாக இந்தியத் துணைத் தூதராகக் கடமையாற்றிய ஏ. மாணிக்கம் இடம் மாற்றம் பெற்று புதுடில்லி செல்கிறார்.

ஆளும் தரப்பினர், அமைச்சர்கள், ஐ.தே.க., இ.தொ.கா. என்று பல தரப்பினரும் மாணிக்கத்துக்கு பிரியாவிடை விருந்துகளை வரிசையாக வழங்கி வந்தனர். அந்த வரிசையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடத்திய இரவு விருந்துபசாரம் அண்மையில் கொழும்பு ரேணுகா ஹோட்டலில் இடம் பெற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பதினான்கு எம். பிக்கள் கலந்து கொண்டனர். அதில் கருத்து வெளியிட்ட மாவை சேனாதிராசா எம்.பி., மாணிக்கத்தின் சொந்த இடமான திருநெல்வேலிப் பக்கத்தை சிலாகித்துப் பேசினார்.

"கேரள எல்லையில் தாமிரபரணி ஊற்றெடுக்கும் பிரதேசத்தில் அம்பாசமுத்திரத்திற்கு அருகே இவரது தாய்மண் உள்ளது. அந்தத் தாமிரபரணி, முற்காலத்தில் - இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கடல் ஆழம் குறைந்து சிறிய நீர் இணைப்பாக இருந்தபோது - அது உற்பத்தியாகிய இடத்திலிருந்து அந்த நன்னீரோட்டம் திருநெல்வேலி, திருச்செந்தூர் போன்ற இடங்களைத் தாண்டி, இந்தியக் கரையை மேவி, இலங்கையின் மன்னாருக்கு அருகே திருக்கேதீஸ்வரத்தின் பாலாவியில் வந்து மோதியபடி இருந்ததாம். இதனை நிரூபிக்கும் தொல்லியல் ஆய்வுச் சான்று நூல்கள் உள்ளன. தாமிரபரணி ஆறு போல மாணிக்கமும் அங்கிருந்து புறப்பட்டு இங்கு வந்து இலங்கையில் உயர் சேவையாற்றியிருக்கின்றார்" - என்ற சாரப்பட தாமிரபரணியின் சிறப்புடன் ஒப்பிட்டு மாணிக்கத்தைப் பாராட்டினார் மாவை.

இத்தகைய தனது ஊர்ச் சிறப்பை மாணிக்கம் தமது கொழும்பு ஊடகவியலாளர் நண்பர்களுடன் பின்னர் நினைவு கூர்ந்த போது அவர்களுள் ஒருவர் இப்படிக் கருத்து வெளியிட்டார்.

"மாவை சொன்னவை சரிதான். உங்களது தமிழகத்தின் தாமிரபரணி ஆறு மன்னாருக்கு வந்தமைபோல, இலங்கைக்கு கடலடிக் கேபிள் மூலம் தமிழக மின்சாரத்தை மன்னாருக்கு எடுத்து வரும் உங்களின் திட்டமும் அமையப் போகின்றது" - என்றார் அந்த நண்பர்.

இலங்கைக்கு கடலடி மின்கேபிள் மூலம் தமிழ்நாட்டிலிருந்து மின்சாரத்தை விநியோகிக்கும் திட்டம் பற்றிய எண்ணக்கருவின் பிரம்மாவே துணைத் தூதர் மாணிக்கம் என்பதைக் கருத்தில் வைத்தே அந்த ஊடக நண்பர் அப்படிக் கூறினார்.

"மின் விநியோகம் சரிதான். தாமிரபரணி ஆற்றுக்கு நேர்ந்த கதி மாதிரி இதுவும் மன்னாருக்கு வராமல் இந்தியக்கரையோடு நின்று விடக் கூடாது. இங்குள்ளோருக்கு (இலங்கைத் தரப்புக்கு) 'ஷொக்' அடிப்பதாகவும் இருக்கக்கூடாது" - என்றார் மற்றொரு ஊடக நண்பர்.

"இங்குள்ளோர் விடயத்தைச் சரியாகக் கையாளும் வரை அந்த மின் விநியோகத் திட்டம் 'ஷொக்' அடிக்காது." - என்று வெடி வைத்துப் பூடகமாகப் பேசி ஒரு சிரிப்பை உதிர்த்தார் மாணிக்கம்.


# கெட்ட காலம் கழிக்க ஒலிம்பிக் நல்ல சாட்டு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சீனாவில் பீஜிங்கில் நடைபெறும் ஒலிம்பிக் திருவிழாவைக் கண்டுகளிக்க தம்பதி சமேதராய் அங்கு போயுள்ளார். விளையாட்டின் மீது - சர்வதேச புகழ்பெற்ற ஒலிம்பிக் மீது - அவருக்கு இவ்வளவு ஈடுபாடா என்று கேட்டபோது சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் வேறு கதை அவிழ்த்து விடுகின்றன.

சோதிடக்காரர்களின் ஆலோசனை கருதியே நாட்டுக்கு வெளியே தங்கியிருக்கிறாராம் ஜனாதிபதி. அப்படித் தங்கியிருப்பதற்கு நல்ல சாட்டு ஒலிம்பிக் என்கின்றன அந்த வட்டாரங்கள்.

ஆடி முடியும் வரை ஜனாதிபதி நாட்டில் இல்லாமல் இருப்பது அவருக்கு நல்லது என்று சோதிடர்கள் கூறியிருக்கிறார்கள். அதனால் நட்பு நாடான சீனாவிலிருந்து ஒலிம்பிக் அழைப்பு ஒன்றைப் பெற்றுக்கொண்டு அங்கு காலம் கழிக்கின்றார் ஜனாதிபதி என்கின்றன தென்னிலங்கையில் சில வட்டாரங்கள்.

# பொத்திவைத்த உண்மைகள் பொங்கி வெளிப்படுகின்றன




ஆனந்த விகடனில் வெளிவந்த தலைப்பு

தானாடாவிட்டாலும் தன் தசை ஆடும் என்பதைத் தமிழகத்து மக்கள் மீண்டுமொரு முறை நிரூபித்திருக்கிறார்கள். முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலைச் சம்பவத்திற்குப் பிறகு, தமிழ்நாட்டில் புலிகளுக்கும், ஈழத்தமிழர்களுக்குமான ஆதரவு அற்றுப் போய்விட்டது என இது நாள்வரையும் பிதற்றிக் கொண்டு திரிந்தவர்களுக்கெல்லாம் மிகப்பெரிய 'வாய்ப்பூட்டு' இடப்பட்டிருக்கின்றது. தமிழகத்தின் முன்னணி வாராந்தச் சஞ்சிகையான 'ஆனந்தவிகடன்' விடுதலைப் புலிகளுக்கு தமிழக மக்களின் ஆதரவு எப்படியிருக்கிறது என்பதை அறிவதற்காக நடத்திய கருத்துக் கணிப்பின் மூலமே தமிழக மக்களின் உள்ளக்கிடக்கைகள் பட்டவர்த்தனமாக்கப்பட்டுள்ளன.

தமிழக இதழியல் துறையைப் பொறுத்தவரை 'ஆனந்தவிகடன்' ஓர் அசைவியக்க சக்தியாகக் கருதப்படுகின்றது. விற்பனை ரீதியாகவும், உள்ளடக்க ரீதியாகவும் ஆனந்தவிகடனே தமிழக வாரச்சஞ்சிகைகளில் முதலிடத்தில் நிற்கின்றது. தமிழகம் மட்டுமல்லாது, உலகெங்கும் பரந்தளவான வாசகர்களைக் கொண்ட ஆனந்த விகடன் சர்சைக்குரிய சில விடயங்கள் தொடர்பாக நடத்துகின்ற கருத்துக் கணிப்புகள் முக்கியத்துவம் பெற்றவையாக உள்ளன. ஆட்சி மாற்றங்கள் தொடர்பாகவும், சில முக்கிய பிரச்சினைகள் தொடர்பாகவும், ஆனந்தவிகடன் கருத்துக்கணிப்பு வடிவில் தெரிவித்திருந்த ஆருடங்களை காலம் நிஜமாக்கியிருக்கின்றது. அதனால், விகடன் நடத்துகின்ற கருத்துக்கணிப்புகள் வாசகர்களிடத்தே மாத்திரமன்றி, தமிழக, இந்திய அரசியல்வாதிகளிடையேயும் தாக்குதிறன் கொண்ட சக்தியாக விளங்குகின்றன.

அவ்வகையில் இம்முறை கருத்துக் கணிப்புக்காக 'விடுதலைப் புலிகளுக்கும், தமிழீழம் அமைவதற்கும் தமிழக மக்களின் ஆதரவு நிலை எப்படியிருக்கின்றது?' என்ற விடயத்தை ஆனந்தவிகடன் கையிலெடுத்துக் கொண்டது. அதன் முடிவுகள் தாழ்வுற்று, வறுமை மிஞ்சி, விடுதலை தவறிக்கெட்டு நிற்கின்ற ஈழத்தமிழர்களின் வயிற்றிலே பாலை வார்த்துள்ளது.

கருத்துக்கணிப்பிற் கலந்துகொண்டவர்களில் 54.25 வீதமானோர் தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரித்துள்ளனர். அதேசமயம் ஈழத் தமிழர்களின் இன்னலுக்கு தமிழீழமே ஒரே தீர்வாக முடியுமென 55.44 வீதமானோரும் தம் கருத்துக்களைப் பதிவுசெய்துள்ளனர்.

தற்போது தமிழகத்தில் ஆட்சியிலுள்ள தி.மு.க. விடுதலைப்புலிகளை ஆதரிக்க வேண்டுமென 47.48 வீதத்தினரும், தரைப்படை, விமானப்படை, கடற்படையென விடுதலைப்புலிகள் வளர்ச்சியடைந்தது பெருமைக்குரிய விடயமென 45.24 வீதத்தினரும், இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா தலையிட்டு, தீர்வொன்றை ஏற்படுத்த வேண்டுமென 62.59 வீதத்தினரும் தம் கருத்துக்களைத் தமிழ்த் தேசியத்துக்கு ஆதரவான வகையிலே வெளியிட்டுள்ளனர். எனினும், ராஜீவ் கொலை வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனைக் கைது செய்ய வேண்டுமென 43.02 வீதத்தினரும் மாற்றுக்கருத்துடைய தமிழ்ப்பிரமுகர்களை விடு தலைப் புலிகள் கொலை செய்வது ஏற்றுக்கொள்ளப்பட முடியாததென 43.14 வீதத்தினரும் தெரிவித்துள்ளனர்.

இணையவழி மூலமாகவும், தபால் மூலமாகவும் நடத்தப்பட்ட இக்கருத்துக் கணிப் பில் பங்கெடுத்த வாசகர்களின் வெளிப்பாட்டினை கடந்தவாரம் ஆனந்தவிகடன் வெளியிட்டிருந்தது. கூடவே கருத்துக்கணிப்பின் சாராம்சத்தினை ஒட்டியதான விளக்கக் கட்டுரை ஒன்றினையும் அது இணைத்திருந்தது. 'ஓயாத அலையாய் ஈழத்தமிழரின் உரிமைக்காய் உறுமுகின்ற புலிகள்' என்ற புகழ்மாலையையும் விகடன் சூட்டியிருந்தது.

இந்தக் கருத்துக்கணிப்பினை தனியே ஒரு சஞ்சிகையின் வாசகர்களின் குரலாக மட்டுமே எடுத்துக் கொள்ளமுடியாது. ஏனெனில் கருத்துக்கணிப்பில் வாசகர்கள் தவிர்ந்த ஏனைய மக்களும் உள்வாங்கப்பட்டிருந்தனர். எனவே, இந்தக் கருத்துக்கணிப்பின் முடிவுகளை தமிழக மக்களின் அடிமனதில் உறங்கிக் கிடந்த உண்மைக் குரலின் உச்சக்கட்ட வெளிப்பாடெனக் கொள்வதிற் தவறில்லை.

விடுதலைப் போராட்டம் முளைகொண்ட காலப்பகுதியிலிருந்து, இந்திய அமைதிப் படை ஈழத்தைக் கடித்துக் குதறிய காலப்பகுதி வரை ஈழத்தமிழருக்கு ஆதரவான செயற்பாட்டினையே தமிழகமக்களும் அரசியல் வாதிகளும் மேற்கொண்டு வந்தனர். தமிழகத்தின் அரவணைப்புத் தந்த தெம்பினால்தான் ஈழத்தமிழர்கள் உறுதியோடும், நம்பிக்கையோடும் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க முடிந்தது. ஆனாலும் ராஜீவ் காந்தி, தேர்தல் பிரசாரத்துக்காக தமிழகம் வந்திருந்தபோது இனந்தெரியாதோரால்கொலையுண்டமையைத் தொடர்ந்து நிலைமை தலைகீழாக மாறிப் போனது.

ராஜீவ் காந்தி மீதான கொலைப்பழி எவ்வித தர்க்கரீதியான விவாதங்களுமின்றி விடுதலைப் புலிகளின் மீது சுமத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவானோரையெல்லாம் விழுந்தடித்துக்கொண்டு கைது செய்யும் படலம் அரங்கேறியது. சர்வதேச பயங்கரவாதிகள் என்னும் போர்வை புலிகள் மீது போர்க்கப்பட்டு தடை செய்யப்பட்ட இயக்கமாக, அவர்கள் மாற்றப்பட்டனர். அத்தோடு இரத்த வெறி பிடித்து அலையும் காட்டேறிகளாய் புலிகளை உருவகப்படுத்தும் பிரசாரங்கள் முழுமூச்சோடு முன்னெடுக்கப்பட்டன. இந்தக் கெடுபிடிகள், பிரசாரங்கள் என்பனவெல்லாம் சினிமாவை வாழ்வாகவே நம்பும் தமிழக மக்களிடையே மனமாற்றத்தை உண்டுபண்ணின. தமிழகத்துக்கும், ஈழத்துக்குமிடையேயான தொப்புள்கொடி மெல்ல மெல்லப் பிரியத் தொடங்கியது.

தமிழக ஊடகங்களும் தமிழக மக்களின் மனமாற்றத்திற்கேற்ப தமிழர் விடுதலைப் போராட்டம் தொடர்பான விஷ வித்துக்களை ஊன்றி, மக்கள் மனதில் அவற்றை விருட்சமாக்கின. ஒரேமொழி, ஒரே பண்பாடு எனத் தம்மோடு ஒன்றுபட்டு நின்ற தமிழக மக்களாலேயே கைவிடப்பட்ட ஈழத்தமிழர்கள் தமிழகத்தவரின் எதிரிகளானார்கள். எனினும் பழ. நெடுமாறன், சுப. வீரபாண்டியன், வைகோ, திருமாவளவன் போன்ற தலைவர்கள் தொடர்ந்தும் ஈழத்தமிழர்க்காய் குரல் கொடுத்தே வந்தனர். இவர்களின் குரல் நாணை அறுப்பதற்கு 'தடா' சட்டம் முதல் 'பொடா' சட்டம் வரையிலான கத்திகளைக் காட்டி மத்திய அரசு மிரட்டிய போதும் இவர்கள் பணியவேயில்லை. ஈழத்தமிழர்களின் உண்மை நிலையை உரைப்பதிலேயே இவர்கள் குறியாய் இருந்தார்கள்.

தமிழக மக்களிடையே விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவான எண்ண அலைகளைத் தோற்றுவிப்பதில் பிரதான செயற்பாட்டாளராக விளங்கியது இலங்கைக் கடற்படைதான். இந்திய - இலங்கை கடற்பரப்பிலே மீன்பிடிக்கச் செல்கின்ற தமிழக மீனவர்கள் மீது தன்னுடைய வேட்டைத்திறனைக் காட்ட முனைந்தது இலங்கைக் கடற்படை. நூற்றுக்கணக்கான மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் கொலை செய்யப்பட்டனர்; அங்கவீனர்களாக்கப்பட்டனர். மீனவர்களின் வலைகள், படகுகள் சேதமாக்கப்பட்டன. இவையெல்லாம் இலங்கைக் கடற்படையினர் மீதான வெறுப்புணர்வையும், அவர்களுக்கெதிராகச் செயற்படுகின்ற புலிகள் மீதான பரிவினையையும் வெகு வேகமாக வளர்த்தன. இவ்வாறு புலிகளுக்கு ஆதரவான பிரசாரத்தை தன்னுடைய கொலைக்கலாச்சாரத்தினூடாக இலங்கைக் கடற்படை வளர்த்தெடுக்க, மறபுறத்தே ஈழ விடுதலை விரும்பிகளின் தொடர்ச்சியான செயற்பாடுகளும் தமிழக மக்களிடையே ஈழ ஆதரவுநிலையை மீண்டும் தோற்றம் பெற வைத்தன. ஆனாலும், அவற்றை வெளிப்படையாக்குவதன் மூலம் சிக்கல்களை எதிர்கொள்ள நேரிடுமென்ற காரணத்தால் தமது உள்ளத்திலேயே பூட்டி வைத்திருந்தனர். அவர்கள் தங்களுடைய அபிலாஷைகளை வெளிப்படுத்துவதற்கான திறவுகோலாக ஆனந்தவிகடனின் கருத்துக் கணிப்பு அமைய, மடை திறந்த வெள்ளமாய் தமது உள்ளத்து உண்மைகளை உரைத்துள்ளனர்.

சோழியன் குடுமி சும்மா ஆடாது. விகடன் குழுமம் இம்முறை விடுதலைப் புலிகள் தொடர்பான விடயத்தை கருத்துக் கணிப்பிற்கு எடுத்துக்கொண்டது வெறுமனே பரபரப்பான செய்திக்காக மட்டுமல்ல. தமிழக மக்கள் மனதிலுள்ள எண்ணங்களை நாடி பிடித்தறிந்து, அவற்றுக்குத் தீனி போடும் வகையிலான உள்ளடக்கங்களை வழங்குவதனூடாக தமது சஞ்சிகையின் விற்பனையை சில மடங்குகளாக எகிற வைப்பதற்கே விகடன் கருத்துக்கணிப்புகளை நடத்தி வருகின்றது. தற்போதைய கருத்துக் கணிப்பில் தமிழக மக்கள் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான எண்ணங்களைக் கொண்டிருப்பது தெரியவந்துள்ளதால், இனிவரும் காலங்களில் விகடனில் தமிழ்த்தேசியப் போராட்டத்துக்கு ஆதரவான உள்ளடக்கங்கள் அதிகளவில் இடம்பெறும். இது விகடன் சஞ்சிகையில் மட்டுமல்லாது ஏனைய தமிழக வார சஞ்சிகைகளிலும் இடம்பெறப்போகின்றது. ஏனெனில், விகடனின் உள்ளடக்க விடயங்களைக் 'கொப்பியடித்தே' தமது விற்பனைத் தளங்களை விஸ்தரிக்கும் பண்பு தமிழகத்தின் ஏனைய சஞ்சிகைகளின் நிலைப்பாடாக இருந்து வருகின்றது. எனவே, தமிழக சஞ்சிகைகள் தமிழர் விடுதலைப் போராட்டத்துக்கான ஆதரவுக்குரலினை பரந்தளவில் எழுப்பும்போது அது தமிழகத்தில் மிகப்பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தும்.

தமிழக மக்கள் விடுதலைப் புலிகளை வெறுக்கின்றார்கள் என்ற மாயைக்குள் சிக்கியதால் தமது ஆட்சிக்கட்டிலைக் காப்பாற்றுவதற்காக ஈழத்தமிழருக்கு எதிரான நிலைப்பாட்டினை எடுத்துள்ள கட்சிகளெல்லாம் தமது நிலையை மீள்பரிசீலனை செய்யவேண்டியிருக்கும். குறிப்பாகமதில்மேல் பூனையாய் தலையை மூடிக்கொண்டிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகம், தமிழர் நலனுக்காக இல்லாவிட்டாலும், ஆட்சிக்கட்டிலைத் தொடர்ந்தும் தக்க வைப்பதற்காகவேனும் ஈழத்தமிழருக்கு ஆதரவான சில காத்திரமான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். ஈழத்தமிழர் பிரச்சினையில் இந்திய மத்திய அரசைத் தலையிடக் கோருகின்ற நெருக்குதல்களை ஒப்புக்காவது கொடுக்க வேண்டியிருக்கும். இவையெல்லாம் இந்திய அரசாங்கம் இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் கரிசனையோடு நடக்க வேண்டிய கட்டாயத்தை உண்டுபண்ணும். இலங்கைக்கான இராணுவத் தளபாட உதவிகள், இராணுவத்தினருக்கான பயிற்சிகள் என்பவற்றை நிறுத்த வேண்டிய சூழமைவு உருவாகும். இவ்வாறான சாதகமான பின்விளைவுகள் விகடன் நடத்திய கருத்துக்கணிப்புகளால் நிகழக்கூடுமென்ற நம்பிக்கையில்தான் விகடன் வாசகர்களுக்கு விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் தன்னுடைய நன்றிகளைத் தெரிவித்துள்ளார். "விடுதலைப்புலிகளின் தலைவரை ராஜீவ் கொலை வழக்கிற்காக கைதுசெய்ய வேண்டுமென்ற தமிழக மக்களின் மனோநிலையும் விரைவில் மாற்றமடையும்" எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

விகடனின் கருத்துக்கணிப்பு வெளிவந்து சூடு அடங்குவதற்குள், ஈழத்தமிழர்களையும், தமிழக மீனவர்களையும் கொன்றுகுவிக்கும் இலங்கை அரசுக்கு, இந்திய மத்திய அரசு ஆயுத உதவி வழங்குவதை கண்டித்து சென்னையில் அனைத்துக் கட்சிகளின் சார்பில் ஆர்ப்பாட்டமொன்றும் இடம்பெற்றிருக்கின்றது. முன்னைய காலங்களைக் காட்டிலும் எண்ணிக்கையில் அதிகளவான மக்கள் இதில் கலந்து கொண்டு தமது எதிர்ப்பை வெளிக்காட்டியுள்ளனர்.

விகடனின் கருத்துக்கணிப்பின் மூலம் புறப்பட்ட விடுதலைப்புலிகள் தொடர்பான தமிழக மக்கள் தம்மனதுள்ளே பொத்தி வைத்திருந்த ஆதரவுக்குரலும், மீண்டும் ஈழத் தமிழர்களை அரவணைக்கும் தமிழகத்தின் பத்தெழுச்சியும் தென்னிலங்கை அதிகாரவர்க்கத்தை ஒரு கலக்கு கலக்கியிருக்கும். அதனால், எழுகின்ற கோபத்தைத் தணிப்பதற்காய், அப்பாவித் தமிழக மீனவர்கள் மீது கடற்படையின் ஆத்திர வெறிகொண்ட கரங்கள் கோரமாய் பாயவும் படலாம். தமிழக மீனவர்கள் சிந்துகின்ற குருதிதான் தமிழகத்தில் ஈழ விடுதலைக்கான ஆதரவு என்ற விருட்சத்தை வளர்த்தெடுக்கின்றது என்ற உண்மையை தென்னிலங்கை உணரும் வரை கடல் வேள்விகள் தொடரத்தான் போகின்றன.

பிரமன்

# குறுந்திரைப் பட உலகில் இளம் சிங்கள பெண்மணிகள்


இலங்கை தமிழ் கலையுலகில் பெண்படைப்பாளிக ளின் பங்களிப்பு எந்த அளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளது என்பதற்கான பதில் சங்கடத்திற்குரியதே. எழுத்தாக்கத் திற்கு அப்பால் அது குறைவகவே உள்ளது. நாடகம் எனபதிலும் ஓரளவிற்கு இருக்கின்ற போதிலும் சினிமா, டெலிடிராமா, குறுந்திரைப்படம் என்பவற்றில் தயாரிப்பாளர் என்ற நிலையில் தமிழ்ப்பெண்களின் பங்களிப்பு பூஜ்யமாகவே உள்ளது. எனினும், இதில் பெரும்பான்மை இனபெண்களின் பங்களிப்பு பாராட்டும் அளவிற்கு கணிசமாக வளர்ச்சி கண்டுள்ளது. திரைபடங்கள், டெலிடராமாக்கள் மட்டுமல்ல சிறந்த குறுந்திரைப் படங்களையும் அவர்கள் தயாரித்து ...ள மையுடன் சர்வதேச அளவில் விருதுகளையும் பெற்றி... சி றார்கள்.


சார்மிலா, திலானி

தீப்தி சத்துரிக்கா நிமலச்சந்திர, திலானி வலக்குல ஆராச்சி, சார்மிலா குமாரி ஆகியோர் இளம் தலைமுறை யைச் சேர்ந்தவர்கள். குறுந்திரைப்பட உலகில் காலடி பதித்துள்ள இவர்கள் நெறியான சமுதாய உணர்வோட்டம் மிக்கவர்களாக திகழுகி ன்றார்கள். எடுத்த எடுப்பில் தரமான படைப்புகளை வெளிக் கொணர்ந்துள்ளார்கள். My Favourite எனும் குறுந்திரைப்படத்தை தீப்தி சத்துரிக்கா அளித் துள்ளார். களனி பல்கலைக் கழக பட்டதா ரியான தீப்தி இலங்கை யின் தலைசிறந்த சினிமா தயாரிப்பாளர்களில் ஒருவரான பிரசன்னா


சத்துரிக்கா

விதானகே மற்றும் றொபர்ட் குருஷிடமும் சினிமா நெறி யாள்கையைக் கற்றுள்ளார். மிகவும் இளமையிலே சினிமா பற்றிய பல தொழில் நுட்பங்களை கற்றுங்கொள்ளும் அரிய வாய்ப்பு பெற்றவராக அவர் இருக்கின்றமை ஒரு வரப்பிரசாதமே. சினி மாத்துறையில் தொழில்ரீதியான பங்களிப்புகளில் அவர் ஈடு பட்டுள்ளார். உபார்த்தோ பெசோலினியுடன் 'நோபக்கிங் ஏண்ட் போல்' எனும் விவரண படத்திற்கு உதவி இயக்குநராகவும், தயாரிப்பு முகாமையாளராகவும் 7th Troop - டெலிடிராமா, Endless Dark, கடுலு நிசல்லா கலய், இடுவர தொட்டமுன, On the time ஆகிய குறுந்திரைப்படங்களில் தயாரிப்பு முகாமையாளராகவும் பணியாற்றியுள்ளார். மிண்டாட கங்காவ, We Love Football ஆகிய டெலிடிராமாக்களில் தயாரிப்பு குழுவில் ஓர் அங்கத்தவராகவும் அவர் செ... பட்டுள்ளார். இத் தகைய பணிகளில் ஈடுபட்டமை சினிமாக் கலை பற்றிய பெரும் அனுப வங்களை எய்துவதற்கு அவருக்கு வழி வகுத்துள்ளன. அவற்றை பயன்மிக்கனவாக மாற்றிக்கொள்ளவும் அவர் முயன்றிருக் கின்றமை சிறப்பானதாகும்.



தீப்தி சத்துரிக்கா விமலச்சந்திராவின் My Favourite குறுந்திரைப்படம் உள் நாட்டிலும், சர்வ தேச ரீதியாகவும் பல விருதுகளைப் பெற்றுள்ளது. 2007 ஆம் ஆண்டிற்கான இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் நடத்திய குறுந் திரைப்பட விழாவிலும் பரிசினைப் பெற்றுக் கொண்டது. பேர்லின் டலண்ட் கம்பெஸ், பிரான்சிய தூதுவராலயம் மற்றும் மும்பாய் குறுந் திரைப்பட விழாக் களிலும் பங்கு பற்றி விருதுகளை தட்டிக் கொண்டது. களனி பல்கலைக்கழகம் 2008 - இல் நடாத் திய ஒசியன் சினிபேன் குறும்திரைப்பட விழாவில் முதலாவது பரிசினை அது பெற்றுக் கொண்டது.

கலைநுணுக்கம் மட்டுமல்லாது அவருடைய திரைப்படங் களின் கருப்பொருளும் சமூகவுணர்வு மிக்க வையாகும்.

'பசி என்பது உணவு ஒன்றுக்காக மட்டும் அல்ல அன்பு, சமாதானம், சமூக பாதுகாப்பு என்பனவற்றுக்குமுரியதாகும்' என்பதே விருதுபெற்ற My Favourite குறுந்திரைப்படத்தின் கருப்பொருளாகும்.

இக் குறுந்திரைப்படம் முழுமையான கதையின் ஒழுங்காக அமைக்கப்பட்ட வடிவமைப்போ கட்டம் கட்டமாக வளர்த் தெடுக்கப்படுகின்ற ஒரு பாத்திரத்தின் கட்டமைப்போ கொண்டதாக ஆனால், ஒரு சாதாரண நிகழ்வுதான். எனினும், திரை தரும் அந்த நிகழ்வினூடே விசாலமானதொரு வாழ் வியலை தரிசிக்கக் கூடியதாகவுள்ளது. குறுந்திரைப் படங்களின் படிமம் அவ்வாறே கலைத்துவமாக வெளிப் படுதல் வேண்டும்.



சிறுவனொருவன் வீதிவழியாக தலைதெறிக்க ஓடுகிறான். அவன் கையில் ஏதனையோ பதுக்கி வைத் திருக்கிறான். கமராவும் அவன் பின்னே ஓடுகிறது. அவனைப் பிடித்து விட வேண்டும் என்ற எத்தனிப்பு அந்த ஓட்டத்தில் தெரிகிறது. அந்த ஓட்டந் தினூடே பார்வையாளர்களின் கண்மணிகளும் இலயித்து உறைந்து விடுகின்றன.

'அவன் கள்வனா? இல்லை குற்ற வாளியா?' பார்வையாளன் மனதில் கேள்வி துளிர்க்கிறது. இறுதிக் காட்சி உதார்த் தத்தை பட 'டென போட்டு உடைத்து' விடுகிறது.

ஒரு பாதுகாப்பான இடத்திற்கு வந்ததும் அவனுடைய ஓட்டம் நிற்கிறது. அவன் கையில் ஓர் உணவுப்பண்டம் அதனை சாப்பிடுகிறான்.

சகலதும் வர்த்தக மயமாகிவிட்ட இன் றைய நாட்டு நிலையில் சிறுபான்மையோ, பெரும்பான்மையோ - மக்களில் பெரும்பான் மையானோர் - வறுமை கோட்டிற்கு கீழே வாழும் நிலை ஏற்பட்டு வருகிறது. அந்த சிறுவன் குறித்தவொரு இனத்திற்குரியவன் அல்லன். முழு சமூகத்தினதும் பிரதிநிதி. இவர்களை பெரும்பாலான கலைஞர்களும் மறந்து விடுகி றார்கள். அவர்களின் அகசங்களில் இவர்கள் தோன்றுவதில்லை. ... பிரதிநிதிகளின் மிக துயரத்திற்கான குடிசை ... பின்புலமும் சினிமாக்களிலோ, டெலிடிரா மாக்களிலோ அதிகமாக இடம்பெறுவதில்லை. அதற்கு மாறாக அதீதமான கற்பனைகளும், கிரிக்கெட் விளையாட்டும் ஆபாச நடனங்களுமே அதிக அளவில் இடம்பெறுகின்றன எனவும் தீப்தி கூறுகிறார். ஒரு சமுதாயத்தில் பெரும் அளவில் துன்பத்தில் உழல்கின்ற மக்களின் வாழ்வியல் கலைகளில் பிரதிபலிக்கப்பட வேண்டும் என தீப்தி சத்துரிக்கா நிமலச்சந்தி ரவின் கோட்பாடு அமைகிறது.

திலானி வலக்குல ஆராச்சி, சாமிலாகுமாரி ஆகிய இருவரும் சிறந்த குறுந்திரைப்பட தயாரிப்பாளர்களாக திகழ்கின்றனர். Bench எனும் குறுந்திரைப்படம் இவ்விருவரின் இணை தயாரிப்பாகும். உள்ளடக்கத்தில் மட்டுமன்றி நெறியாள்கையிலும் அது உயர்தரத்தில் உள்ளது.

ஒரு 'பென்ஜ்' வாங்கில் இதன் பிரதான பாத்திரம். கமராவை முழுமையாக ஆக்கிரமித்திருப்பது அதுதான். ஒரு பிச்சைக்காரன் அதில் உறங்கிக் கொண்டிருக்கிறான். அவன் எழுந்து சென்றதும் துப்புரவு செய்யும் ஒரு பெண்பிள்ளை அங்கே தோன்றுகிறாள். பெஞ்ஜைச் சுற்றி துப்புரவு செய்து விட்டு போகிறாள். தேகப்பியாசம் செய்கின்றவர் அங்கே தோன்றுகிறார். சில பயிற்சிகள் செய்கிறார். அதன் பின்னர் ஓர் இளம் ஜோடி அங்கே வருகிறது. பெஞ்சில் அமர்ந்து காதலில் ஈடுபடுகின்றது. அவர்கள் சென்றதும் ஒரு விலைமாது அதன் அருகில் வந்து நின்று தன் இரைக்காக காத்திருக்கிறாள். கிடைத் ததும் அவளும் போய்விடுகிறாள். அதன் பின்னர் இளம் சிறார்கள் அதைச்சுற்றி விளையாடுகி றார்கள். மாலை மயங்கியதும் அவர்களும் அவ்விடத்தை விட்டுச் சென்றுவிடுவார்கள். இறுதியாக பிச்சைக்காரன் மறுபடியும் தோன்றி அதில் சாய்ந்து கொள் கிறான்.

**கே.வி.**

கமரா காட்சிகளை நகர்த்திச் சென்று வாழ் வியலின் ஓர் அம்சத்தை அற்புதமாகச் சொல்லி முடிக்கிறது அது. கருப்பொருள் எளிமையாகச் சொல்லப்படுகிறது. ஆனால், அழுத் தம் நெஞ்சில் ஆழமாகப் பாய்கிறது. என்னே ஒரு பெஞ்ஜைச் சுற்றி இத்தனை சமாச்சாரங்கள்...!?

களனி பல்கலைக்கழகம் 2008 ஆம் ஆண்டில் நடத்திய குறுந்திரைப்பட விழாவில் Bench விருதினைப் பெற்றது. Max TV குறுந்திரைப் பட விழாவிற்கும் இது சமர்ப்பிக் கப்பட்டுள்ளது. திலானியும், சாமிலாவும் கொழும்பு பல்கலை கழகத்தின் கலைப்பிரிவு பட்டதாரிகள் ஆவர்.

இளமையும், கல்வியும், தொழில்நுட்பவியலும் ஒருங்கே கைவரப் பெற்ற இவர்களில் எதிர்காலம் தாயரிப்புகள் தரம் வாய்ந்தவையாகவும், முழுமனித சமூகவுணர்வு மிக்கனவாகவும் திகழும் என்பதில் சந்தேகமில்லை.




## சைலண்ட் இஸ் கோல்ட்

எல்லாவற்றுக்குள்ளும் மூக்கை நுழைக்கிற பேச்சாளர் அவர். என்ன நிகழ்வாக இருக்கட்டும், மனுஷன் ஆரம்பத்திலே வந்தாலும் சரி, இல்லை எல்லோரும் பேசி முடித்துவிட்ட பின்னர் வந்தாலும் சரி, சபையோர் கருத்துரை என்று வரும் போது முந்திரிக்கொட்டையாக முதன் முதலாக எழும்பி நாலுவார்த்தை சொல்லா விட்டால் அவருக்கு அலர்ஜி. மனுஷன் சொன்னார்.

"இவான் எல்லாம் ஏன் கருத்தரங்கு போடுறான்? எதைச் சொன்னாலும் ஏத் துக்க மாட்டுறான். 'இது சரியில்லை, இந்த சபையிலே இந்த சமாச்சாரத்தைப் பேசப் படாதுன்னு' மட்டம் தட்டிப்போடுறான். இது நியாயமா?"

"ஏன் அப்படிச் சொல்லுறாள்?"

"நேக்கு புரியல்ல. அதுதான் கேட்கிறேன். சிற்றிலக்கியம் பத்துனு ஒரு கருத்தரங்கு. நமக்கு அது அலர்ஜி. அதாலே கடைசியாகத்தான் போனேன். சிவனேன்னு சும்மா குந்தியிருக்கலாமா. நாலுவார்த்தை பேசப்படாதா? சபையோர் கருத்துரை நேரத்துல எழும்பி பண்டிட் ஜவகர் நேரு அவங்களுக்கு ரோஜான்னா ரொம்ப பிடிக்கும் அது ...ர" பேசினேன். எல்லாம் வாங்க கெட்டின்னு கண் டைக்கு கெளம்பிட்டா."

"ஒதைக்காமல் விட்டாங்களே. அதைச் சொல்லுங்கோ. நேருக்கும், சிற்றிலக்கியத்துக் கும் என்னவோய் தொடர்பு? அதுசரி 'சைலண்ட் இஸ் கோல்ட்' ன்னு சொல்லுறாளே, அதாவது உமக்கு தெரியுமா? இதெல்லாம் பழமொழி காணும். நமக்கு தெரியாததை பேசப்படாது. பொருத்தமில்லாததை பேசப்படாது. தெரியும் என்பதுக்காக தெரிந்ததை எல்லாம் பேசப்படாது. சில இடங்களிலே வாயே திறக் கப்படாது. அது நம்மையே அவட்டாக்கிடும். அதுக்காகத்தான் 'சைலண்ட் இஸ் கோல்ட்'ன்னு சொல்லியிருக்கா."

"என்னவோய் நீர் கொஞ்சம் புரட்சிகரமா இருக்கப்படாதா? பேசினாத்தானே நம்மை புரிஞ்சுக்குவா."

"அது சரி, அநியாயமா வாயைத்திறந்து அம்பேல் ஆகிப்போன ஆமை கதைபடிச்சதில்லையா நீர்? அரிவரி கதைஐயா அது. ஆமையொன்று தன்னை இன்னொரு குளத்திலே கொண்டு போய் விடச் சொல்லி கொக்குகிட்ட சொல்லிச்சுதாம். 'அதெப்படி? நீ ரொம்ப பாரமாயிட்டே. என்னாலே முடியாது' என்னு ஒரு கொக்குச் சொல்லிச்சு. 'ஏலே இங்கே பாரு ஒரு கம்பைத்தாரேன். நீங்க ரெண்டு பேரும் ஆளுக்கொரு முனையை அலகாலே கௌவிக்கொள்ளுங்கோ. நான் மூக்கிலே நடு பாகத்தில் கௌவிக்கொள்கிறேன். மும்முனை பறக்கலாமே' என்று கூறியது ஆமை. 'அடடா! நல்ல ஐடியாவே இருக்கு' என்றன கொக்குகள். ஆமையின் ஐடியாபடி ஆமையார் ஆகாயத்திலே பறந்தார். இதைக் கண்ட மனுஷாள் எல்லாம் கொக்குகளைப் புகழ்ந்தார். 'என்னதான் என்றாலும் ஐந்தறிவு ஐந்து களின்ட அறிவைப் பாருங்கோ!' என்று மெச்சினார். ஆமையாருக்கு பொறாமை. ஐடியா என்னுது, புகழ் இவாளுக்கா'ன்னு பொறுமிப்போன ஆமையார் 'ஐயா! மனுஷாளே இந்த ஐடியாவிற்கு நான்தான் சொந்தக்காரன்' எனச் சொல்வதற்கு வாயைத் திறந்தார். ஆகாயத்திலிருந்து விழுந்து 'டமால்'ன்னு ஒரு பாறையில் மோதி சிதறிப்போனார். பார்த்தீரோ சில நேரங்களில் சிவனேன்னு வாயை மூடின்னு இருந்தாநோ புரிஞ்சுதோ. இதைத்தான் 'சைலண்ட் இஸ் கோல்' ட்டுன்னு சொல்றா.

## எழுதுவது போல வாழ்ரவங்களே!

நவீன இலக்கியப் பக்கமே தலைவைத்தும் படுக்கமாட்டார் அவர். எழுத்தாளர்கள், கவிஞர்கள் என்றாலே கசப்புடன் முகத்தை சுழிப்பவர். அம்மான் தெருவிலே ஓடிவதைக் கண்டு

"எங்கே இது இந்தவோட்டம் ஓடுறியள். அப்படி என்ன தலைப்போற சமாச்சாரம்?"

"ஒன்றுமில்லே. ஒரு இலக்கிய கூட்டத்திற்கு போனான் நேரம் பிந்திப் போட்டுது அதுதான் இந்த ஓட்டம்."

"என்ட தம்புரானே! எதுக்கு இந்த அவஸ்தை? ஒரு இராமாயணம், மகாபாரதம் என்றெல்லாம் ஆரும் பேசினம் என்றால் ஒருக்கால் அங்கே எட்டிப் பார்க்கலாம். இல்லே முழுநாளும் விழுந்துகிடக்கலாம். உதென்ன உலை யள்ண்ட கண்டறியாததொரு இலக்கியம்? இந்த இலக்கியகாரரெல்லாம்... ஐயோ! விடுங்கள் நான் சொல்லமாட்டன் உங்க எவராவது எழுதுறபடி வாழினமே? சும்மா விழல் கதை."

"அப்பபடிச் சொல்லப்படாது. இலக்கியம் இருந்தாலே மொழி வாழ முடியும். அதை வளர்க்கவேண்டாமோ?"

"அதுசரி, உவையள்தான் எங்கன்ட மொழியை வளர்க்கப் போகினம். எல்லாம் கள்ளங்கள், சுயநலமிகள், இவையள் என்னத்தை எழுதுறது? தமிழ் தான் ஆல விருட்சம் போல வளர்ந்து கிடக்கே. இவையள் என்னத்தை வளர்க்கப் போகினம்?"

மனுஷன் பொரிந்து தள்ளினார். எழுத்தாளர்களெல்லாம் ஏதோ தகாத காரியம் செய்கிறார்கள் போல தள்ளினார். அம்மான் ஆட்டத்தான் போனார்.

"அப்பு! எதுக்கும் ஒரு தகுதிவேணும். இல்லையென்று சொல்லேல்லை. உதுக்காக எங்கன்ட எழுத்தாளர்களை கொறுப்புல பிடித்து நெரிக்கப்படாது. அநுபவத்தைத் தானே எல்லோரும் எழுதினம்."

"சே! என்ன அநுபவம். நல்ல பக்திதான். இராமாயணம், மகாபாரதம் எல்லாம் சப்தரிஷிகளின் அநுபவங்கள். அவற்றைத்தான் படிக்கவேணும்."

"ரத்னகாரரைப் பத்தி கேள்விப்பட்டிருக்கீங்களோ?"


"உதார்? ஏதும் செக்ஸுவலான கிரைம் ஸ்டோரி எழுதியிருக்கிறாரோ?"

"இவர் பெரிய கொள்ளைக்காரர். நிறைய பாவங்கள் செய்து கொண்டிருந்தவர். ஒருக்கா ஒரு சப்தரிஷியை கண்டு போட்டார். அந்த ஆளும் இவரைப் பார்த்து இஞ்சாரும் பெரிய பாவம் பண்ணிக்கொண்டிருக்கிறியள். உமக்கு பெரிய தண்டனை காத்துக்கிடக்கு என்று பயமுறுத்தினார். அவரோ 'சே! சே! அதெப்பெடி? நான் என் குடும்பத்தில் பலருக்கும் உதவத்தான் உந்த பாவங்களை செய்யுறனான். அவையளும் என்ட பாவத்திலே பங்கு பெறுகினம். அதுனாலேயே எனக்கு தண்டனை குறைஞ்சத்தான் கிடைக்கும் - என்று சொன்ன 'அட்டே!' அப்படியா நினைச்சிக் கொண்டிருக்கிறீர்? நீ ஒருக்கால் விசிட் அடிச்சி, நீங்களும் என்ட பாவத்திலே பங்கு ஏற்பீங்களோ என்டு குடும்ப மெம்பரை கேளுங்கோ பாப்பம். அப்பதெரியும் அவையின்ட பந்த பாசம்' என்றார் சப்தரிஷி. ஆடிப்போன ரத்னகாரரும் விழுந்தடிச்சு ஓடி குடும்ப மெம்பர் ஒவ்வொருத்தரையும் கும்பிட்டு என்ட தண்டனையிலே பங்கு ஏற்பீங்களோ என்டு கெஞ்சிக் குளறி கேட்க அம்மா முதல் அக்கா வரை 'உம்மும்' என்று கையை விரிச்சுப் போட்டினம்."

"எட நாசமறுப்பாங்களே!"

"அந்த ரத்தினகாரர்தான் அப்ப, அதன்பிறகு தவஞ்செய்து வால் மீகியாகி, உங்கள்ண்ட கண்கண்ட இராமாயணத்தை எழுதினவர்."






# தேவை விதவிதமான உணவு!

சத்தம் எழுப்பாமல் அடிமேல் அடி வைத்து என்னோடு கொஞ்சம் வாருங்கள். இது சிம்பன்ஸி பிரதேசம்! நாம் பணிவாக இருபது நல்லது. சரி அந்தப் புதருக்குப் பின்னாலிருந்துகொண்டு எட்டிப் பார்க்கலாமா? அதோ சிம்பன்ஸி தலைவர் ஒரு பாறை மீது உட்கார்ந்துகொண்டிருக்கிறார். என்ன கம்பீரம், பார்வையில் என்னதொரு அலட்சியம்...?

அவர் காலடியில் யார் அது? இன்னொரு சிம்பன்ஸி! அது தலைவரின் காலடியருகே இருக்கும் தரையையே பார்த்துக்கொண்டிருக்கிறது. ஒருமுறை கூட அண்ணார்ந்து பார்க்காமல்... தலைவரின் பாதங்களை அவ்வப்போது முத்தமிடுகிறது. சரேலென்று தலைவரின் கைகள் நீளுகின்றன. தொண்டனின் தோளை மென்மையாகத் தட்டிக் கொடுக்கிறார் தலைவர். பிறகு அதன் தலை மீது கை வைக்கிறார். சிம்பன்ஸி தொண்டன் ஏதோ தப்புச் செய்திருக்கவேண்டும். இப்போது அது 'அப்பாடா தப்பித்தோம்!' என்று பெருமூச்சு விடுகிறது. தலைவர் மன்னித்துவிட்டார்!

தலைவர் எழுந்து மெள்ள நடக்க ஆரம்பிக்கிறார். இதுவரை சற்றுத் தொலைவில் பவ்யமாக நின்ற மற்ற மந்திரி பிரதானி சிம்பன்ஸிகள் அவரை நெருங்கி, அதேசமயம் அவருக்கு வழிவிட்டு இருபுறமும் நிற்கின்றன. நடந்தவாறே சிலரை தலைவர் தட்டிக்கொடுக்கிறார். சிலரோடு கைகுலுக்குகிறார். பிடித்தமான சிலரை அணைத்துக்கொண்டு முத்தமிடுகிறார். ஏராளமான கைகள் அவரை நோக்கி அவருடைய தொடுதலுக்காக நீள்கின்றன! 'ராயல் டச்' அல்லவா!

என்ன வாசர்களே, ஏதோ அமெரிக்க ஜனாதிபதியோ, பிரிட்டிஷ் பிரதமரோ, இந்தியத் தலைவரோ ஒரு விழாவுக்குள் நுழைவதுபோலவே இருக்கிறதா?!

போகிற வழியில், துடிப்பான இரு இளம் ஆண் சிம்பன்ஸிகள் அடிதடியில் இறங்கியிருப்பதைத் தலைவர் பார்க்க நேருகிறது. தலைவரின் ஒரு கடுமையான முறைப்புப் போதும். உடனே அந்த இரண்டும் சண்டையை நிறுத்திவிட்டுத் தலைகுனிந்து ஓரமாகப் போய் நிற்கும். சில சமயம் திமிரோடு, அவரை கண்டுகொள்ளாமல் சண்டையை அவை தொடரலாம்! அப்படி நிகழ்ந்தால், தலைவரின் புருவம் நெறியும். அவர்களை வேகமாக நெருங்கி ஆளுக்கு ஒரு அறை விடுவார். பிறகு இரண்டும் கப்சிப்!


ஒவ்வொரு 'சிம்ப்'புக்கும் மற்ற நண்பர்களின், குடும்பத்தினரின் குரல் நன்றாகத் தெரியும். அதாவது, மேல் மாடியில் தாமு நண்பர்களோடு சீட்டு ஆடிக்கொண்டிருக்கும்போது, கீழேயிருந்து 'தாமே!' என்று குரல் வந்தவுடன், குரலைப் பார்த்தே புரிந்துகொள்ளும் தாமு, 'டேய்! தீனா வந்திருக்கிறான்... போய்க் கூட்டியா!' என்று சொல்வது போல!

ஒரு வித்தியாசம் - சிம்பன்ஸிக்கு பெயர் கிடையாது! குப்புசாமி, சுரேஷ் என்றெல்லாம்... ஆனால், காட்டில் தொலைவிலிருந்து ஒரு 'சிம்ப்' குரல் எழுப்பினால் இங்கே கூட்டத்திலிருக்கும் குறிப்பிட்ட சிம்ப் 'அழைப்பு தனக்குத்தான்' என்று புரிந்துகொள்ளும். மற்ற நண்பர்களும் 'உன்னைக் கூப்பிடறான் பாரு' என்பதைப் போல அதைத் தட்டிக்கொடுத்து அனுப்பும்!

மற்ற எல்லா விலங்கினங்களும் குறிப்பிட்ட சிலவற்றைத்தான் உணவாகத் தேர்ந்தெடுக்கின்றன. சிம்ப் இந்த விடயத்தில் நம்மை மாதிரியேதான்! ஒவ்வொரு நாளும் விதவிதமான 'டிபன்' அதற்குத் தேவை!

பழங்கள், இலை, விதைகள், பூச்சி வகைகள், மீன், நண்டு, முயல் எலி, பறவை, மற்ற வகைக் குரங்குகள் எல்லாவற்றையும் சிம்பன்ஸிகள் ஒரு வெட்டு வெட்டும்! மரவட்டைகள் அவைகளுக்கு ரொம்பப் பிடிக்கும். மனிதனுக்கு ஸ்வீட் மாதிரி-அதற்கு மரவட்டை!

நமக்கு உணவில் உப்புத் தேவைப்படுகிறது. சிம்பன்ஸிகள் உப்புச் சத்துள்ள மண்ணை (Soil) தின்கின்றன! குட்டி 'சிம்ப்'கள் சில சமயம் விஷ இலை எதையாவது வாயருகே கொண்டுபோனால் அம்மா அந்த இலையைத் தட்டிவிட்டு, குழந்தை முதுகில் ஒரு போடு போடும்!




[illegible]

'ஆனந்த விகடன்', 'ஜூனியர் விகடன்', 'ஜூனியர் போஸ்ட்' [illegible]

[illegible]

'ஆனந்த விகடன்' [illegible]



சிம்பன்ஸிகளுக்கு நாள் முழுவதும் (நம்மில் பலரைப் போல) நொறுக்குத் தீனி தேவை! நாம் நடந்தவாறே சுண்டல், வேர்க்கடலையை வாயில் போட்டுக்கொள்வது போல 'சிம்ப்'களும் நடந்தவாறு எதையாவது மென்று கொண்டிருக்கும்.

ஒவ்வொரு நாளும், இரவு நேரத்தில் மரத்தின் மேலே, அகலமான கிளைகள் மீது, பெரிய இலைகளைக் கொண்டு படுக்கை அமைத்துக்கொள்ளும் ஒரே விலங்கினம் 'சிம்ப்'தான்! சிம்பன்ஸிகள் கனவு காண்கின்றன என்கிறார்கள் விஞ்ஞானிகள். தூக்கத்தில் திடீரென்று ஏதாவது சத்தம் கேட்டாலோ, பயங்கரக் கனவு கண்டாலோ அது திடுக்கிட்டு எழுந்து பக்கத்தில் உள்ள 'சிம்ப்'பைக் கட்டிப்பிடித்துக் கொள்வதுண்டு. சிம்பன்ஸிகளுக்கு கலாட்டாவான விளையாட்டுகளில் ரொம்ப விருப்பம் உண்டு. பெரிய ஆண்கள் கூட நேரம் ஒதுக்கிக் குழந்தைகளோடு விளையாடும். அநேகமாக பொய்யான குத்துச்சண்டைதான்!

அவ்வப்போது சிம்ப் படை வேட்டைக்குக் கிளம்பும்போது நாமும் கூடவே போய்ப் பார்த்தால்... திகைப்பும், வியப்பும் நம்மைச் சூழ்ந்து கொள்ளும்!

அதோ, புதர்களுக்கிடையே உள்ள அந்தப் பொந்துக்குள் ஏதோ இரை இருப்பதை 'சிம்ப்' ஒன்று கண்டுபிடித்துவிட்டது. உடனே அது மெலிதாக 'ஸ்ஸ்ஸ்' என்று மற்ற நண்பர்களை எச்சரிக்கிறது. உடனே மற்றவை ஆங்காங்கே ஒளிந்துகொண்டு ஒரு வியூகம் வகுத்து 'எஸ்கேப் ரூட்'களை எல்லாம் அடைத்துவிட, சில 'சிம்ப்'கள் பொந்து வாசலில் குச்சிகளாலும், கற்களாலும் தட்டி இரைக்குப் பதற்றமேற்படுத்துகின்றன. இரை தப்பிப்பதற்காக வெளியே பாய... அட, ஒரு குட்டிப்பன்றி! சரேலென்று சில 'சிம்ப்'கள் பாய்ந்து அதைப்பிடித்தவுடன் மறைவிடங்களிலிருந்து மற்றவை அங்கே 'ஜம்ப்' செய்கின்றன. பன்றி தப்பித்து ஓடினாலும் வேறு ஒரு 'சிம்ப்'பிடம் சத்தியமாக மாட்டிக்கொள்ளும் என்பதைச் சொல்லத்தேவையில்லை! சிம்பன்ஸியின் பற்கள் கூர்மையானவை. சில விநாடிகளில் பன்றி காலி! வேட்டை முடிந்ததை மிகப்பெரிய வெற்றி விழா போல சிம்பன்ஸிகள் கொண்டாடுகின்றன. குதித்து, கிறீச்சிட்டு ஒன்றையொன்று 'சபாஷ்!' என்பது போல தட்டிக்கொடுத்து, விசிலடித்து, குரூப் டான்ஸ் ஆடி... அந்தக் காட்சி களேபரமாக இருக்கும்! பன்றியின் மூளையையும், விரைகளையும் தலைவர் முதலில் சாப்பிடுகிறார்! பிறகு பன்றியின் மார்புப் பகுதியை உபதலைவர் கிழித்து அதன் இதயத்தை உருவியெடுத்து, சாப்பிடுவதற்கு முன்பு அதை உயர்த்திக் காட்ட... மற்ற 'சிம்ப்'கள் 'ஹோ'வென்று கரகோஷம் எழுப்பும்! அந்தக் காலத்தில் மனிதன் இதேபோலத்தான் வேட்டையாடியிருக்க வேண்டும்! அப்போது மரக்கிளைகள், கற்கள் ஆயுதமாக இருந்தன. இப்போது துப்பாக்கிகள்!

சில நாட்களுக்கு ஒருமுறை எல்லா சிம்பன்ஸிகளும் படையாகப் புறப்பட்டு தங்கள் எல்லையைக் கண்காணிக்கவும், ரோந்து பார்க்கவும் கிளம்பும். இது ஒரு முக்கியமான சம்பிரதாயம்!

வேட்டைக்குக் கிளம்புவது வேறு, இது வேறு! சிம்ப் எல்லைகளின் குறுக்களவு ஏழெட்டு கி.மீ. இருக்கலாம் அல்லது முப்பது முப்பத்தைந்து கிலோ மீட்டரும் இருக்கலாம்.

எல்லையை ரோந்து பார்க்கக் கிளம்பிய 'சிம்ப்' படையுடன் ஜேன் கூடாலும் ஒருமுறை கூடவே போய்விட்டு வந்து இதோ அந்த அனுபவத்தை விவரிக்கிறார்...!

'தலைவர் முன்னால் போக, பின்னால் 'க்யூ' வரிசையாக மற்றவை செல்கின்றன. வழியில் ஒரு சிம்ப் கூட சத்தமெழுப்புவதில்லை. பயங்கர மௌனம் நிலவுகிறது. நான் ஒரு முறை லேசாக இருமியபோது ஒரு சிம்பன்ஸி திரும்பி என்னைப் பார்த்து 'உஷ்...' சொன்னது!

'வழியெங்கும் கீழே உள்ள இலை, கிளைகள், சருகுகளை எடுத்து டெஸ்ட் பண்ணிக்கொண்டே அவை போகின்றன. சற்றுத் தொலைவில் திடீரென ஏதாவது கிளை முறியும் சத்தம் கேட்டால்கூட அத்தனை 'சிம்ப்'களும் துணுக்குற்று நின்று, விபரீதமாக எதுவுமில்லை எனத் தெரிந்ததும் ஒன்றையொன்று பார்த்து 'ஸ்மைல்' செய்து முதுகில் தட்டிக்கொடுத்து விட்டுப் பயணத்தைத் தொடர்கின்றன. தங்கள் கூட்டத்தைச் சேர்ந்த ஒவ்வொருவருடைய 'நம்பர் 2' வாசனை அத்தனை 'சிம்ப்'களுக்கும் தெரியும். வேறு ஏதாவது அந்நிய சிம்பன்ஸி இவற்றின் எல்லைக்குள் நுழைந்து 'நம்பர் 2' போய்விட்டால் அதைச் சோதித்துப் பார்த்துக் கண்டுபிடித்துவிடுகின்றன. உடனே அங்கே பரபரப்புத் தொற்றிக்கொள்கிறது. உடனே 'ஏய்... எவனோ நம்ம எல்லைக்குள்ளே பூந்திருக்கான்!' என்பது



போன்ற குரல்கள் எழும்புகின்றன. வேறு பகுதியைச் சேர்ந்த சிம்ப் எல்லையோரமாக வந்தால் தலைவர் 'டாய்... யார்றா அது...? போடாங்க...!. என்பது போல மிரட்டலாகக் குரல் கொடுக்கிறார். ஊடுருவப் பார்த்த சிம்ப் எகிறிக் குதித்து ஓடிவிடுகிறது. அதையும் மீறி அந்த சிம்ப் நின்றால் - அது ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி - நம்ம சிம்ப்கள் ஓடிப் போய், அதைப் பிடித்துக்கொள்ள, தலைவர் போய் அவசரமாக, படுவேகமாகப் பின்னாலிருந்து அதனுடன் உடலுறவு கொண்டுவிட்டுப் பிறகு அதை அடித்துத் துரத்திவிடுகிறார்! உண்மையில் அது முழுமையான உடலுறவு கிடையாது. ஜஸ்ட், அவமானப்படுத்துவது!

எல்லைக் கண்காணிப்பு, ரோந்து எல்லாம் முடிந்தவுடன் நடுமையத்துக்குத் திரும்பி... பிறகு மகிழ்ச்சி ஆரவாரம்தான்! டான்ஸ், கைகுலுக்கிக் கொள்ளுதல்... எல்லாம் அங்கே நிகழும். 'எங்கள் எல்லை எங்களுக்கே...! எங்கள் மண்ணைத் தொட யாரையும் அனுமதிக்க மாட்டோம்... வாழ்க நம் தலைவர்!' என்று 'சிம்ப்'கள் குரலெழுப்புவது போலவே எனக்குத் தோன்றியது என்கிறார் ஜேன் கூடால்!

அட, மறந்துவிட்டேனே... செக்ஸ்! இந்த விடயத்தில் சிம்பன்ஸிகள் மனிதனைவிட ஒரு படிமேலே போகின்றன. செக்ஸ் சம்பந்தப்பட்ட பல விடயங்களில் சிம்பன்ஸிகளைப் பார்த்து நாம் பொறாமைப் படத்தான்முடியும்!...

அப்படியிருக்க, அதைப் பற்றி நான் சொல்லாமல் இருக்க முடியுமா?

(தொடரும்)

# நான் கண்ட பாரதி

2

மஹாகவி பாரதியாரின் பாடல்களையும், அவரைப் பற்றிய வரலாற்றையும் முதன்முதல் இலங்கையில், அதுவும் திருகோணமலையில், அறிமுகப் படுத்தியவர் யார் என்ற உண்மை இன்று பலருக்குத் தெரியாமல் இருக்கிறது.

பிரபோத சைதன்யருக்கு பரிபூரண கஷாயம் வழங்கப்பட்டது. அன்றுதான் அவர் சுவாமி விபுலாநந்தர் ஆனார்.

சென்னையில் அவர் வாழ்ந்த சுமார் மூன்று ஆண்டுக் காலத்தில் பரமஹம்ஸரோடு

கவிதா சிறப்புகளை எடுத்து விளக்கினார்.

இப்படி அவரிடம் பாரதி பாடல்களைப் பாடம் கேட்டவர்களில், நான் சென்ற வாரக் கட்டுரையில் குறிப்பிட்ட திரு.ஆர்.சிவசுப்பிர


எஸ். டி.சிவநாயகம்

இலங்கைத் தமிழ்ப் பத்திரிகை உலகில் தன்னிகரற்ற ஜாம்பவானாக மதிக்கப்படுபவர் 'தினபதி', 'சிந்தாமணி', 'சூடாமணி' போன்ற பத்திரிகைகளின் ஸ்தாபக ஆசிரியராக மிளிர்ந்த அமரர் எஸ்.டி.சிவநாயகம் அவர்கள்.

ஈழத்துத் தமிழ் ஊடக உலகுக்குக் காத்திரமான பல பத்திரிகையாளர்களை வழிகாட்டி, உருவாக்கிவிட்ட பெருமைக்குரியவர் சிவநாயகம்.

27ஆண்டுகளுக்கு முன்னர் - பாரதியார் நூற்றாண்டு சமயத்தில் - தமது 'சிந்தாமணி' வார இதழில் 'நான் கண்ட பாரதி' என்ற தலைப்பில் தொடராக அவர் வரைந்த கட்டுரைகள் பரபரப்பாகப் பேசப்பட்டவை. மகாகவி பாரதியை புதிய கோணத்தில் தமிழ் உலகம் தரிசிக்கச் செய்தவர் சிவநாயகம்.

அக்கட்டுரைத் தொடரை மறுபிரசுரம் செய்வதன் மூலம் பெருமையடைகிறது 'சுடர் ஒளி'.

இக்கட்டுரைத் தொடருக்குள் புகமுன் வாசகர்களுக்கு ஒரு நினைவூட்டல். இத்தொடர் 27 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டது. இத்தொடரில் எஸ்.டி.சிவநாயகம் அவர்கள் கோடிகாட்டிச் செல்லும் பாத்திரங்கள் சில அச்சமயம் நம் மத்தியில் வாழ்ந்தவர்கள். அவர்கள் இப்போது இக்கட்டுரை மறுபிரசுரமாகும் சமயத்தில் நம்மத்தியில் இல்லாமல் மறைந்திருக்கலாம்.

எனவே, 27ஆண்டுகளுக்கு முற்பட்ட பின்புலத்திலே உங்கள் நினைவுகளைச் சுழலவிட்டபடி இந்தத் தொடருக்குள் நுழையுங்கள்!

- ஆசிரியர் -

பல உண்மைகள் பின்னுக்குத் தள்ளப் படுவது போல, இந்த உண்மையும் பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டது.

பாரதியாரின் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடும் இந்த சமயத்தில், இந்த உண்மையை ஏட்டில் பதித்து வைக்க வேண்டியது அவசியம் என்று கருதுகிறேன். பிற்காலச் சந்ததியினருக்கு இது பயன்படக் கூடும்.

மற்றவர் பலர் பாரதியைப் பற்றி அவ்வளவு தூரம் பெருமை பாராட்டாத வேளையில், பாரதியின் மேதா விலாசத்தை எடைபோட்டு, உரைத்து, மாற்றுணர்ந்து போற்றியவர் வேறுயாருமல்லர் -

அந்தப் பெருமைக்குரிய இலங்கையர் சுவாமி விபுலாநந்தர் தான்.

சுவாமி விபுலாநந்தர் தாமே ஒரு சிறந்த உரையாசிரியராகவும், கவிஞராகவும் விளங்கியவர். ஆங்கிலமொழி மூலம் விஞ்ஞானத் துறையில் பி.எஸ்.ஸி. பட்டம் பெற்றவர். இலத்தீன் மொழியிலும், சமஸ் கிருதத்திலும் பாண்டித்தியம் பெற்றவர். பல ஆங்கிலக் காவியங்களைக் கவிதையிலேயே தமிழாக்கியவர்.

இலங்கையில், மதுரைத் தமிழ்ச் சங்கத் தின் முதல் பண்டிதர் பட்டம் பெற்றவர் சுவாமி விபுலாநந்தர்தான். அப்போது அவர் துறவு பூணவில்லை. சுவாமி விபுலாநந்தர் ஆகவில்லை. அதனால் அவர் பண்டிதர் மயில்வாகனனார் என்றே அழைக்கப்பட்டார்.


பண்டிதர் பரீட்சையில் முதன்மையாகத் தேறியதனாலும், வேறும் பல தகுதிகள் இருந்தமையினாலும் மதுரைத் தமிழ் சங்கத் தின் பரீட்சைக் குழுவில் பண்டிதர் மயில் வாகனனாரும் ஓர் உறுப்பினர் ஆக்கப் பட்டார்.

அதனால், அடிக்கடி அவர் இந்தியா செல்லும் சந்தர்ப்பம் கிட்டியது. அப்போது

சேர்ந்து பாரதியாரும் அவர் உள்ளத்தில் நன்றாக இடம் பிடித்துக் கொண்டார்.

பற்று எல்லாவற்றையும் விடுவதற்காகச் சென்ற பண்டிதர் மயில்வாகனனார் ஒருபுறம் ஆன்மீகப்பற்றும், மறுபுறம் சுதேசப்பற்றும் பற்றிப் பிடிக்க சுவாமி விபுலாநந்தராக இலங்கை திரும்பினார்.

ஆன்மீகப் பற்றுக்கு இராமகிருஷ்ணரும்


சுவாமி விபுலாநந்தர்

சுதேசப்பற்றுக்குப் பாரதியும் அவருடைய ஆதர்ஸ குருக்கள் ஆனார்கள்.

1925 ஆம் ஆண்டு இலங்கை திரும்பிய சுவாமி விபுலாநந்தர் மட்டக்களப்பு, காரைதீவு, திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இயங்கிய பாடசாலைகள் சிலவற்றை இராமகிருஷ்ண மிஷனின் நிர்வாகத்தில் கொண்டுவந்தார். புதிய பாட சாலைகளையும், கட்டடங்களையும் தோற்று வித்தார்.

மணியம் அவர்களும் ஒருவராவார். குறிப்பிடக்கூடிய இன்னொருவர் தியாகி கோ.இராஜகோபால் அவர்கள்.

பாரதியாருடைய -

*'செந்தமிழ் நாடென்னும் - போதினிலே*
*இன்பத் தேன்வந்து பாயுது - காதினிலே'*

*''பாருக்குள்ளே நல்ல நாடு - எங்கள்*
*பாரத நாடு''*

*''தொன்று நிகழ்ந்த தனைத்து முணர்ந்திடு*
*சூழ்கலை வாணர்களும் - இவள்*
*என்று பிறந்தவ ளென்றுணராத*
*இயல்பினளாம் எங்கள் தாய்''*

*''தாயின் மணிக் கொடி பாரீர் - அதைத்*
*தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்''*

*''நெஞ்சு பொறுக்குதில்லையே - இந்த*
*நிலைகெட்ட மாந்தரை நினைந்து*
*விட்டால்''*


*''யாமறிந்த மொழிகளிலே*
*தமிழ் மொழி போல்*
*இனிதாவ தெங்கும் காணோம்''*

*''வாழ்க நிரந்தரம்*
*வாழ்க தமிழ் மொழி*
*வாழிய வாழியவே''*

போன்ற பாடல்களையும் மகாத்மா காந்தி பஞ்சகம், பாஞ்சாலி சபதம் போன்ற கவிதை

- எஸ்.டி.சிவநாயகம் -

களையும் சுவாமி விபுலாநந்தர் வாய் விட்டுப் பாடி மாணவர்களையும் பாடும்படி செய்து வந்தார்.


பாரதியார்

அடுத்த வாரம் மட்டக்களப்பிலும் பாரதி படத் திரை நீக்க விழா என்று திட்டமிடப்பட்டது. எனினும், திருகோணமலையில் படத் திரைநீக்க விழா நடந்த அன்று சுவாமி விபுலாநந்தர் வரமுடியவில்லை.

சுவாமிக்குச் சுகமில்லை என்றும் விழாவை எப்படியும் நடத்தி முடிக்கும் படியும் மட்டக்களப்பிலிருந்து தந்திதான் வந்தது.

சுவாமி விபுலாநந்தரின் கட்டளைப்படி திருகோணமலை இந்துக் கல்லூரியில் குறிப்பிட்ட தினத்தில் பாரதி படத் திரை நீக்க விழா 'ஜாம் ஜாம்' என்று நடைபெற்றது.

''ஜய பேரிகை கொட்டடா, கொட்டடா...'' என்ற பாரதி பாடலை திரு.இராஜகோபால் அவர்கள் பாட, இந்துக்கல்லூரி அதிபர் திரு.இராமசாமி ஐயர் என்பார் படத்தைத் திரைநீக்கம் செய்து வைத்துப் பாரதியின் சிறப்புகள் பற்றிப் பேசினார்.

அடுத்த வாரம் மட்டக்களப்பு சிவபுரியில் சுவாமி விபுலாநந்தர் பாரதி படத்தைத் திரை நீக்கம் செய்து வைத்தார்.

இலங்கையில் மஹாகவி பாரதியாருடைய படம் முதன் முதலாக திரைநீக்கம் செய்யப்பட்டது 1928 ஆம் ஆண்டு திருகோணமலையில்தான் என்பதும், அதற்குக் காரணகர்த்தராக விளங்கியவர் சுவாமி விபுலாநந்தர்தான் என்பதும் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு நிகழ்ச்சியாகும்.

சுவாமி விபுலாநந்தர் பண்டிதர் மயில்வாகனனாராக விளங்கியபோதே அவருக்கு சிலப்பதிகாரக் காப்பியத்தில் பெரும் ஈடுபாடு ஏற்பட்டு விட்டது. அதற்குக் காரணம், மட்டக்களப்பு பகுதிகளில் கண்ணகி அம்மன் வணக்கம் பெற்றிருந்த பெரும் செல்வாக்குத்தான்.


தியாகி இராஜகோபால்

## இலங்கையில் மகாகவி பாரதியாரை முதலில் அறிமுகப்படுத்தியவர் சுவாமி விபுலாநந்தரே!

அங்கு சுதந்திரக் கிளர்ச்சி நன்கு தழைத்தோங்கி வளர்ந்து வந்த நேரம். பாரதியைப் பற்றியும் அவர் பாடல்களைப் பற்றியும் அங்கு கேள்விப்படும் வாய்ப்பு பண்டிதர் மயில்வாகனனாருக்கு ஏற்பட்டது. பாரதியின் மீது ஒரு பற்றும் பிடிப்பும் அப்போதே அவருக்கு அரும்பி விட்டன.

பின்னர் பண்டிதர் மயில்வாகனனார் துறவு பூணும் சிந்தையராக சென்னை, மயிலாப்பூர் இராமகிருஷ்ண மடத்தில் சேர்ந்தார். பிரபோத சைதன்யர் என்ற பிரமச்சாரி ஆனார். அப்போது ஆண்டு 1922. பாரதி மறைந்து ஒரு சில மாதங்களே கழிந்திருந்தன. பாரதி மறைந்தது 1921 செப்ரெம்பர் 11 ஆம் திகதி என்பது தெரிந்ததே.

1924 சித்திரா பௌர்ணமி அன்று

மட்டக்களப்பிலே கல்லடி - உப்போடை என்னும் இடத்தில் சிவானந்த வித்தியாலயம் என்ற ஆங்கிலப் பாடசாலையை ஆரம்பித்து, அந்த எல்லைக்குள்ளேயே தாம் வசிப்பதற்காக 'சிவபுரி' என்ற ஒரு சிறு ஆஸ்ரமத்தையும் நிர்மாணித்தார்.

1925 ஆம் ஆண்டிற்கும் 1928 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் சுவாமி விபுலாநந்தர் திருகோணமலை ஸ்ரீகோணேஸ்வர வித்தியாசாலையிலும், இந்துக் கல்லூரியிலும் சில காலம் கல்வி போதித்தார். அவ்வாண்டு நவம்பர் 30 ஆம் திகதி திருகோணமலை இந்துக் கல்லூரி புதிய கட்டடத்துக்கு அடிக்கல் நட்டார்.

சுவாமி விபுலாநந்தர் திருகோணமலை இந்துக் கல்லூரியில் கல்வி புகட்டிய காலை யில் அங்கு பயின்ற மாணவர்களிடையே பாரதி பாடல்களையும் பரப்பினார். பாரதியின்

1928 ஆம் ஆண்டில் இன்னும் ஒரு குறிப்பிடக்கூடிய சம்பவம் திருகோணமலையில் நடந்தது. திரு.இராஜகோபால் அவர்களுக்கு இந்தியாவில் அச்சிடப்பட்ட பாரதியின் பெரிய அளவிலான திருவுருவப் படங்கள் இரண்டு கிடைத்தன. அகண்டாகார வடிவில் அச்சிடப் பட்ட படங்கள் அவை.

அந்தப் படங்களைக் கண்டதும் சுவாமி விபுலாநந்தருக்கு அளவற்ற ஆனந்தம் ஏற்பட்டது.

அவற்றில் ஒன்றைத் திருகோணமலை இந்துக் கல்லூரியிலும் மற்றொன்றை மட்டக்களப்பு சிவபுரியிலும் பிரேம் போட்டுத் தொங்கவிட வேண்டும் என்றும் அவர் விரும்பினார்.

முதல் வாரம் திருகோணமலையிலும்

அவர் பிறந்த ஊரான காரைதீவிலும் ஒரு சிறந்த புகழ்பெற்ற கண்ணகி அம்மன் ஆலயம் உண்டு. அவருடைய பாலப் பருவத்தில் அந்த ஆலயத்தில் நடைபெற்ற வைபவங்கள், திருவிழாக்கள், மடைகள், சடங்குகள், குளிர்த்திப் பாடல்கள் எல்லாம் அவர் நெஞ்சை அள்ளிக் கொள்ளை கொண்டு விட்டன.

இன்று, சிலப்பதிகாரம் என்றால் சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞான கிராமணியார் அதில் ஓர் ''அதாரிட்டி''யாக விளங்குவது போல, ஆயிரத்து தொளாயிரத்து இருபதிலும், முப்பதிலும் இலங்கையிலும் இந்தியாவிலும் சிலப்பதிகாரத்தில் சுவாமி விபுலாநந்தர் ஓர் ''அதாரிட்டி''யாக துறை போயகற்ற பேரறிஞராக விளங்கினார்.

சிலப்பதிகாரத்தில் சுவாமி விபுலாநந்தர் செய்த ஆராய்ச்சியே, மூழ்கியெடுத்த முத்தே பின்னர் யாழ் நூலாகப் பரிணமித்தது.

இளங்கோ என்ற ஒரு துறவி பாடிய சிலப்பதிகாரத்தில் மெய்மறந்து கிடந்த மற்றொரு துறவியான விபுலாநந்தரை பாரதி பாடிய பாடலின் ஓர் அடிகிறங்க வைத்ததில் ஆச்சரியமில்லை.

*அந்த அடிதான் என்ன?*

(27ஆம் பக்கம் பார்க்க)

# சாப்பிட வற்புறுத்தி குழந்தையுடன் வீண் சர்ச்சை கிளப்பாதீர்!



**கேள்வி:** எனது மகள். வயது 35 நாட்கள். தினமும் மாலை வேளைகளில் விடாமல் அழுகின்றாள். அவரது கண்களில் தூக்கம் கொள்ள அறிகுறிகள் தெரிந்தாலும் தூங்குவதில்லை. நான் தாய்ப்பால்தான் கொடுக்கின்றேன். அவரது எடையும் வளர்ச்சிக்கு ஏற்ற விதத்தில் இருக்கின்றது. ஒவ்வொரு தடவையும் பால் அருந்தியதும் வயிற்றோட்டம் இருக்கின்றது. இந்தக் குறிகள் நோய்களின் அறிகுறியா?

**பதில்:** நீங்கள் தாய்ப்பால் கொடுப்பதால் - குழந்தைக்கு தினமும் 10 - 20 தடவை வரை மலம் கழிப்பது சாதாரணமானதே; எதிர்பார்க்கக்கூடிய ஒன்றே. இது வயிற்றோட்டம் இல்லை. புட்டிப்பால் கொடுக்கும் குழந்தைகளுக்கு - மலம் கொஞ்சம் இறுக்கமாக இருக்கும். உங்கள் குழந்தை மாலை வேளைகளில் அழுவதற்கு - வயிற்றில் காற்று இருப்பதுதான் அநேகமாக காரணமாக இருக்கும். மருத்துவரிடம் ஒருதரம் காட்டி. பரிசோதித்து, வேறு எந்தக் கோளாறும் இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும். பால் குடிக்கும்போது - வயிற்றில் காற்றும் சேர்ந்து விழுங்கப்படுவதால்தான் அநேகமாக இந்த மாலைநேர வயிற்றுவலி - அதனால் ஏற்படும் அழுகை ஏற்படுகின்றது. இந்தக் காற்றை கலைத்து ஏப்பமாக அல்லது வாயுவாக வெளியே விடுவதற்கு Gripe Water பாலூட்டலுக்குப் பின்னர் கொடுக்கலாம். பாலூட்டிய பின் குழந்தையை தோளில் சாய்த்து - முதுகை மெதுவாக தட்டிக் கொடுத்தாலும் இந்த் காற்று வெளியேறும்.

**கேள்வி:** எனது குழந்தை வயது 2. இவருக்கு அடிக்கடி காய்ச்சல் வருகின்றது. கடையில் கிடைக்கும் காய்ச்சல் மாத்திரைகளை கொடுத்தால் ஓரிரு நாட்களுக்கு காய்ச்சல் வராது. மாத்திரைகள் நிறுத்தினால் திரும்பவும் காய்ச்சல் ஏற்படுகின்றது. இந்த காய்ச்சலுக்கு காரணம் என்ன?

**பதில்:** உங்கள் குழந்தையின் காய்ச்சலுக்கு காரணம் என்ன என்று எழுந்தமானதில் கூற முடியாது. ஆனால், நீங்கள் கைக்கொள்ளும் முறை - மிக மிகத் தவறானது. காய்ச்சலுக்கு கொடுக்கப்படும் மாத்திரைகள் - குறைந்தது 5 அல்லது 6 மணி நேரத்திற்குத்தான் காய்ச்சலை தணித்து வைக்கும். ஆனால், காய்ச்சலின் காரணத்தை நிச்சயம் குணமாக்காது. உங்களைப் பொறுத்தவரையில் மாத்திரை கொடுக்கப்பட்டதும் காய்ச்சல் குணமாகி விட்டது என்று எண்ணுகின்றீர்கள். தொடர்ந்து காய்ச்சல் மாத்திரைகளை குழந்தைகளுக்கு கொடுப்பது - அதனது ஈரலைப் பாதிக்கும். சில காய்ச்சல் மாத்திரைகள் (Aspirin) வகைகள் குழந்தைக்கு தொடர்ந்து கொடுக்கப்படும் போது உயிராபத்துக் கூடத் தரலாம். எனவே, குழந்தை வைத்தியரின் ஆலோசனையை உடனடியாகப் பெற்று - காய்ச்சலுக்குரிய காரணத்தை கண்டறிந்து - சிகிச்சை பெறுவது அவசியம். அடிக்கடி - காய்ச்சல் ஏற்பட வைரஸ் தொற்று, சிறுநீர் தொற்று, காது தொற்று என்பவை காரணங்களாக இருக்கலாம்.

**கேள்வி:** ஆண். வயது 51. எனது இரண்டு கண்களிலும் Cataract ஏற்பட்டுள்ளது. இரண்டு கண்களையும் ஒரே நேரத்தில் Cataract சத்திர சிகிச்சை செய்யலாமா? இந்த சத்திரசிகிச்சை செய்ய, கண்பார்வை எந்தளவு குறையும் வரை காத்திருக்க வேண்டும்? அதுவரை கண்களுக்கு ஏதாவது சொட்டு மருந்துகள் உபயோகிக்கலாமா?

**பதில்:** இன்றைய உலகில் மிகவும் இலகுவானதும் மிகவும் பாதுகாப்பானதுமான சத்திரசிகிச்சைகளில் இந்த Cataract சத்திர சிகிச்சையும் ஒன்று. எனவே, எதுவித தயக்கமுமின்றி இந்த சிகிச்சையைச் செய்யலாம். நீரிழிவுநோய், இரத்த அழுத்த நோய் உள்ளவர்கள் இந்த நோய்களைக் கட்டுப்பாட்டில் கொண்டுவந்து பின்னரே சிகிச்சை செய்வது உகந்தது. இந்த சிகிச்சை செய்வது எப்பொழுது என்பது Cataract எந்த அளவிற்கு, சாதாரண வாழ்க்கை முறையைப் பாதிக்கிறது என்பதிலேயே தங்கியுள்ளது. Cataract நோய் மெதுவாகவே பார்வையை பாதிக்கிறது. நாளாந்த வாழ்க்கைக்குப் பார்வைக் கோளாறு இடைஞ்சலாக இருக்கின்றது என்ற நிலை ஏற்படும்போது இந்த சிகிச்சையை செய்யலாம் என்று மருத்துவர்கள் அபிப்பிராயப்படுகின்றார்கள். ஆனால், முற்றாகப் பார்வை தெரியாமல் போகும் வரை தள்ளிப்போடாதீர்கள். அதேவேளையில் டாக்டரின் ஆலோசனை இன்றி கண்ணுக்குள் எதுவித சொட்டு மருந்தையும் இடாதீர்கள். சிலவேளைகளில் Cataract நோயினால் கண்ணீர் சுரப்புக் குறைந்து கண்கள் காய்ந்து சிவப்பாகக் கூடும். அவ்வேளைகளில் செயற்கை கண்ணீர் சுரப்பு சொட்டு மருந்து போடுவதற்கு வைத்தியர் ஆலோசனை தருவார். சிறுகுழந்தைகளுக்குத்தான் கண்கள் இரண்டிலும் Cataract ஏற்பட்டிருந்தால் ஒரேவேளையில் இரண்டு கண்களிலும் சத்திரசிகிச்சை செய்வார்கள். பெரியவர்களுக்கு ஒருநாள் தொட்டு ஒருவார இடைவெளியில்தான் - முதல் சத்திரசிகிச்சைக்கு பின்னர் - அடுத்த சத்திரசிகிச்சை செய்வார்கள்.

**கேள்வி:** பெண். வயது 38. எனக்கு இரண்டு ஆண்குழந்தைகள். ஒருவரது வயது 13. மற்றவர் காலம் தாழ்த்தி பிறந்தவர் வயது 5. எனது பிரச்சினை என்னவென்றால் இந்த இருவரது உணவுப் பழக்க வழக்கங்களே. 5 வயது மகன் திடீர் தயாரிப்பு நூடில்ஸ் மட்டும்தான் சாப்பிடுகின்றார். வேறொன்றும் வாயில் எடுப்பதேயில்லை. 13 வயது மகனோ Junk food என்று அழைக்கப்படும் சைனீஸ் றோல்ஸ், பிட்சா (Pizza), கொக்கோகோலா, இனிப்பான பானங்களை மட்டுமே விரும்புகின்றார். இவர்கள் போதிய போஷாக்கு உணவு எடுக்கின்றார்கள் இல்லை என்பது தெரிந்தாலும் அவர்களின் உணவுப்பழக்கங்களை மாற்ற முடியவில்லை. இதுபற்றி உங்கள் ஆலோசனையை அறிய விளைகின்றேன்.

**பதில்:** போஷாக்கான உணவை குழந்தைகளை விரும்பிச் சாப்பிட வைப்பது மிகவும் கஷ்டம் என்பது ஒவ்வொரு பெற்றோருக்கும் பிரச்சினையான விஷயம். குழந்தைகள் இப்படி நினைத்தநேரத்தில் நினைத்த உணவுகளை அடிக்கடி உண்பதும் அவர்களின் வளர்ச்சியில் ஒரு பகுதி என்பதை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும். இவர்களை Fuzzy Eaters என்று குறிப்பிடுவார்கள். முக்கியமாக ஒன்றரை முதல் ஐந்து வயது வரையான பருவக் குழந்தைகள் உணவின் அளவையும் குறைத்து சாப்பிடுவார்கள். இப்படி குறைவாக சாப்பிட்டாலும் அவர்கள் சுறுசுறுப்பாக இருப்பார்கள். அவர்களின் வளர்ச்சியும் சாதாரணமாக இருக்கும்.

இந்த Fuzzy Eating பழக்கத்திற்கு ஓரளவிற்கு தாய்மாரும் காரணம். குழந்தை சரியாகச் சாப்பிடவில்லை என்ற மனோநிலையில் சாப்பாட்டு நேரம் ஒரு யுத்தகளமாகவே சில வீடுகளில் மாறிவிடுவதுண்டு. இதனால், குழந்தையும் தாயும் ஒருவரையொருவர் எரிச்சலூட்டிக் கொண்டு பிரச்சினையை பெரிதாக்கிக் கொள்வர்.

இந்நிலையில் தாய் அமைதியாக, பொறுமையாக இந்தச் சூழ்நிலையை சமாளிக்கவேண்டும். குழந்தையின் இம்மாதிரியான பழக்கத்திற்கு எதுவித நோயும் காரணமில்லை என்பதை வைத்திய ஆலோசனை மூலம் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். குழந்தைக்கு உணவு விஷயத்தில் இதைத்தான் சாப்பிடவேண்டும்; இப்படித்தான் சாப்பிட வேண்டும்; இந்நேரத்தில்தான் சாப்பிடவேண்டும் என்றெல்லாம் கட்டாயப்படுத்தக்கூடாது. குழந்தை பசிக்கும்போது - ஏதாவது சாப்பிடவிரும்பினால் - அது விரும்பிச் சாப்பிடும் உணவோடு மெல்ல மெல்ல போஷாக்கான உணவுகளையும் சேர்த்துக்கொடுக்க வேண்டும். நீங்கள் சேர்க்கும் உணவு ருசியாகவும் பசியைத் தூண்டக்கூடியதாகவும் தெரிவுசெய்ய வேண்டும். குடும்பத்தில் மற்றவர்கள் உண்ணும் உணவே குழந்தைகளுக்கும் கொடுக்கப்படவேண்டும். சாப்பாட்டு நேரம் என்று ஒரு குறிப்பிட்ட நேரம் ஒதுக்கப் பட்டு அந்தவேளையில் குடும்பஅங்கத்தினர் அனைவரும் ஒன்றுகூடி இருந்து உணவுகொள்ளவேண்டும். உணவு நேரத்தில் குழந்தைகளின் கவனத்தை மாற்றக்கூடிய தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், வானொலி நிகழ்ச்சிகள் என்பவற்றை தவிர்க்கவேண்டும். உணவுநேரத்தில் குடும்ப அங்கத்தினர்கள் ஒன்றுகூடி பல விஷயங்களை - முக்கியமாக குழந்தையின் பாடசாலை, நண்பர்கள், பொழுதுபோக்குகள் போன்றவை தொடர்பான உங்கள் ஈடுபாட்டை காட்டும் விதமாக கலந்துரையாடல் செய்யவேண்டும். இதனால் உணவுநேரம் ஒரு மகிழ்ச்சிகரமான காலப்பொழுதாகக் கழியும். குழந்தைகள் பொதுவாக உணவை மெதுவாகவே உண்பார்கள். அவர்களை விரைவாக உண்ணும்படி நிர்ப்பந்திக்கக்கூடாது. உணவுவேளைகளில் நீங்கள் விரும்பிய போஷாக்கான உணவுகளை மெல்ல மெல்ல அறிமுகப்படுத்துங்கள். குழந்தைகளின் நண்பர்களை சிலவேளைகளில் உணவுநேரம் அழைத்து பரிமாறுங்கள். இப்படியாக உணவுநேரத்தை மகிழ்ச்சிகரமாக அமைத்தால் மெல்ல மெல்ல புதிய உணவுப் பழக்கங்களை உங்கள் குழந்தைகள் பழகிக்கொள்ளும். Fast food ஐ முற்றாக வெறுத்தொதுக்காதீர்கள். ஆனால், அதிலும் ஒரு கட்டுப்பாட்டை நீங்கள் விரும்புவதாக குழந்தைகள் அறிய வையுங்கள்.


இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
டாக்டர் எஸ்.அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்த மல்லிமாராய்ச்சி
மாவத்தை, கொழும்பு-14.


**கேள்வி:** ஆண். வயது 30. ஒருநாள் திடீரென்று என் வாய் கோணிவிட்டது. இடதுபக்க முகப்பகுதி வலுவிழந்து விட்டது. இடதுகண் மூடமுடியாமல் திறந்திருந்தது. வைத்தியரிடம் காட்டினேன். 'பயப்பட ஒன்றுமில்லை. இருவாரத்தில் சரியாகிவிடும்' என்று விட்டமின் மாத்திரைகளும் தந்து முகத்தசைகளை மசாஜ் பண்ணவும் சொன்னார். இரண்டு வாரத்தில் முக்கால் வீதம் சரியாகி விட்டாலும் இன்னும் பழைய நிலைக்குத் திரும்பவில்லை. எனக்கு இரத்த அழுத்த நோயோ, நீரிழிவு நோயோ எதுவுமில்லை. எனக்கு வந்தது பாரிசவாத நோயா? அல்லாவிடில் என்னநோய்?

**பதில்:** உங்களுக்கு ஏற்பட்டிருப்பது 'Bell's Palsy என்கின்ற முகவாத நோய். இது பாரிசவாத நோயல்ல. இதற்கு என்ன காரணம் என்று அறியப்படவில்லை. ஆனால், மூளையிலிருந்து முகத்திற்கு வருகின்ற Facial nerve என்கின்ற நரம்புக்கு வைரஸ் தொற்று ஏற்படுவதால் உண்டாகின்றது என்று அனுமானிக்கப்படுகிறது. தசைகளின் வலுவிழப்பைத் தவிர உருசி, கேட்கும் திறன் என்பவையும் குறையலாம். கண்களிலிருந்து தானாகவே கண்ணீர் சுரக்கும். உதடுகளைக் குவித்து 'விசில்' அடிக்கமுடியாது. சிலருக்கு உணவை மென்று சாப்பிடச் சிரமமாக இருக்கும். உங்கள் வைத்தியர் கூறியபடி ஓரிரு வாரங்களில் 80 வீதமான நோயாளர்கள் முற்றாக குணமடைகின்றனர்.

உங்களைப்போல் ஒருவருக்கு சில மாதங்களில் குணம் காணமுடியும். நிச்சயமாக இந்தமுகவாதத்திலிருந்து முற்றாகக் குணமடையலாம்.

இந்த நோய்க்கென்று மருந்து இல்லை. நரம்பின் வீக்கத்தைக் குறைக்க ஸ்டீரொய்ட் வகை மருந்துகளையும் விட்டமின் மாத்திரைகளையும் தருவார்கள். மருந்து எதுவும் உபயோகிக்காமலே முற்றாகக் குணமடைந்தவர்களும் உண்டு. இந்த நோயினால் கண் இமைகளை இறுக்கி மூடமுடியாது இருப்பதால் தூசி துணிக்கைகளினின்றும் கண்களைப் பாதுகாக்க - ஏற்ற நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இரவில் தூங்கும்போது உங்கள் கண்களை மூடித் தூங்க குடும்பத்தாரின் உதவிபெறவேண்டும். கண்களை மூடி ஒரு Eye Pad அணியலாம்.

**கேள்வி:** ஆண். வயது 25. எனக்கு தலையில் பொடுகு உண்டு. எத்தனையோ மருந்துகள் எடுத்தும் பயனில்லை. பரிகாரம் கூறவும்.

**பதில்:** இறந்துபோன சருமக்கலங்கள் அதிகளவில் உற்பத்தியாவதும், சேருவதும்தான் பொடுகு-Dandruff என அழைக்கப்படுகின்றது. பொடுகுக்குப் பல காரணங்கள் உண்டு. எண்ணெய் தன்மையான தலை Pityrosporum என்கின்ற பங்கசு தொற்று, அதிகமாக 'ஷாம்பு, 'ஜெல்', மயிர் சுருட்டிகள் (Hair Curlers) உபயோகித்தல், ஒத்துவராத தலைமயிர் டை (Dye) உபயோகித்தல். இதுதவிர, மனஇறுக்கம், மன உளைச்சல் என்பவை குறிப்பிடப்படுகின்றன.

பொடுகு என்பது ஓர் இயற்கையான - ஆனால், அதிகரிக்கப்பட்ட - செயற்பாடு என்பதால் இதனைக் கட்டுப்படுத்தலாமே ஒழிய - முற்றாகக் குணமாக்கமுடியாது. உங்கள் பிரச்சினைக்கு சரியான காரணத்தைக் கண்டறிந்து அதற்குரிய சிகிச்சை பெற்றால் தலைப்பொடுகைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம்.




வாழ்த்துக்கள்........

எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவிருக்கும் **"அரச புலமைப் பரிசில் பரீட்சை"**யை ஆவலோடு எதிர்கொள்ளத் தயாராகிக்கொண்டிருக்கும் எமது மாணவச் செல்வங்கள் அனைவரும் சிறப்பாகப் பரீட்சை எழுதி கூடிய புள்ளிகளைப்பெற்று சித்தியடைய வேண்டும் என கல்விச்சுடர் பிரார்த்தனை செய்வதோடு தனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறது.

# தரம்-05 புலமைப்பரிசில்

## விசேட மாதிரி வினாத்தாள் - 08

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**பகுதி-II**

01| கீழ்வரும் பந்தியை நன்கு வாசித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக.

இருள் சூழ்ந்த வானத்தில் சந்திரன் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அதிலிருந்து மிகப் பிரகாசமான வெள்ளை நிற ஒளி வீசியது. இடையிடையே மலர்களைத் தூவியதுபோல் சிறிய நட்சத்திரங்கள் பிரகாசித்தன. சந்திர ஒளியினால் சுற்றுப்புறச் சூழல் எமக்குத் தெளிவாகப் புலப்பட்டது. எனினும், கண்ணுக்கு எட்டிய தூரத்தில் வீடு வாசல்களோ, விளக்கொளியோ தென்படாததனால் எமக்குப் பயம் ஏற்பட்டது. இரவு நேரங்களில் மாத்திரம் உணவு தேடி உலவும் பட்சியான ஆந்தை ஹீம்....ஹீம் எனச் சத்தமிட்டது. அவ்வொலியினால் சுற்றாடலில் நிலவிய நிசப்தம் கலைந்தது. இடையிடையே பெரிய வௌவால்கள் வானில் வேகமாகப் பறந்தன. பகற்பொழுதில் பார்க்கக்கூடிய கிளிகள், மைனாக்கள் போன்ற பட்சிகளை இரவு நேரத்தில் நாம் காணமுடியாமல் உள்ளது.

01. பிரகாசமான வெள்ளை நிற ஒளி எங்கிருந்து வீசியது?

.................................................................................

02. சுற்றாடலில் இருந்த நிசப்தம் எதனால் கலைந்தது?

.................................................................................

03. **பிரகாசித்தன** என்பதன் நிகழ்கால ஒருமை வினைச்சொல்

.................................................................................

04. **ஒளியினால** என்பதன் ஒத்தகருத்துச் சொல்

.................................................................................

05. **வேகமாக** என்பதன் எதிர்க்கருத்துச் சொல்

.................................................................................

06. பந்தியிலுள்ள சினைப்பெயரை எழுதுக.

.................................................................................

07. பந்தியிலுள்ள உவமைத் தொடர் ஒன்றை எழுதுக.

.................................................................................

08. கிளி பேசும் அதே போல் ஆந்தையின் ஒலி மரபை எழுதுக.

.................................................................................

09. பெரிய வௌவால்கள் வானில் வேகமாகப் பறந்தன. என்பதிலுள்ள அடைமொழிகளின் கீழ்க் கோடிடுக.

10. பந்தியிலுள்ள அஃறிணை பன்மை இறந்தகால வினைமுற்றை எழுதுக.

.................................................................................

02| பிழைகளைத் திருத்தி எழுதுக.

1) நாய் வாழை ஆட்டிக் குலைத்தது

.................................................................................

2) இன்டைக்கு மளை பெஞ்சது

.................................................................................

03| சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

1) என்பது / களஞ்சியம் / நூலகம் / ஆகும் / அறிவுக் / ஓர்

.................................................................................

2) ஜப்பானில் / மிக / உலகிலே / உள்ளது / சுரங்கப்பாதை / நீளமான

.................................................................................

04| பின்வரும் கருத்துக்களைக் கூறும் பழமொழிகளை எழுதுக.

1) எந்த விடயத்திலும் ஆராய்ந்து அறியாமல் ஈடுபடக்கூடாது.

.................................................................................

2) எமக்கு நன்றி செய்தோரை மறத்தல் கூடாது.

.................................................................................

05| பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய ஆங்கிலச் சொல்லை எழுதுக.

1) தயவு செய்து என்னை மன்னியுங்கள்

.................................................................................

2) சந்தோசமான பிறந்தநாள்

.................................................................................

3) நீங்கள் எங்கே வசிக்கின்றீர்கள்?

.................................................................................

06| பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.

1) **Boat** - ..................................................

2) **Feet** - ..................................................

3) **Shop** - ..................................................

4) **Thursday** - ..................................................

07| பின்வரும் சிங்களச் சொற்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.

1) கிரவா கொள பாட்டுபாய - ..................................................

2) மே மகே பன்சல - ..................................................

3) மேயா மகே சீயா - ..................................................

08| சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

01. தேசியக் கொடியில் பின்வரும் ஆங்கில எழுத்துக்கள் **A,B,C,D** முறையே எந்த நிறத்தைக் குறிக்கின்றன?

1) சிவப்பு, பச்சை, வெள்ளை, மஞ்சள்.
2) பச்சை, சிவப்பு, மஞ்சள், செம்மஞ்சள்.
3) பச்சை, மஞ்சள், சிவப்பு, செம்மஞ்சள்.
4) சிவப்பு, பச்சை, மஞ்சள், செம்மஞ்சள்.





02. தரப்பட்ட படத்திலுள்ள சம்பவங்கள் எதனுடன் தொடர்புபட்டன?

1) இரவு தோன்றப் போவதன் அறிகுறிகள்.
2) மழை வருமுன் அறிகுறிகள்.
3) காலை புலரப்போவதன் அறிகுறிகள்.
4) வெள்ளம் வரப்போவதன் அறிகுறிகள்.




03. பின்வருவனவற்றில் சரியான நடத்தல் முறையைக் காட்டுவது எது?



01 02 03 04

04. இந்த உடுத்தொகுதியின் பெயர் யாது?

1) பெருநாய். 2) சிறுகரடி.
3) கார்த்திகை. 4) வேட்டைக்காரன்.




05. நீரில் கரையும் பொருள் அல்லாதது எது?

1) உப்பு. 2) உரம்.
3) மெழுகு. 4) எலுமிச்சஞ்சாறு.

06. அணி நடையின்போது "இலகுவாய் நில்" என்ற கட்டளையின்போது முதலில் தூக்கி வைக்கவேண்டிய கால் எது?

1) வலது கால். 2) இடது கால்.
3) இரண்டு கால்களும். 4) இரண்டில் ஒன்று.

07. கீழே தரப்படுகின்ற எந்த செயற்பாட்டின்போது சாய்தளம் பயன்படுகிறது?



01 02 03 04

08. தேசிய அடையாள அட்டையை வழங்கும் திணைக்களம் யாது?

1) அஞ்சல் திணைக்களம். 2) கல்வித் திணைக்களம்.
3) ஆட்பதிவுத் திணைக்களம். 4) புள்ளிவிவரத் திணைக்களம்.

09. காயினுள் வித்துக்கள் அதிகளவு இருப்பது,

1) மாவில். 2) தென்னையில். 3) பப்பாசியில். 4) அப்பிளில்.

10. பின்வரும் தாவரங்களுள் எது ஆடாதோடை என்னும் தாவரமாகும்?



01 02 03 04

11. இலங்கையின் மிக நீளமான ஆறு எந்த இடத்தில் கடலில் கடக்கிறது?

1) கொழும்பு. 2) கண்டி.
3) திருகோணமலை. 4) அம்பாந்தோட்டை.

12. அமாவாசை வந்த பின் பூர்வபக்க அட்டமியின் தோற்றம் எவ்வாறு இருக்கும்?

1) 2) 3) 4)






## முன்கதைச் சுருக்கம்

சிக்காக்கோ நகரின் ஒதுக்குப் புறமான ஒரிடத்தில் நியூமூன் வைத்தியசாலை அமைந்திருக்கிறது. கொஞ்சம் தொலைவில் நர்சுகளின் விடுதி இருக்கிறது. மர்ம மனிதனொருவன் நள்ளிரவில் இந்த விடுதிக்குள் நுழைகிறான். பல திகில் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. நர்சுகள் உட்பட ஒரு ரோந்து பொலிஸ்காரன், பிரதேச பொலிஸ் அதிகாரி எனப் பலர் அவனால் கொலை செய்யப்படுகின்றனர்.

ஏன்? என்ன காரணம்?

சிறைச்சாலை அதிகாரியின் அழகிய இளம் மனைவியுடன் றோபோ என அழைக்கப்படும் மர்மமனிதன் உறவுகொள்வதை அதிகாரி கண்டுவிடுகிறான். ஆத்திரமடைந்த அவன் ரகசியமாக தன் மனைவியை கொன்று விடுகிறான். பிணத்தை பெட்டியில் அடைத்து சிறைக்கைதியான றோபோவையே கொண்டுசெல்ல வைக்கிறான். குற்றத்தை றோபோ மீதே சுமத்த வைக்கிறான். பொலிஸாரினால் கடுமையாகத் தாக்கப்பட்ட றோபோ வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்படுகிறான்.

அங்கே என்ன நடைபெறுகின்றது...?

அறைக்குள் நுழைந்ததும், அமுராவின் பிடறி சிலிர்த்தது. கண்களில் திகில் பரவியது.

கட்டிலில் கிடக்கும் அந்த மனிதனின் ஆஜானுபாகுவான தோற்றம்தான் அவளை கலக்கியடித்தது. வெறும் மேனியனாகக் கிடந்த அந்த மனிதனின் உடலை சங்கிலியால் பிணைத்திருந்தார்கள். இடுப்பில் மட்டும் ஒரு தொள தொளப் பான அரைக்காற்சட்டை அணிவிக்கப் பட்டிருந்தது. அது சிறிய துணித்துண்டைப் போல காட்சியளித்தது. அவன் கண்கள் மூடிக்கிடந்தன. பருமனான அவனுடைய நாசியிலிருந்து ஆரோக்கியமான மூச்சுக்காற்று வெளியேறிக் கொண்டிருந் தது. இத்தனை சித்திரவதையின் பின்னரும் ஆரோக்கியமான சுவாசமா? அதிசயம்தான்.

இத்தனை கெடுபிடியிலும், உடல் பஸ்பமான நிலையிலும் அவனால் எப்படி அமைதியாக கண்களை மூடி உறங்க முடிகிறது என்றெல்லாம் அமுராவால் அதிசயப்படாமல் இருக்க முடியவில்லை.

அவனுடைய தலையிலிருந்து, கால்களின் நுனிவரை அமுராவின் கண்கள் ஓடின.

கறுப்பு நிறம். சிலை போன்ற முகம். ஈட்டி போன்ற கண்கள், சதைக்கோலம் திரண்ட இரும்புக்கம்பி போன்ற உடல். அப்பப்பா! பார்ப்பதற்கு பயங்கரமா னவனாகத் தோன்றினாலும் அற்புதமான ஓர் ஆணழகன்தான் அவன். அவள் மனம் பயத்துடன், அதே நேரம் உடல் புளங்காகி தமுடன் சப்புக்கொட்டியது. கண்ணிமை களை படபடக்காமல் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஜீனா இன்னும் உள்ளே வரவில்லை. வெளியில் கதவருகில் நின்றிருந்தாள்.

"என்னடி! என்ன செய்கிறாய்? அடித்து வைத்த சிலை மாதிரி நிற்கிறாய். ஆசாமி உடுப்பில்லாமல் கிடப்பதுபோல தெரிகிறது. என்ன அவனுடைய எதையாவது கண்டு அப்பிடியே சொக்கிப் பொய்ட்டியா, இல்லே பயந்து பொய்ட்டியா...?"

ஜீனாவின் கிண்டலான குரல் ஒலித்தது. அமுரா சட்'டென சுதாரித்துக் கொண்டாள். களுக்'கென சிரித்த அவள்.

"ஜீனா! ஏன் நிற்கிறாய், உள்ளே வா. பயப்பிட ஒன்றும் இல்லை. அதுதான் பொலிஸ் வெளியில் நிற்கிறதே, போதா தற்கு ஆசாமியை கட்டித்தானே போட்டிருக் கிறார்கள்."என்றாள்.

ஜீனா மெல்ல உள்ளே நுழைந்தாள். அவள் மனதில் ஏற்கனவே அச்சம் நிரம்பிக்கிடந்தது. றோபோவை சங்கிலியால் கட்டி இழுத்து வருவதை மிகவும் அருகில் நின்று அவள் பார்த்தாள். முகமெங்கும் இரத்தம் வடிந்து கொண்டிருந்த காட்சியும் அவனுடைய ஆஜானுபாகுவான தோற்றமும் அவளை கதிகலங்கச் செய்திருந்தன.

'ஜீசஸ்! பாவம்! ஏன் இப்படி வதைத் திருக்கிறார்கள்?' என்று கூட அவள் மனம் இரக்கப்பட்டது.

"அது சரி! ஆசாமி யார்?"

"தெரியவில்லை. பெரிய இடத்து சமாச்சாரம் போலத்தான் கெடக்கு. பொலிஸ் பட்டாளத்தைப் பார்த்தால், அவர்களின் கெடுபிடியைப் பார்த்தால் பயமா இருக்கு. எதுக்கும் மெல்லப் பேசு. எந்த புத்துல எந்த பாம்போ?"

"உம்ஹூம். சந்தேகம் உன் கூடவே பிறந்தது. சும்மா அலட்டிக் கொள்கிறாய். அது மட்டுமில்லை. நீ பசப்புகிறாய் என்று எனக்குத் தெரியும்"

"என்னடி சொல்கிறாய். நான் என்ன பசப்புகிறேன்? உன்னைப் போலத்தானே நானும். எனக்கென்ன தெரியும்? சும்மா டிரம்மடிக்காதே. டாக்டர் வில்லியம்தான் உன் பபூன் ஆச்சே. மனுஷன் சொல்லாமலா இருப்பான்?"

"எதை?"

"இவன் யார்? என்ன நடந்தது? இப்படியான விசயங்களைத்தான்."

"ஐயோ! ஒன்னும் சொல்லே இல்லேடி."

"நீயா, உம், பெரிய அமுக்கு முட்டக்காரி. அவனுடைய மர்ம உறுப்புக்கும் கீழே இந்த ஊசியை போடச் சொல்லியிருக் கிறார்கள்."

"என்னது?"

"என்னடி தேள் கொட்டுன மாதிரி குதிக் குறே? உனக்கு விசயம் தெலியாதா?"

"நெசமா தெரியாது."

"உம்ஹூம் தெரியாத மாதிரி நடிக்காதே. ஏதேனும் தொழுநோய் கேசோ தெரியாது."

"அடிபோடி! நர்ஸ் தொழிலுக்கே பொருத்தமில்லாதவள் நீ. பார்! ஒரு ரோம் நகரத்தின் பழங்கால வீரனைப்போல எவ்வளவு திடகாத்திரமுடனும், வலிமையான தோற்றமுடனும் இருக்கிறான். இவனைப் போய் தொழுநோய் அது இது என்று..."

அவள் சொல்லி முடிக்கவில்லை.

"என்ன பேச்சுச் சத்தம்? சட்டுபுட்டுன்னு வேலையை முடிங்க. ஆளை பைசல் பண்ண வேண்டும்." என டாக்டர் வில்லியத்தின் குரல் செல்லமாக அதட்டுவது போல் கேட்டது.

டாக்டர் வில்லியம் அவருக்கு விருப்பமான இந்த நர்சுகளை அதட்டிப் பேசுவதில்லை. எச்சில் ஒழுக கொஞ்சலாகத்தான் பேசுவார்.


ஆனால், இன்று அவர்குரல் அதட்டுவது போலிருந்தது. ஆசாமி எதுக்காகவோ கொஞ்சம் ஆடிப்போயிருக்கிறார் என்று தெளிவாகத் தெரிந்தது.

சட்'டென அந்த அறையின் கதவைத் திறந்த டாக்டர் உள்ளே தலையை நுழைத்தார். 'ஐயோ இந்தப் பிள்ளைகளை அதட்டிப் போட்டேன்' என்று கவலைப் பட்டுவிட்டார் போலத் தெரிகிறது. திறந்த கதவின் உள்ளே நுழைந்திருந்த அவருடைய



மெலிந்த முகத்தில் சுழன்று கொண்டிருந்த பெரிய கண்கள் கோபிக்காதீர்கள் என்பதுபோல் சிமிட்டின. அவர் இந்த மாதிரியான கோணங்கிச் சேஷ்டையில் ஈடுபடுகிறார் என்றால் அதற்குக் காரணம், அவர் பக்கத்தில் யாரோ ஒரு மோசமான ஆசாமி நிற்கிறான் என்றுதான் அர்த்தம்.

பெண்கள் இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். கிளிண்டன் நின்று கொண்டிருப்பது தெரிந்தது. அந்த் ஆசாமியை அவர்கள் அறிவார்கள். அவன் அடிக்கடி நியூமூன் வைத்தியமனைக்கு வருவான். அப்போதெல்லாம் பாரதூரமான ஏதாவது ஒரு சத்திர சிகிச்சைக் காக எவரையாவது கூட்டி வருவான். விசயம் வெளியில் போகாமல் இருப்பதற்காகப் பணத்தையும் அள்ளி வீசுவான்.




கதவு மூடப்பட்டது.

றோபோ கண்களை மூடிக்கிடந்தான். தன்னை கவனிக்க, மருந்து போட இரு இளம் பெண்கள் வந்திருக்கிறார்கள் என்ற நிம்மதி முகத்தில் அரசோச்சுகின்றது.

அமுரா அருகில் போய் நின்றாள். ஏனோ அவள் முகத்தில் வேதனை நிழலாடியது. எத்தனையோ வருத்தக் காரர்களை அவள் அன்றாடம் பார்க்கிறாள். மனதில் கருணையை நிறைத்துக் கொண்டுதான் பணிவிடை செய்கிறாள். ஆனால், இவனிடமோ அளவற்ற பிரியமும் அனுதாபமும் அவள் மனதில் கூடு சமைத்தன. ஏன் இவனை இப்படிப் போட்டு அடித்திருக்கிறார்கள்? என்ன குற்றம் செய்து விட்டான்?

"அடியே! யோசினை போதும். முதலில் அதை செலுத்து."

ஜீனா செல்லமாகக் கடிந்து கொண்டாள்.

அமுரா அவனுடைய கையில் ஊசியை 'நறுக்'கென அழுத்தினாள்.

றோபோ புன்னகைத்தான். கண்ணி மைகள் திறந்தன. 'தேங்ஸ்' உதடுகள் முணுமுணுத்தன.

பாவம் றோபோ! தனக்கு என்ன நடக்கப் போகின்றது என்பதை அவன் அறியவில்லை. அறிந்திருந்தால் பெரிய அனர்த்தமே ஏற்பட்டிருக்கும். அவனுக்குள்ள சக்திக்கும் வலிமைக்கும் இந்த வைத்திய மனையையே நிர்மூலமாக்கியிருப்பான். அவனுக்கு இன் ஜெக்சன் ஊசி ஏற்றுபவர்களும், அறுவை சிகிச்சைக்கென அவனை சூழ நிற்பவர்களும் நிர்மூலமாக்கப்பட்டிருப் பார்கள். உண்மையிலே அமுராவிற்கும், ஜீனாவிற்கும் கூட என்ன நடக்கப் போகின்றது என்று தெரியவில்லை. ரோசி வரவேண்டும். அவளை இன்னும் காணவில்லை. அவள் திமிர் பிடித்தவள் வர மாட்டாள். அதனால் தாங்கள் இருவருமே அனைத்தையும் செய்யவேண்டியிருக்கும் என்ற பயமும் லேசாக இருவரின் மனதையும் கௌவிக் கொண்டது.

அமுரா ஊசியை ஏற்றியதும் ஜீனா தனக்கு சொல்லப்பட்டிருந்த கட்டளையை நிறைவேற்றுவதற்காக றோபோவின் இடுப் பருகில் போய் நின்றாள்.

அவளை திரும்பிப்பார்த்த அமுரா கொஞ்சம் பொறு என்று சொன்னாள். அவள் கண்சாடைக் காட்டி கண்கள் இறுக மூடட்டும், சுவாசம் நன்றாக வரட்டும் என்றாள்.

நாழிகைகள் நகர்ந்தன.

அவனுடைய கண்ணிமைகள் இறுக மூடிக் கொண்டன. சுவாசம் சத்தமுடன் வெளிவர ஆரம்பித்தது.

"சரி, உன் வேலையை ஆரம்பி" அமுரா திரும்பாமலே சொன்னாள்.

ஜீனா, இடுப்பை மூடியிருந்த டிரவ்சரை லேசாக கீழே இழுத்தாள்.

அவனுடைய ஆண்மையைக் கண்டதும் அவள் வெலவெலத்துப் போனாள்.

'ஜீசஸ்!' என்றவாறே இரண்டடி பின் நகர்ந்தாள்.

"என்னடி?" அமுரா திரும்பிக் கேட்டாள். அவள் பார்வையும் அங்கே பதிந்தது.

இருவரும் விறைத்துப்போய் நின்றார்கள்! "என்ன செய்து கொண்டிருக் கிறீர்கள்? உடனடியாக மற்ற ஊசியை அவனுடைய உறுப்பின் கீழே செலுத் துங்கள்"

டாக்டர் வில்லியத்தின் குரல் கடூரமாக ஒலித்தது.

ஜீனா 'சட்'டென அதனை அடிப் பாகத்தில் 'நறுக்'கென செலுத்தினாள். சில நாழிகைகளி லேயே அது உயிர்ப்பு கொண்டது.. சினம் கொண்ட சர்ப்பமென சிலிர்த்து புடைத்து நிமிர்ந்தது.

டாக்டர் வில்லியம் உள்ளே நுழைந்தார். கூர்மையான எலெக்ரோனிக் அறுவை கத்தியுடன், வேறு பல உபகரணங் களுடனும் காணப்பட்ட அவர் சடசடவென தனது காரியத்தில் ஈடுபட்டார். ஒரு கரும்புத் தடியை வேருடன் பிடுங்கி எடுப்பதுபோல் றோபோவின் உறுப்பு முழுமையாக அகற்றப்பட்டது.

றோபோ சவம்போல் கிடந்தான். தனக்கு என்ன நடந்துவிட்டது என்பதை அறியவில்லை. அவன் உடலில் சக்தி வாய்ந்த மருந்துகள் செலுத்தப்பட்டி ருக்கின்றன. அவை அவனுடலை மரக் கட்டையாக்கி விட்டன. அவனுக்கு உணர்வு வருகின்ற போது அவனுடலிலுள்ள காயங்கள் அனைத்தும் மாறிவிட் டிருக்கும். அங்க உறுப்பு அகற்றப்பட்ட காயம் கூட மாறியிருக்கும். ஆனால், ஓர் உறுப்பு இல்லாத மனிதனாக இவ்வுலகில் வாழ முடியுமா? அதை அறிந்து கொண்டபோது ஒரு பிரளயமே ஏற்பட்டுவிட்டது.

(தொடரும்)

# ரஜினியைக் கொண்டாடும் ரசிகர்கள்



சிவாஜியை விட பலமடங்கு அதிக எதிர் பார்ப்பு கிளம்பியுள்ளது. சூப்பர் ஸ்டார் ரஜினி யின் குசேலன் திரைப்படத்துக்கு, இங்கு மட்டுமல்ல...அமெரிக்கா, கனடா மற்றும் ஜப்பான் போன்ற வெளிநாடுகளிலும். தமிழகத்தில்கூட இந்த அளவு குசேலனுக் குக் கொண்டாட்டங்கள் நடக்கிறதா என்ற சந்தேகத்தை எழுப்பும் வகையில் அமெரிக்காவின் பல நகரங்களில் ரஜினிகு கட் அவுட், அன்னதானம், சிறப்பு நிகழ்ச்சி கள் என குசேலன் திருவிழா களைகட்டி வருகிறது.

அமெரிக்காவின் வர்த்தகத் தலைநகர் எனப்படும் நியூயோர்க்கின் நியூஜெர்ஸி பகுதியில் குசேலன் வெளியாகும் திரையரங்கின் முன் ரஜினியின் மிகப் பெரிய வினைல் கட்அவுட் வைக்கப்பட்டுள்ளது. இதை ஓர் அதிசயம் போல் பார்த்துச்செல்லும் அமெரிக்கர்கள், ஆர்வம் மிகுதியில் இந்த கட்அவுட்டுகளுக்கு முன்நின்று புகைப்படம் எடுத்துக்கொள்வதும் நடக்கிறது.

# குருவை கண்கலங்க வைத்த ரஜனி



குசேலன் எப்படி இருக்கிறது? படம்பார்த்து தனது விமர்சனத்தை பதிவுசெய்தார் படத்தின் தயாரிப்பாளரும் ரஜனியின் குருவுமான பாலசந்தர். குசேலன் ஒகஸ்ட் முதலாம் திகதி வெளியாகியது. ரஜனி மற்றும் அவரது குடும்பத்தினருக்காக விசேடமாக சென்னை போர்ம் பிரேம் பிரிவியூ திரையரங்கில் படம் திரையிடப்பட்டது. படத்தின் இறுதிக்காட்சியில் அனைவரும் கண்கலங்கியதாக தெரிவித்தார் பி.வாசு. குறிப்பாக ரஜனியின் நடிப்பு, படம் குறித்து கருத்துச் சொன்ன பாலசந்தர் இது வழக்கமான ரஜனி படமல்ல. மிகச்சிறந்த படம். கிளைமாக்ஸில் என் கண்களை கலங்கவைத்து விட்டார் ரஜனி. சூப்பர் ஸ்டாராக உள்ளவருக்கும், ஏழையான அவரது நண்பருக்கும் உள்ள மனிதாபிமான உணர்வை வெளிப்படுத்தும் விதமாக இப்படம் அமைந்துள்ளது. படம் பார்க்கும் ஒவ்வொருவரும் கண்கலங்கியபடிதான் வருவார். கடைசி இருபது நிமிட கிளைமாக்ஸ் மிகச் சிறப்பாக வந்துள்ளது என சிலாகித்துப் பேசினார் பாலசந்தர்.

அதிரடி ரஜனி குசேலனில் சென்டிமென்ட் ரஜனியாக அசத்தியுள்ளார் என்பதே படம் பார்த்தவர்கள் சொன்ன கருத்தின் சாராம்சம்.






நட்பின் பெருமையை பறைசாற்றும் வகையில் வந்திருக்கும் இன்னொருபடம் குசேலன். மலையாளத்தில் கதபறயும் போல் என்ற பெயரில் வெளியான படத்தின் தமிழ் ரீமேக்தான் குசேலன். மலையாளத்தில் மம்முட்டி நடித்த கேரக்டரில் தமிழில் ரஜனிகாந்த் நடித்திருக்கிறார். ஆனால், ரஜனிகாந்த் 60 நிமிடங்கள் திரையில் தோன்றுவது தமிழ் குசேலனின் சிறப்பு. கதையை அழகாக மெருகேற்றி செதுக்கியுள்ள இயக்குநர் பி.வாசு கூட்டணி அமைத்து மீண்டும் வெற்றி பெற்றிருக்கிறார்.

மலையூர் கிராமத்தில் முடிதிருத்தும் கடை நடத்துகிறார் பசுபதி. அவரது காதல் மனைவி மீனா மற்றும் 3குழந்தைகளுடன் கஷ்டமான சூழ்நிலையில் வாழ்க்கையை ஓட்டிவருகிறார். படம் தொடங்கி சுமார் அரைமணி நேரம் வரை பசுபதியின் பாத்திரம் மின்னுகிறது. அந்த ஊருக்கு சினிமா சூட்டிங்கிற்காக வருகிறார் சூப்பர் ஸ்டார் நடிகரான ரஜனிகாந்த். சூப்பர் ஸ்டார் நடிகரைப் பார்க்க ஊரே திரளுகிறது. ரஜனியின் கடைக்கண் பார்வை தங்கள் மீது பட்டு விடாதா என்று ரசிகர்கள் ஏங்குகிறார்கள். ஆனால் பால்யகால நண்பரான பசுபதி மட்டும் ரஜனியைப் பார்க்க தயங்குகிறார். ஊரில் உள்ள பலரும் அவரிடம், சூப்பர் ஸ்டாரிடம் போய் உதவிகேள் என்று சொல்கிறார்கள்.

25வருஷத்துக்குப் பிறகு அவரைப் பார்த்தால் என்னையெல்லாம் அவருக்கு ஞாபகம் இருக்குமா? என்று தயங்கும் பசுபதி கடைசியில் சூப்பர் ஸ்டாரை எப்படி சந்திக்கிறார்? சூப்பர் ஸ்டார் தனது பால்யகால சிநேகிதனை ஞாபகம் வைத்திருந்தாரா? அவருக்கு உதவி செய்தாரா? என்பதுதான் படத்தின் மீதி கதை.

படத்தில் பசுபதியின் நடிப்பைப் பாராட்டு அல்லது ரஜனியின் சூப்பர் ஸ்டைல் நடிப்பைப் பாராட்டுவதா என்று கேட்கும் அளவுக்கு இருவருமே நடிப்பில் வெளு கட்டியிருக்கிறார்கள்.

பசுபதியின் உருக்கமான நடிப்பு முத்திரை பதிக்கிறது. படம் தொடங்கியது முதல் கடைசி வரை பரிதாப தோற்றத்துடன் தோன்றும் பசுபதி நடிப்பில் இன்னும் தேறிவிட்டார். அதிலும் நட்பு பணத்துக் அல்ல என்று நட்பைப் போற்றும் காட்சி ரசிக்க வைக்கின்றன. பசுபதிக்கு போட்டி சலூன் நடத்தும் காரக்டரில் வடிவேலு வயிறு குலுங்க சிரிக்கவைக்கிறார். மீனா கஷ்டப்படும் கணவனுக்கு நல்ல துணை இருந்து ஆலோசனை சொல்வதும் கண அனுசரித்துச் செல்லும் காட்சிகளும் பெண்களைக் கவரும். நயன்தாராவை கவர்ச்சிக்காக மட்டுமே பயன்படுத்தியிருக்கிறார்கள்.

ஜி.வி.பிரகாஷின் இசையில் பாடல்கள் இனிமை. சினிமா சினிமா பாடலில் அரவிந்த் கிருஷ்ணாவின் கமரா நன்றாக சுழன்றிருக்கிறது.






சத்யம் படத்தில்
விஷால், நயன்தாரா

# நயன்தாராவின் இளமை ரகசியம்

'சத்யம்' படத்தில் நயன்தாராவின் இளைத்த தேகம் பார்த்து, சக நடிகைகளுக்கே பொறாமை. எப்படி கிடைத்தது இந்த ஸ்லேண்டர் உடம்பு? 'ஐயா' வில் நயன்தாரா அறிமுகமானபோது, குடும்பப் பாங்கான வேடங்களுக்கே இந்தக் குத்துவிளக்கு லாயக்கு என தவறாக எடை போட்டனர். வல்லவனில் அந்த உதட்டு கடியும், யம்மா யம்மம்மா ஆட்டமும் நயன்தாராவின் ஹோம்லி இமேஜை காலி செய்தன. இருந்த கொஞ்ச நஞ்ச இமேஜையும் இல்லாமல் செய்தது 'பில்லா' வின் டூ பீஸ் தரிசனம். நயன்தாராவின் உச்சபட்ச அழகு பில்லாதான் என்று சொன்னவர்களை பொறாமைப்பட செய்வதுபோல் புதுப்பொலிவுடன் சத்யத்தில் நடித்துள்ளார் நயன்தாரா. இதற்குக் காரணம் விஷால் என்றால் நம்பமுடிகிறதா? 'சத்யம்' படத்திற்கு சிக்ஸ் பேக் அப் உடம்பு தேவை என்பதால் பிரசாத் என்ற டிரெயினரிடம் ஸ்பெஷல் பயிற்சி எடுத்துக்கொண்டார் விஷால். அவரின் கட்டுமஸ்தான உடம்பில் கிறங்கி இது எப்படி சாத்தியம் என நயன் கேட்க பிரசாத்தை அவருக்கு அறிமுகப்படுத்தியுள்ளார். சிக்ஸ் பேக் அப்ஸ் ஸ்பெஷலிஸ்ட் பிரசாத் நயன்தாராவுக்கும் பயிற்சி யளித்துள்ளார். இதனால், உடம்பு சுறுசுறுப்பாக இருப்பதாகவும் உடம்பின் வனப்பு கூடியுள்ளதாகவும் சத்யம் பாடல் காட்சியில் பயிற்சியின் பலனை முழுமையாக ரசிகர்கள் காணலாம் என்று கூறியுள்ளார் நயன்தாரா.



மீனாட்சி

# கமலுக்கு நோ சொன்ன கஜோல்

மர்மயோகியில் தனக்கு ஜோடியாக நடிக்குமாறு கேட்டுக்கொண்ட கமலுக்கு ஆரம்பத்தில் ஒப்புக்கொண்ட கஜோல் இப்போது தனது நிபந்தனைகளை கமல் ஏற்க மறுப்பதாகக் கூறி நடிக்க மறுத்துவிட்டார். இதுகுறித்து நம்பகமானசில வட்டாரங்கள் இப்படிக் கூறுகின்றன.

இந்தப் படத்தில் நடிக்க மிகப்பெரிய தொகையை கஜோலுக் சம்பளமாகத் தருவதாகக் கூறியிருந்தாராம் கமல். கஜோலின் சம்மதம் பெறுவதற்காக அவரது கணவர் அஜய்தேவ்கனிடமும் பேசியிருந்தாராம் கமல்.

இதைத் தொடர்ந்து நடிப்பதற்கு முதலில் ஒப்புக்கொண்ட கஜோல் சில நிபந்தனைகளை விதித்ததாகக் கூறப்படுகிறது.

"நெருக்கமான காதல் காட்சிகளில் நடிக்கமாட்டேன். முத்தக்காட்சிகளிலும் நடிக்கமாட்டேன் மற்றும் வெளிநாடுகளில் படப்படிப்பு நடந்தால் வரமாட்டேன் என ஏகப்பட்ட கண்டிஷன்கள் போட சற்று யோசனைக்குப் பிறகு ஒப்புக்கொண்டாராம் கமல். அனால் சில தினங்களுக்கு முன்னர் பத்திரிகையாளர்கள் சிலருக்குப் பேட்டியளித்த கமல், இந்தப் படத்தின் படப்பிடிப்பை சுவிட்சர்லாந்தில் நடத்தப்போவதாகக் கூறியிருந்தார்.

வெளிநாட்டில் படப்பிடிப்பு நடத்தினால் இந்தப் படத்தில் தன்னால் நடிக்கமுடியாது என்றும் நட்புடன் இந்தப் படத்திலிருந்து விலகிக்கொள்ள விரும்புவதாகவும் கூறிவிட்டாராம் கஜோல். வேறுவழியின்றி இப்போது நயன்தாராவின் பதிலுக்குக் காத்திருக்கிறார் உலகநாயகன்.



திருமண வரவேற்பில் கோபிகாவும் அவரது கணவரும்

## பிள்ளையார் படத்தில் சச்சின்

இதுவரை விளம்பரப் படங்களில் மட்டுமே நடித்துவந்த உங்கள் சச்சின் டெண்டுல்கர் முதல்முறையாக வெள்ளித்திரையிலும் தனது நடிப்பாற்றலைக் காட்டவருகிறார். கடவுள் கணேசரின் திருவிளையாடல்களை விளக்கும் பாலிவுட் படம் ஒன்றில் நட்சத்திரக் கிரிக்கெட் வீரர் சச்சின் கேமியோ ரோலில் நடிக்கவுள்ளார். 'விக்னஹார்த்த ஸ்ரீசித்திவிநாயக்' என்று பெயரிடப்பட்டுள்ள புதியபடத்தில் கிரிக்கெட் வீரராகவே சச்சின் நடிக்கிறார்.



[illegible] படத்தில் சினேகா

## சல்மான் கானின் மிரட்டல்

முன்பு ஐஸ்வர்யா ராய் வீட்டுக்கு வீட்டுக்கு நள்ளிரவில் போய் வெளியே நின்று தவைத் தட்டி அமர்க்களம் செய்தது போல, ஷாருக்கான் வீட்டுக்குப் போய் ரகளை செய்து அவரது மனைவியின் பெயரைச் சொல்லி மிரட்டியும் தைரியமாக இருந்தால் வெளியே வா என்று ஷாருக்குக்கு சவால்விட்டும் அமளியை ஏற்படுத்தியுள்ளார் சல்மான்கான்.

முன்பு ஐஸ்வர்யாராயுடனான சர்ச்சையிலும் பின்னர் மான் வேட்டையாடி சிறைக்குசென்று தற்போது பிணையில் வெளியே வந்திருக்கும் சல்மான், ஷாருக்கானுடன் காத்ரீனாவின் பிறந்தநாள் விழாவில் ஷாருக்கானை வம்புக்கு இழுத்துள்ளார்.

'சர்ச்சை என்கிற சல்மான் கான்' என்று சல்மானுக்கு பெயரை மாற்றிவைத்து விடலாம் அந்தளவுக்கு அவரும் சர்ச்சையும் நட்புப் பாராட்டி வருகின்றன.

## ஆதரவற்றோர் இல்லங்களுக்கு கமல் 50 மின்விசிறிகள்

தசாவதாரம் படம் வெற்றிகரமாக 50 நாட்களைக் கடந்து ஓடிக் கொண்டிருப்பதைக் கொண்டாடும் வகையில் ஆதரவற்றோர் இல்லங்களுக்கு 50 மின்விசிறிகளை வழங்கினார் உலகநாயகன் கமல்ஹாசன்.

சென்னை, கோவை, ஆத்தூர், சேலம், ராசிபுரம், கும்மிடிப்பூண்டி, பொன்னேரி, பெங்களூர் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 50முதியோர் இல்லங்கள், ஆதரவற்றோர் ஆசிரமங்களைத் தேர்ந்தெடுத்து இந்த மின்விசிறிகளை வழங்கியுள்ளது தமிழக கமல்ஹாசன் நற்பணி இயக்கம்.



ராஜாதி ராஜா படத்தில் லோரன்ஸ்



## அழகர்மலையில் இசைஞானி

இசைஞானி இளையராஜாவை நடிக்கவைக்க அவரது நெருங்கிய நண்பர் பாரதிராஜா உட்பட நிறையப்பேர் முயன்றும் அவர் மறுத்துவிட்டார்.

ஆரம்பநாட்களில் நிழல்கள் படத்திலும் பின்னர் சாதனை படத்திலும் ஒவ்வொரு காட்சியில் அவரை இசையமைப்பாளராகவே காட்டியிருப்பார்கள். புதுப்புது அர்த்தங்கள், கரகாட்டக்காரன் படங்களிலும் ஒருகாட்சியில் வருவார் ராஜா.

ஆனால், முதல்முறையாக இளையராஜாவை ஒரு முழு பாடல் காட்சியிலும் நடிக்கவைத்துப் படமாக்கியிருக்கிறார் படத்தின் தயாரிப்பாளரும் இளையராஜாவின் பால்ய காலத் தோழருமான சங்கிலி முருகன், அழகர் மலை படததுக்காக. தான் படித்த பண்ணைபுரம் பள்ளிக்கு ராஜா செல்வது போலவும் பின்னர் திருவண்ணாமலை ரமணர் ஆசிரமத்துக்குப் போய் தியானிப்பத போலவும் இந்தப் பாடல் காட்சியில் படமாக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து சங்கிலி முருகன் கூறுகையில்:- "எனக்கும் ராஜாவுக்கும் உள்ள உறவு, ஒரு அண்ணனுக்கும் தம்பிக்குமான பாசம். என் படங்களை ராஜாவின் இசைதான் ஜெயிக்கவைத்தது. அந்த ராஜாவை கௌரவிக்க நான் செய்த சின்ன முயற்சி இது. உண்மையில் இது என் படத்துக்குத்தான் கௌரவம்" என்றார்.



## விஞ்ஞானச் சிறுகதை

# வானத்தில் ஒரு மௌனத் தாரகை

1

காலையிலேயே போட்டோ எடுக்க வந்தார்கள். துருவா நளினியையும் வினோத்தையும் தொட்டுக்கொண்டு சிரித்துக் கொண்டிருக்க, ஸ்டில் காமிராக்கள் 'க்ளிக் க்ளிக் க்ளிக்' என்று பேசின. ஆர்க் விளக்கை ஒருத் தன் உயர்த்திப் பிடிக்க திரைப்படக் காமிராக்கள் விர்ர்ரின.

''ஆல்ரைட், ஆல்ரைட், நீங்க போகலாம். அவருக்கு ஏகப்பட்ட வேலையிருக்கு'' என்று நாராயண்ராவ் அதட்ட, மேசைமேல் டெலிபோன் ஒலித்தது.

''ஹலோ!''

ராவ் சட்டென்று உஷாரானார். ''ஷ்ஷ'' என்று மற்றவர்களை அதட்டினார். ''எஸ் ஸார்! இருக்கார் ஸார்! இதோ ஸார்! கூப்பிடறேன் ஸார்!'' என்று டெலிபோனின் வாயைப் பொத்தி 'தலைவர்' என்றார். துருவா பாய்ந்து டெலிபோனை வாங்கிக்கொண்டான்.

''குட்மோர்னிங் ஸார்! துருவா ஹியர்!''

தலைநகரிலிருந்து தலைவரின் குரல் துல்லியமாக ஒலித்தது. ''குட்மோர்னிங்' துருவா! எப்படி இருக்கிறாய்?''

''மிகவும் சந்தோஷமாக! மிகவும் ஆர்வமாக!''

''எல்லாம் தயாரா?''

''தயார் ஸார்!''

''துருவா! இந்தத் தேசமே உன்னைப் பற்றிப் பெருமைப்படுகிறது.''

''அதெல்லாம் பெரிய வார்த்தைகள். நான் என் கடமையைச் செய்கிறேன் ஸார்! நீங்கள் இருக்கும்வரை எனக்கு என்ன ஸார் கவலை?''

''உன் துணிச்சலுக்கும் இளமைக்கும் கட்டுப்பாடான மனத்திற்கும் நவீன இந்தியா அஞ்சலி செய்கிறது. இருபத் தொன்றாம் நூற்றாண்டின் தலைசிறந்த இந்தியர்களின் வரிசையில் நீ பிரதான இடம்பெறுவாய். நீ செய்வது ஒரு மகத்தான காரியம்!''

''உங்களைப் போன்ற சிறந்த தலைவரிடமிருந்து, இந்த நாட்டின் முதல் குடிமகனிடமிருந்து இந்தப் பாராட்டு வார்த்தைகளைப் பெற நான் மிகவும் பெருமைப்படுகிறேனே!''

''துருவா! உன் பிரயாணத்தின் ஒவ்வொரு கணத்தையும் நான் பார்த்துக் கொண்டுதான் இருப்பேன். உன் மனைவிக்கு என் நமஸ்காரங்கள். உன் மகனுக்கு என் அன்பு முத்தங்கள். ஆண்டவன் உன்னோடு இருக் கட்டும்!''

போனைவைத்தபோது துருவாவுக்குப் பெருமிதம் நெஞ்சு பூரா நிரம்பி வழிந்தது. தலைவர்! அகில இந்தியாவையே அராசாளும் ஆட்டிப் படைக்கும் ஜெனரால் விக்ரம் என்னை மதித்து என் வீட்டு நம்பருக்கு டெலிபோன் செய்து, அன்பாக விசாரித்து, அவ்வளவு கீர்த்தி பெறுவதற்கு நான் என்னத்தைச் செய்யப் போகிறேன்? கேவலம் ஒரு ஸாட்டி லைட்டை, செயற் கைக் கிரகத்தை மேலே சென்று பழுதுபார்க்கப் போகிறேன்.

''மிஸ்டர் துருவா, வாருங்கள்!'' என்றார் நாராயண் ராவ் பிரத்தியேகமாக நியமிக்கப் பட்ட பொதுஜனத் தொடர்பு ராவ். ''டெலி விஷனில் உலகப் பத்திரிகை நிருபர்களைச் சந்திக்கப் போகிறீர்கள். பதில்கள் ஜாக்கிரதையாகவே இருக்கட்டும். என்ன?''

''கவலைப்படாதீர்கள்.''

அறைக்குள் நுழைந்தவுடன் மறுபடி, பளிச் பளிச் பளிச்... ''மிஸ்டர் துருவா! எப்படி இருக்கிங்க?''

''சந்தோஷமா!'' அறையில் நூறு பேர் இருந்தார்கள்.

'நாளைக்குக் கிளம்ப போகிறோமே என்று உங்க மனசிலே கொஞ்சம் கூட ஒரு ஒரு...''

''பயமா? ம்ஹூம்!''

''பயம் இல்லை! ஒருவிதமான பதட்டம்?''

''பதட்டம் கூட இல்லை. ஒருவித எதிர்பார்ப்பினால் என் உடம்பு பூரா ஒரு மின்சாரம் மாதிரி உணர்கிறேன்.''

''நீங்க எப்படி ஃபீல் பண்றீங்க நளினி?''

'எனக்குப் பயமாகத்தான் இருக்குது. நல்லபடியா திரும்பி வநது சேரணுமேன்னு கடவுளை வேண்டிக்கிட்டிருக்கேன்!''

ஹாரிஸன் ஃப்ரம் நியூயார்க் டைம்ஸ்!

''மிஸ்டர் துருவா, நீங்க போகிற மிஷன் தோல்வி அடைவதற்கும் சாத்தியம் இருக்கிறது என்கிறார்களே?''

''இருக்கிறது. ஆனால், வெற்றி அடைய அதிகப்படியான சாத்தியம்?''

''அப்படித் தோல்வி அடைந்தால் நீங்க போய் வருவதே முழுக்க விரயமாகிவிடும். இல்லையா?''


கோபம் வந்தது, நாராயண்ராவ் சைகை செய்யச் சற்று அடக்கிக்கொண்டான். திமிர்! ''மிஸ்டர் ஹாரிஸன்! 'இன்ஸாட் ஒன்பது' என்று இப்போது விண்வெளியில் எங்கள் செயற் கைக் கிரகம் ஒன்று பறக்கிறது. 36,000 கிலோ மீட்டரில். இதற்கு மொத்தம் இந்திய அரசாங்கம் செலவழித்தது இருபதுகோடி ரூபா. இருபத்து நாலாயிரம் டெலிபோன் இணைப்புகள். நான்கு டெலிவிஷன் இணைப்புகள்...''

ஹாரிஸன் ''எல்லாம் தெரியும் எங்களுக்கு! பிரமாதமான ஸாட்டிலைட்தான். ஆனால், அது வேலை செய்தது...''

''பதினைந்து நாள்'' - க்ராலி ஃப்ரம் டெய்லி டெலிகிராஃப்.

துருவாவுக்கு இப்போது சலிப்பு ஏற்பட்டது. இருந்தும் பொறுமை வேண்டும்!

''டெலிகமாண்டுகள் டெலிமெட்ரி மூலம் ஸாட்டிலைட் உயிருடன் இருப்பது தெரிகிறது. ஸோலார் பானல்களில் ஒன்று ஒரு தப்பான ஆணையை எங்கோ பெற்று, தன்னைத்தானே மூடிக் கொண்டு விட்டது...''



''எனவே, வானத்தில் உலாவும் மௌனத் தாரகையாகிவிட்டது.''

''சுலபமாக என்ன தவறு நிகழ்ந்திருக்கிறது என்பது எங்களுக்குத் தெரிகிறது. ஒரு மைக்ரோ ஸ்விட்சை அழுத்தி ஒரு ஓவர் ரைடு கொடுக்க வேண்டும். அஞ்சு நிமிஷ வேலை. ஆனால், 36,000 கி.மீ. தள்ளி இருக்கிறதே! ஸோ நியர் பட் ஸோ ஃபார்!''

''இதற்கு பதில் புதிய ஸாட்டிலைட்டையே நல்லதாக ஒன்று அனுப்பிவிடலாமே!''

''புதிய ஸாட்டிலைட் செய்வதற்கு மூன்று வருஷம் ஆகும். செலவு இருபத்திரண்டு கோடி ஆகும். இப்போது என்னை, ஒரு முழு இன்ஜினியரை அனுப்புவதற்கு... எவ்வளவு செலவு மிஸ்டர் ராவ்?''

''மூன்றரைக் கோடி.''

''எனக்கு விஷயம் தெரியும். எந்த இடத்தில் பழுது என்பதும் தெரியும். ஸாட்டிலைட்டிற்கு மீண்டும் உயிர் கொடுப்பதற்குச் சாத்தியக் கூறுகள் மிக அதிகம்.''

''நீங்கள் ஓர் இன்ஜினியர். ராக்கெட் செலுத்தப் பயிற்சி பெற்றீர்கள். அதுபற்றி ஏதாவது...?''

'பயிற்சி பயிற்சி பயிற்சி! ஆறுமாதம் நெக்கு வாங்கிவிட்டார்கள். ஸிமுலேட்டரில், ஸென்ட்ரிஃப்யூஜில், பற்பல ஜெட் விமானங் களில்...''

''தலைவர் உங்களிடம் என்ன சொன்னார்?''

''உன்னால் எங்களுக்கு இப்பெருமை' என்றார். எனக்கு உடம்பெல்லாம் பூரித்தது... ஆண்டவன் உன்னோட இருக்கட்டும் என்று ஆசி கூறினார்.''

''ஆண்டவன் என்றா சொன்னார்?''

''ஆம்''

''தனியாகப் போகிறீர்களே, பயமாக இல்லை?''

''இந்தக் கேள்வி மீண்டும் வருகிறது. ரேடியோ தொடர்பு எப்போதும் இருக்கிறது. டெலிவிஷன் இருக்கிறது. எப்போதும் நான் என் மனைவி, மகனிடம் பேச முடியும். பூமித்தொடர்பு அறுகாது.''

''ஸாட்டிலைட்டை அணுகி ரிப்பேர் செய்கையில்?''

''அப்போதுகூட! தாய்க் கப்பலிலிருந்து நான் வெளியே வந்தாலும் ஸாட்டிலைட்டை அணுகும்போது ஒரு தொப்புள்கொடி போலத் தக்க இணைப்பு எப்போதும் இருக்கவே இருக்கும்.''

''தாங்ஸ் ஜெண்டில்மென்!'' என்று வெட்டினார் நாராயண் ராவ்.

நான்கு மணிக்கு லிஃப்ட் ஆஃப். ஒன்பது மணியிலிருந்தே ஏற்பாடுகள் துவங்கி விட்டன. நளினிக்கும் வினோத்துக்கும் டாட்டா காட்டி விட்டு காங்ப்ளாங்க்கில் நடந்தான். ராக்கெட்டைத் தழுவிக்கொண்டிருந்த எட்டு மாடிக் கட்டடத்தில் முதல்மாடியில் நுழைந்தான். கண்ணாடி அறைக்குள் சென்று கல்யாண மாப்பிள்ளை போல் அவனை அலங்காரம்செய்ய மூன்று பேர் வந்தார்கள். கண்ணைப் பறிக்கும் வெண்மையில் ஸ்பேஸ் உடை அணிந்தான். அணிந்து அதன் அக்ரிலிக் மூடியிலிருந்து கண்சிமிட்டிச் சிரித்தான். ஹெல்மட் தலைமேல் இந்தியச் சிங்கம் பொறித்திருந்தது. அதேபோல் புஜத்திலும். ஒக்ஸிஜன் இணைப்பு முதுகுப் பகுதியில். ஒரு குட்டி டிரான்ஸ்மிட்டர் இடதுகை விரல்களில். செயல்பாட்டில் சின்னச்சின்ன ராக்கெட் குழந்தைகளின் ப்ஸ்ஸ சப்தம் கேட்க... ஒவ்வொன்றாக ஒவ்வொன்றாகப் பகுதி பகுதியாக சாதனங்கள் பொருத்தப்பட்டு, ராக்கெட்டின் எட்டாவது மாடி உச்சிக்கு மிக மெதுவாகத் திறந்த லிஃப்ட்டில் சென்றான். கீழே டெக்னிஷியன்கள் பலர் அவனுக்குச் சந்தோஷத்துடன் சைகை செய்து விடைகொடுத்தார்கள்.

பம்பர வடிவத்தில் இருந்த உச்சிப் பகுதியில் ஒரு கதவுச் சுளையைத் திறந்து அவனை இறக்கினார்கள். மூடினார்கள். அவனைச் சுற்றிலும் ஒரே டயல்கள். ஸ்விட் சுகள். எண்கள். எழுத்துகள். விளக்குச் சிமிட்டல்கள். மெதுவான ''ஙீரும்... காரம்.''

அந்தத் தனிமையில் வயிற்றில் திகிலாக உணர்ந்தான். சற்றுதான்.

ஹம்ஸா!

அதுதான் அவன் செலுத்தப்போகும் கலத்தின் பெயர். இப்போது அவன் ஏற்பாடு செய்ய வேண்டியது அதிகமில்லை. எல்லாம் பிற்பாடுதான். அவனுக்குக் கீழே இருக்கும் ராட்சச மூன்று பகுதி ராக்கெட் தொண்ணூறு சதவிதம் பிரயாணத்தை அதுதான் பார்த்துக் கொள்ளப் போகிறது...

காதில் சிபார்க்கும் சங்கேதங்கள் ஒவ்வொன்றாகக் கேட்டன.

செக் ஃப்யூல் ப்ரெஷர்.

செக் பெர்கஷன் ஸ்விட்ச்.

செக்.

மூன்று மணி நேரமாகும். ஆயிரம் விஷயங்கள் பார்க்க வேண்டும்.

திடுதிடுவென்று பூமி நடுங்கும் சப்தம். ஜன்னல்கள் அதிர ஏதோ ஒரு சோம்பேறி ராட்சசன் போலப் புறப்பட்டு வாலில் ஆரஞ்சு ஒளி. ஆரஞ்சுக்குள் வெண்மை நெருப்பு. அதற் குள் சிறிய வெண்மை... என்று நடுவானத்தில் ஒரு செங்குத்துக் கவிதை போல ராக்கெட் உயிர்த்து உயர்ந்தது!

துருவாவுக்கு ஜி சக்திகளின் அழுத்தம் வயிற்றைப் பந்தாக்கியது. இன்னும் இன்னும் இன்னும் சக்தி...

'இன்னும் இன்னும் வேகம்!

இந்தியா முழுவதும் ரேடியோவிலும் டெலிவிஷனிலும் கேட்டு தெரிந்து கொண்டிருந்த மகத்தான அம்புப் பாய்ச்சல்!

பர்ஃபெக்ட்! ஆல் சிஸ்டம்ஸ் கோ!

பூமியின் ஆகர்ஷணச் சக்தியை மீறும்போது புதிதாகப் பிறந்தது போல உணர்ந்தான். உட்கார்ந்திருந்தும் உட்கார்ந்தது போலில்லாத பஞ்சு நிலை. கனவு மெத்தை நிலை...

''ஹம்ஸா. கண்ட்ரோல்.''

''கம் இன்.''

''எப்படி?''

''எல்லாம் ஒழுங்காகச் செயல்படுகின்றன.''

''வெரிகுட்.''

''நீ மெதுவாக மெதுவாக இன்ஸாட்டை அணுகுகிறாய். நூறுமைல் இருக்கும்போது சொல்கிறேன்.''

''அதுவரை?''

''தூங்கு.''

''என் மனைவியோடு பேசலாமா?''

''தாராளமாக சானல் தருகிறேன். இரு!''

''நளினி!''

''என்னங்க!''

''பார்த்தியா?''

''பார்த்தேங்க... அப்பா!''

''ஹாய் வினோத்!''

''எவ்வளவு ஸ்பீட் போறீங்க?''

''பதினெட்டாயிரம் மைல்.''

''நிறைய இல்லை?''

''ஸாரி துருவா. கட் பண்ண வேண்டியிருக்கிறது. தலைவர்.''

''ஹலோ துருவா!''

''ஹலோ ஸார்!''

''எப்படி உணர்கிறாய்?''

''உலகத்தின் உச்சியில்!''

''எடையற்ற தன்மை எப்படி இருக்கிறது?''

''குளுகுளு என்கிறது. மிதக்கிற மாதிரி இருக்கிறது.''

''ரொம்ப நன்றி துருவா. ஜெய்ஹிந்த்!''

அன்புள்ள கடவுளே! என்ன ஓர் அற்புதக் காட்சி. வானம் இவ்வளவு வெல்வெட் கருப்பா? அதில் பதிந்து பதிந்து இதோ எப்படிப் பிடிக்கிற மாதிரி இத்தனை நிறங்களா? பூமி விளிம்பில் இவ்வளவு வெளிச்ச வித்தியாசங்களா? அதோ ஆப்ரிக்கா. என் சுட்டு விரல் அளவு! இது இந்தியா. என் சுண்டுவிரல்! மேகங்களை இவ்வளவு மேலே இருந்து பார்ப்பதில் அந்தத் திட்டுகளின் பிசிறல். கடவுள் ஒரு மாடர்ன் ஆர்டிஸ்ட்!

கடவுள்! என்னை இவ்வளவு தூரம்கொண்டு வந்தவர் அவர்! என்னை அங்குக் கொண்டு சென்று கடமை முடிந்த பின் திரும்ப பத்திரமாக அழைத்துச் சென்று வீட்டுக்குச் சேர்ப்பிக்கப் போகிறவரும் அவரே!

இத்தனை உயரத்தில் இத்தனை விண்வெளி வீச்சில் துருவா தன் வீட்டில் ஓர் அறையில் ஒரு கட்டிலில் உட்கார்ந்துகொண்டு தன் கால் விரல்களைத் தொட்டுத் தொட்டு நளினி நகம் வெட்டும் அந்த இன்பமான 'சுருக்'கை நினைத்துப்பார்த்தான்.

''துருவா! ரெடியா?''

''ரெடி!''

''இன்னும் ஒரு நிமிஷத்தில் நீ இன்ஸாட் ஒன்பதைப் பார்ப்பாய்!''

''சரி!''

ஐம்பது செகண்ட், நாற்பத்தைந்து செகண்ட்...

''கான்டாக்ட்!''

''மை காட்! தேர் ஷி இஸ்?''

''குட்! தெரிகிறதா?''

''நன்றாக.''

''துருவா, ஸோலார் பானல்கள் எல்லாம் திறந்திருக்கின்றனவா?''

''ஒரு நிமிஷம். இல்லை. நான்கில் இரண்டுதான் திறந்துள்ளன. இரண்டு மூடியிருக்கின்றன. நாம் நினைத்தது சரியே. என் விரல்கள் துடிக்கின்றன. உடனே போய் அதைச் சரிப்படுத்த!''

அதோ அது!

அவன் கலத்தின் வேகம் குறைய குறைய அருகே மிக அருகே தொட்டு முத்தம் கொடுக்கிற மாதிரி இன்ஸாட் மிதந்து கொண்டிருந்தது.

''துருவா உன் கலத்தைவிட்டு வெளியே வர ரெடியா?''

''ரெடி''

''படிப்பினை ஞாபகம் இருக்கிறதா?''

''ஒரு வரி விடாமல்.''

''எங்கே சொல்லு!''

''முதலில் ஆரிஷேட்டா பட்டனை அழுத்த வேண்டும்.''

''சரி...''

அடுக்கிக் கொண்டே சென்றான். ஒன்பது மாசப்படிப்பினை மறந்துவிடமுடியுமா?


(27ஆம் பக்கம் பார்க்க)

13. நீரில் வளரும் ஒரு தாவரம்
1) அல்லி. 2) போகன்விலா. 3) ரோஜா. 4) அந்தூரியம்.

14. பயணஞ் செய்கையில் அலங்கார வரிசையாகப் பயணஞ் செய்யும் பிராணி
1) எருது. 2) எறும்பு. 3) ஆமை. 4) கரப்பான்.

15. இலங்கையில் அமைந்துள்ள ஒரு நீர்வீழ்ச்சி அல்லாதது
1) பம்பரகந்த. 2) சிகிரியா. 3) தியலுமட. 4) துன்ந்த.


16. படத்தில் காட்டியுள்ள போத்தலை சிறிது சரித்தால் நீர்மட்டம் சரியாக இருக்கும படம் எது?




01 02 03 04

**09]** கீழே காட்டப்பட்டுள்ள உபகரணங்கள் ஆற்றும் செயல்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுக்குப் பொருத்தமான எழுத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

அ) உடைகள் வெட்டுதல். ஆ) மரம் அறுத்தல்.
இ) தகரம் வெட்டுதல். ஈ) ஆணி கழற்றுதல்.

1)  __________

2)  __________

3)  __________

4)  __________

**10]** பின்வரும் தாவரங்களின் பெயர்களை எழுதுக.
*(தாழை, தயிர்வாளை, ஆவரை, நீர்முள்ளி)*

1)  __________

2)  __________

**11].** தரப்பட்டுள்ள பூச்சிகளின் பெயர்களை எழுதுக.

1)  __________

2)  __________

**12]** பின்வரும் வினாக்களுக்குரிய விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.


01. 5 வரிசைகளில் 85 கதிரைகள் போடப்பட்டுள்ளன. எனின் ஒரு வரிசையில் எத்தனை கதிரைகள் உள்ளன? ..............................................

02. பாண் ஒன்றின் விலை ரூபா 8.50, வாழைப்பழம் ஒன்றின் விலை ரூபா எனின், 4 பாண்களும் 15 வாழைப்பழங்களும் வாங்குவதற்குத் தேவையான பணம் எவ்வளவு? ...............ரூபா ...............சதம்

03. தோட்டம் ஒன்றிலிருந்து 500 மாம்பழங்கள் பறிக்கப்பட்டன. அவற்றில் 15 காய்கள் பழுதடைந்துள்ளன. 302 பழங்கள் விற்பனை செய்யப்பட்டன எனின், மீதியாக வுள்ள மாம்பழங்கள் எத்தனை? ...............ரூபா ...............சதம்


04. மூவர் சேர்ந்து ரூபா 850 பணத்தைப் பகிர்ந்து கொண்டனர். முதலாமவர் அப் பணத்தில் சரி அரைவாசியைப் பெற்றுக்கொள்ள, மற்றைய இருவரும் மீதியைச் சமமாகப் பெற்றனர். அவர்களில் ஒருவர் பெற்ற பணம் எவ்வளவு?
...............ரூபா ...............சதம்


05. ஒரு தென்னை மரத்திலிருந்து பறிக்கப்பட்ட 37 தேங்காய்களைப் பெரியது சிறியது எனப் பிரித்தபோது பெரியதில் 19 தேங்காய்கள் அடங்கின. சிறிய தேங்காய் ஒன்று ரூபா 12.00 படி விற்கும்போது பெறப்படும் பணம் எவ்வளவு?
...............ரூபா ...............சதம்

06. 


இவ்வுருவின் சுற்றளவைக் காண்க.
...............cm

07. தரப்பட்டுள்ள உருவில் சமச்சீர் அச்சுக்களை வரைக.



08. 


பகுதி B இன் பங்கு முழுவதின் என்ன பின்னம்?
(..........................)

09. தரப்பட்டுள்ள நாட்காட்டியின் 2008 ஏப்ரல் மாதத்தில் உள்ள நாளகளில் விடுபட்ட திகதிகளைப் பூரணப்படுத்துக.

| APRIL - 2008 | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Sun | Mon | Tue | Wed | Thu | Fri | Sat |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| | | | | | | |

10. சீனிப் பைக்கற்றொன்றின் நிறை 400 g ஆகும். அவ்வாறான 3 பைக்கற்றுக்களின் நிறையைக் கிலோக்கிராம், கிராமில் காண்க.( ...........kg ...........g )

11. 675 வளையல்களை பிள்ளையொன்றுக்கு 6 வளையல்கள் வீதம் எத்தனை பிள்ளைகளுக்குப் பகிர்ந்தளிக்க முடியும்? எஞ்சுவது எத்தனை?
( .............................. ) ( .............................. )

**13]** கீழே காட்டப்படும் விலைப்பட்டியலின்படி, வினவப்படும் வினாக்களுக்குரிய விடைகளை உரிய புள்ளிக் கோட்டில் எழுதுக.

| | | |
|---|---|---|
| அரிசி ஒரு கிலோகிராம் | - | ரூபா 30.00 |
| துணி ஒரு மீற்றர் | - | ரூபா 60.00 |
| மண்ணெண்ணெய் ஒரு லீற்றர் | - | ரூபா 36.00 |
| பாண் ஒரு இறாத்தல் | - | ரூபா 8.50 |
| பென்சில்கள் 6 | - | ரூபா 24.00 |
| சீனி ஒரு கிலோகிராம் | - | ரூபா 50.00 |
| தேங்காய்கள் 4 | - | ரூபா 32.00 |
| பால் 500 மில்லிலீற்றர் | - | ரூபா 18.00 |

01. சீனி 1 கிலோகிராம் 250 கிராமின் விலை யாது?
...............ரூபா ...............சதம்

02. 7 இறாத்தல் பாணின் விலை யாது? ...............ரூபா ...............சதம்

03. 750 மில்லிலீற்றர் மண்ணெண்ணெய்யின் விலை யாது?
...............ரூபா ...............சதம்

04. பாண் 4 இறாத்தல், தேங்காய்கள் 3, பென்சில்கள் 4 என்பன வாங்கிக் கொண்டு நீர் கொடுக்கும் பணம் எவ்வளவு? ...............ரூபா ...............சதம்

05. துணி 2 மீற்றர் 50 சென்ரிமீற்றர், பால் 2 லீற்றர் என்பன வாங்கிக் கொண்டு நீர் கொடுக்கும் பணம் எவ்வளவு? ...............ரூபா ...............சதம்

06. அனில் விற்பனை நிலையத்திற்குச் சென்று பின்வரும் பொருட்களை வாங்கினார். 1500g சீனி. 2500ml மண்ணெண்ணெய், 1500g அரிசி, 200cm புடவை. இப்பொருள்களை வாங்கிக் கொண்ட அவர், முதலாளிக்கு ரூபா 1000 தாள் ஒன்றைகொடுத்தார். அவருக்குக் கிடைக்கும் மிகுதித் தொகை யாது?
...............ரூபா ...............சதம்

07. சுனில் விற்பனை நிலையத்திற்குச் சென்று 1kg அரிசி, 1.5kg சீனி என்பவற்றை வாங்கினார். அவர் வாங்கிய பொருட்களின் மொத்த நிறையைக் கிராமில தருக. ................. g

**14]** **கடந்த சனிக்கிழமை எங்கள் நகரத்தில் உள்ள சந்தைக்கு அப்பாவுடன் சென்றேன்......**

இச்சம்பவத்தைத் தொடர்ந்து ஆக்கபூர்வமான ஆறு வாக்கியங்கள எழுதுக. (அங்கே நடைபெற்ற சம்பவங்கள் படங்கள் மூலம் தரப்பட்டுள்ளன.அப்படங்கள் வெளிப் படுத்தும் கருத்துக்களைக்கொண்டு வசனங்கள் எழுத வேண்டும்) சரியான எழுவாய், பயனிலைகளுடன் ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களுக்குக் குறையாது இருததல் வேண்டும்.



..............................................................................................................
..............................................................................................................
..............................................................................................................
..............................................................................................................
..............................................................................................................
..............................................................................................................

# தரம் - 05 மாணவர்களை இறுதிப் பரீட்சைக்குத் தயார்படுத்துவதற்காக வெளியிடப்படும்

## விசேட மாதிரிவினாத்தாள் - 08

ஆசிரியர்:- திரு.வே.அன்பழகன்
( யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை, யாழ்ப்பாணம்.)

# கவிதைப்புனல்

## மாதரரை வதைக்காதீர்!

மாதரரை வதைக்கின்ற புருஷர் எல்லாம்
மதங்கொண்டு உறவறுத்துச் சின்ன வீட்டில்
ஆதரவாய் வாழ்கின்ற கால மின்று!
அவதானம் பிறிதொருநாள், அறுக்கும் தாலி!
ஈதலிலே கருணையொடு புரிந்து ணர்வு
இல்லாதார் வாழ்க்கையிலே அமைதி எங்கே?
மோதலிலே முட்டிவரும் சண்டை பூசல்!
முதுமைவரை தொடருமெனில் பிரிவே தீய்க்கும்!

போதையிலும் அடிஉதைகள்; போதா மைக்கு
பொய்வதந்தி வீண்பழிகள்; குத்திக் காட்டல்
கோதையரைப் பிழிந்தெடுக்கும் கூண்டி லேற்றி
குமுறியழச் செய்யுமிந்த கூத்தார் வதை
பாதையிலே விட்டெறிந்த தாயும் சேயும்
படுமவதி அவரவர்தம் விதியா? என்ன?

காதலித்து ம்ணமாலை பூண்ட வர்கள்
காமத்தேன் பருகிச்சுக வாழ்வு கண்டு
பேதமற்று மனங்கலந்தே வாழும் கால
பிரிவற்ற நிலையினிலும் பிரிவு தோன்றும்
ஆதலினால் கொண்டவளைப் புறமொ துக்கி
அலைவதனால் மிருகவெறிக் காளா னார்கள்

கல்லெனவே ஆனாலும் கடைசி மட்டும்
கைபிடித்தோன் என்றனுக்குப் புருஷன் என்றே
சொல்லெடுத்தே ஊரார்க்குச் சொல்லி [illegible]ர்பாள்
சோகத்தைச் சுமந்தாலும் கொண்[illegible]ன் தன்னை
சொல்லெடுத்து தாக்காளே பொறுத்து நெஞ்சில்
பொறுமையுடன் கூர்ந்தன்பு பணிசெய் வாளே!

■ கவிஞர் ஏ.ஆர்.நாகூர், திருமலை

## உறவுப் பயிர்!

மலர்தலை யுலகின் நிலவொளிப் பொட்டாய்
மாண்புறு மிலங்கை தேசம் - அதில்
நிலவிடும் போரால் நிலபுலம் நீறாய்
நிர்மூல மாகியே நாசம்!

குடித்தனம் தாழ்ந்து, மிடிமையில் வீழ்ந்து
குமையுது எங்கும் போரால்! - இழி
தடித்தனம் வீழ்ந்திட அடித்தள மிட்டால்
தழைத்திடும் மானிடம் சீராய்!

நிலமிசை யெங்கும் உலவிடும் பகைமை
நிலையினை இல்லா தொழிப் போம்! - நாம்
பலருமே கூடி, நட்புற வாடிப்
பரவச நிலையில் களிப்போம்!

திருமறை ஞானப் பொருளுரை வான
திறத்தினில் பழிபாவ மறப்போம்! - நாம்
அருள்நிறை வோடு அயலவ ரோடு
அன்பினை வளர்த்தே சிறப்போம்!

இனமத பேதம் இழிதரும் மோதல்
இருப்பது உலகில் கேடு! - நாம்
மனவளங் கொண்டு மனிதரை மதித்தால்
மலர்ந்திடும் இலங்கை நாடு!

உறவெனும் பயிரை உரமுடன் வளர்த்தால்
உலர்ந்திடும் குரோதம் நாட்டில்! - வளர்
திறனுடன் தொழிற்றுறை வளர்ந்திடு மாயின்,
ததும்பிடும் மலர்ச்சி வீட்டில்!

■ ஏறாவூர் அனலக்தர்

## காவலாளியின் பணி

காரிருளா? நிலவொளியா? நடப்பே னெங்கும்
கடுமழையா? சுடுவெயிலா? ஓடும் வேலை
ஓரிடத்தில் உட்காருந் தொழிலா? இல்லை
ஓண்டியும்நான் ஓடியுந்தான் பிடிப்பேன் கள்வர்
கூரியவாள் கொண்டுமரம் அறுப்பர்; கத்திக்
கொண்டிங்கு கிளைகளையும் தறிப்பர்; கண்டு
நேரில்செலு முன்னரவர் பறப்பர்; ஆனால்
நிச்சயமாய் வாள்கத்திக் கிடக்கா தங்கு!

அடுப்பெரிக்க ஏறிமரக் கிளைகள் வெட்டு!
அடியோடு [illegible]லைகள் பறிப்பு; தோட்டத்
தடுப்புவேலி [illegible]பாடு தற்கு கிளைகள் வெட்டு
தறிப்புமர[illegible] கட்டுதற்கு மாட்டுப் பட்டி!
எடுப்பிங்கு கடத்தலுக்குக் கொழுந்து; யானும்
எப்படியுந் திருட்டுக்களை ஒழிப்பேன்; கண்டால்
விடுவேனா ஆட்களைத்தாம்; பிடிப்பேன்; சில்லோர்
விரட்டுகையில் மறைந்திடுவர்; வாயு வேகம்!

கல்லுமலைச் சாரலன்று பசுமைக் கோலம்
கண்ணள்ளும் தேயிலைகள்; வேலைக் காடு!
புல்லுமலைச் சாரலின்று; மானாக் காடு
பெரும்புதர்கள்; நிமிர்மரங்கள்; கூன லுற்றோர்
சொல்லுமுயர் ஆலநிழல் கோயி லில்லை
சுடர்கொள்ளிப் பேய்க்குழாமும் இரவிற் சென்றால்
கொல்லுமென்பர் சிலரிங்கு; பதுங்கிச் சென்று
கொத்தமரம் எனக்குவிடும் 'சரடு' என்னே?

ஒப்படைப்புப் பிடிபட்டோர்; தப்பி யோடி
ஒளிந்துவிடில் முறையீடு; மறைந்தோர் பற்றி
துப்பறிந்து வுடன்தகவல்; அச்ச மில்லை
துரைமாரின் விசாரிப்பு; சிக்கி யோர்க்குத்
தப்பாமற் தண்டங்கள்; சொற்பக் காலம்
தவறாமல் வேலையிலை; என்னைப் பல்லோர்
எப்படியும் கவிழ்ப்பதற்குச் சூழ்ச்சி; வந்து
எத்தனங்கள் எனைமடக்க 'தண்ணி'வார்த்தே!

(தொடரும்)

■ கவிஞர் வி.எஸ்.காந்தி

## தேசவானால் என்ன?

திசைகள் எதுவானால் என்ன?
காற்று வந்தால் ஏற்றுக் கொள்.
மலர்கள் எதுவானால் என்ன?
மணம் இருந்தால் சூடிக்கொள்.
மண் எதுவானால் என்ன?
தண்ணீர் வந்தால் பருகிக் கொள்.
நெருப்பு எதுவானால் என்ன?
கூடாது அமர்ந்து குளிர் காய்ந்து கொள்.
மதங்கள் எதுவானால் என்ன?
மனித நேயம் கண்டால் தழுவிக்கொள்.

சி.திபர்ஷன், அரசடி.

## என்றும் சிறைதானோ?

நாட்டிலும் சிறை - நடு
ரோட்டிலும் சிறை
வீட்டிலும் சிறை - சொந்த
வாழ்விலும் சிறை

கூண்டுக்கிளியாய்
வீட்டில் இருந்தால்...
பட்டினிச்சிறை...!

தொழில்தேடி
வழி வந்தால்...
பயணச் சிறை...!

படுவான் கரையிருந்து
எழுவான் கரைவந்தால்
காவலரண் சிறை...!

கிழக்கிலிருந்து
தெற்குவந்தால்
நாலம் மாடிச்சிறை!

முல்லைத்தீவான்
கொழும்பு வந்தால்
பயங்கரவாதச் சிறை...!

முடியாதோ சிறைவாசம்? தமிழன்
படிவானோ இதைக்கண்டு?
விடியாதோ எம்வாழ்க்கை? விரைந்து
மடியாதோ இந்த வன்மம்?

■ பே.கெங்காதரன்.
புதிய மகஸின் சிறைச்சாலை.

## வாட்டுந் துயர் சாகும்

புதிர்கொண்ட வாழ்வை எதிர்கொண்ட போது
விதியென்று உழன்றான் ஒருவன் - நின்று
மதியென்று கழன்றான் ஒருவன்!
எதுவந்த போதும் எதிர்கொள்ளும் ஆற்றல்
இருப்பதால் நிமிர்ந்தான் மனிதன் - பின்னர்
உயர்வினால் ஒளிர்ந்தான் புனிதன்!

மனமென்ற ஒன்றை மனமின்றித் தாங்கி
வளம்போல கொண்டான் துயரம் - எனினும்
தினந்தோறும் தொட்டான் சிகரம்! - மனம்
தனதென்று கூறி தடுமாறும் நினைவை
நனவாக்க முனைந்தான் ஒருவன் - வாழ்வை
கனவாக்கி நொந்தான் ஒருவன்!

சில்கால வாழ்வைப் பலகாலம் என்று
நிலைமாறி நின்றான் ஒருவன் - மனம்
அலைபாய சுழன்றான் ஒருவன்!
விலையாக்கி வாழ்வை சிலையாக்கி உலகை
தனதாக்கிக் கொண்டான் மனிதன் - பாரில்
தலைவனாய் திகழ்ந்தான் புனிதன்!

இனமென்ற குழுவின் நல்வாழ்வுக் காக
தலையே வந்தான் ஒருவன் - தானை
தனை நடத்தி நின்றான் தலைவன்!
மனமொன்றி மக்கள் அவன்பின்னே சென்றால்
மலைகூட பொடியாகிப் போகும் - இந்த
மனம்வாட்டும் துயரமும் சாகும்!

■ க.கோணேஸ்வரன், திருமலை.

## தலைவிதியை நோவேனோ?

'யாழ்மண்' தனை விடுத்தும்
'யான்ஜயா' எல்லையிலோர்
பாழ்பட்ட தொழிலைத்தான்
பார்க்கின்றேன் நிறைவில்லை!

வருமானம் வந்திடினும்
வாழ்விலே மகிழ்வில்லை!
திருமதியும் மழலைகளும்
தெரியாத தொலைதூரம்!

கடற்றொழில் சேர் அதிகாரி
பதவிதரும் கௌரவத்தில்
நடமாடித் திரிகின்றேன்!
நான்கைந்து ஆண்டு களாய்!

பாரிலெந்தன் இனசனத்தைப்
பார்த்திடவும் முடியவில்லை!
ஊரிலெந்தன் நண்ப ருடன்
உ[illegible]ாட இயல வில்லை!

அன்புடைய மழலை களை
அருகிருந்து அரவணைக்க
என்மனைவி அயல்துயில
என்னாலே இயல வில்லை!

திங்களது தவறாமல்
தேடிவிட்ட சம்ப ளத்தை,
இங்கிருந்து காசோலை
எடுத்தேநான் அனுப்புகிறேன்!

'தைப்பொங்கல்' தினத் துக்கும்
தவறாமல் சித்தி ரைக்கும்
'தீபாவளிப் பண்டி கை'க்கும்
திருப்பயணம் தொடர்கிறது!

எப்போதென் இன்னல் நிலை
இது தீர்ந்து களிப்பேனோ?
அப்பொழுது வரும் வரைக்கும்
'அலி'யாரின் கடைச் சோறு!

'எம்.பி'க்கும் போன திங்கள்
எழுதியுள்ளேன் ஓர் அஞ்சல்!
தம்பியென்ன செய் வாரோ?
தலைவிதியை நோவேனோ?

■ கவிஞர் ஆ.பௌனர்தாசன்

## கொஞ்சல்வழிக் கல்வி

மனிதனின் கண்ணுக்குப்
புலப்படாத
வெளிச்சத்தை
தேனியால் பார்க்கமுடியும்

ஒரே ஒரு நாள் என்னைத்
தேனியாக மாற்றிவிடு
உன் அழகு வெளிச்சத்தைப்
பார்க்க வேண்டும் எனக்கு

அந்தக் காலத்தில் தன் வீரர்களுக்கு
சம்பளத்தில் பாதியை
உப்பாகக் கொடுத்திருக்கிறது
ரோமாபுரி

நீ உன் காதலில் பாதியை
முத்தமாகக் கொடுத்து விடு

■ தபூ சங்கர்





# ஒரு மாமனின் கதை

சிறுகதை

என்ரை மனக் கவலையை•வேறை ஆரெட்டைச் சொல்லி ஆறமுடியும்? உங்களெட்டைத்தானே. நீங்கள் சரியாக விளங்கிக் கொள்ளுவியள் எண்ட நம்பிக்கையோடை தான் இதை உங்களெட்டைச் சொல்லுறன்.

என்ரை மனசிலை இருக்கிறது தனிய கவலை மட்டுந்தான் எண்டு நினைச்சுப் போடாதையுங்கோ. கடுங்கோபமும்தான். நெருப்பு மாதிரி.

எல்லாரையும் கோவிச்சு என்ன பலன்...? மாறமாட்டன் எண்டும் சாகிறன் பந்தயம் பிடி எண்டும் நிக்கிறதுகளெட்டை சொல்லிப் பிரியோசனமில்லை. அதாலை தான் ஒண்டு ரண்டு பேரெண்டாலும் விளங்கிக்கொண்டு, புரிஞ்சு கொண்டு நடக்கக்கூடியவையெட்டைச் சொன்னாலாதல் போதுமெண்டு நினைச்சுத்தான் சொல்லுறன்.

அந்தக் கலியாணத்திலை சிவத்தானுக்கு நடந்தது அநியாயம்...!

சிவத்தான் பாவம். அந்த இடத்திலேயே சின்னா பின்னமாய் சிதைஞ்சு போனான். அவன்ரை முகத்தைப் பார்த்தே கண்டு பிடிச்சிட்டன். அதுக்குப் பிறகு அவனை முன்னடிக்கே காணயில்லை. நான் எழும்பிவரேக்கை மண்டபத்தின்ரை பின்புறத்திலை 'சமையல் பாட்டி'யுடன் ஏதோ கதைப்பது மாதிரி பாசாங்கு பண்ணிக் கொண்டு நிண்டவனைத் தனியாக கூப்பிட்டுக் கையில் பிடித்து ஆறுதல் சொல்லத் தொடங்கிய போது அவன்ரை கண்ணிலை நீர் நிறைஞ்சு வந்ததைக் கண்டு என்ரை மனம் எவ்வளவு கவலைப்பட்டது தெரியுமே...?

சிவத்தானுக்கும் எனக்கும் ஒரே வயசு. சின்ன முதல் வகுப்பிலிருந்து ஒண்டாப் படிச்சனாங்கள். அவன்ரை 'டாப்புப் பெயர்' சிவஞானராசாதான். அது பிறகு 'சிவத்தான்' எண்டு சுருங்கிப் போச்சு.

எனக்கு இப்ப வயசு நாப்பத்திமூண்டு ஆகுது. அவன் ஒரு மாசத்தாலை எனக்கு மூத்தவன். எனக்கு ரண்டு பொம்பிளைப் பிள்ளையளும் ஒரு பொடியனுமாக மூண்டு பிள்ளையளாச்சு. சாடையாகக் கன்னத்திலை கொஞ்சம் நரைமயிரும் வந்திட்டுது. சிவத்தானுக்கும் அப்பிடித்தான். ஆனால், அவன் ஒண்டிக்கட்டை - தனியன்.

இப்பவும் பள்ளிக்கூடக் காலத்திலை இருந்த மாதிரித்தான். எல்லாத்திலும் சரியான சுறுசுறுப்பு. ஆர் என்ன உதவி கேட்டாலும் மறுப்பில்லை. எல்லாத்தையும் யோசிச்சு திட்டம் போட்டு கச்சிதமாய் செய்யவேணுமெண்டு நிற்பான். சரியான நெஞ்சுறுதியானவன். செய்ய நினைச்சது சரியெண்டு கண்டால் தலைபோனாலும் விடமாட்டான். என் சுக துக்கத்திலை தானும் ஒராளா வந்து நிற்பான்.

அப்பிடிப்பட்டவன்.......
மனமுடைஞ்சு போய்......
வேதனைப்பட்டுத் தனக்குள்ளை தன்னை ஒடுக்கிக் கொண்டு நத்தை மாதிரி ஆகிப்போனான். அந்தக் குடும்பத்துக்காக அவன் பட்ட பாடெல்லாம் இந்தக் கலியாணத்தோட கழுவித் துடைச்சு எறிஞ்சாச்சு......

அந்த இடத்திலை நானெண்டால் கையைக் காலை நீட்டியிருப்பன். சிவத்தான் தன்ரை பொறுமையைக் காட்டிப் போட்டான்.

இதுவரைக்கும் அந்த வீட்டிலை மூண்டு கலியாணத்தை முழுப் பொறுப்போடை நடத்தி முடிச்சிருக்கிறான். இது நாலாவது கலியாணம். ஒவ்வொண்டாச் செய்து வைச்சு, செய்துவைச்சு அவன் பட்ட சந்தோசத்தை முழுசாக் கண்டவன் நான்தான்.

எனக்குக் கூட, அரிச்சுனனுக்கு கிருஷ்ணன் மாதிரி சிவத்தான்தான்.

''டேய்...... மச்சான். என்ரை மருமோள் பெட்டையின்ரை கலியாணமும் முடிஞ்சால் நாலு கலியாணத்தை நடத்தி முடிச்ச ஆள் நான். என்ரை சகோதரிமாரிலை நடுவிலாளை வெளிநாட்டுக்கு அனுப்பிவைச்சன். மூத்தவளுக்கு வீடு கட்டிக் குடுத்தன். இளையவளைப் படிப்பிச்சு கச்சேரியிலை உத்தியோகமாக்கிப் போட்டன். கலியாணமும் அவளின்ரை விருப்பப்படி கட்டியாச்சு. மருமோள் பெட்டைக்கும் மாப்பிளை வெளிநாட்டிலைதானே...... அவளுகள் ராசாத்தி மாதிரி வாழுவாளள். எனக்கினி என்னடா கவலை? என்னை ராசா மாதிரி வைச்சிருப்பாளுவள்.......''

அந்தக் கலியாணத்துக்கு ஏற்பாடுகள் செய்து கொண்டு திரிஞ்ச காலத்திலை ஒரு நாள் அவன் இப்பிடிச் சொன்னது இண்டைக்கும் எனக்கு காதுக்கை கேட்டுக் கொண்டிருக்குது.

சிவத்தான் படிச்ச காலத்திலை படிப்பில் கொஞ்சம் அப்பிடி இப்பிடித்தான். ஆனால், கெட்டிக்காரன். சுழியன். ஓ.எல் படிச்ச காலத்திலை பஞ்சாட்சரம் கிளாக்கரின்ரை மகள் ரஞ்சிதமலரை சுத்திக் கொண்டு திரிஞ்சவன். ஒருக்கால் ரெண்டொருதரம் ரஞ்சிதம் மடிச்சபடி தந்த காயிதத்துண்டைக் கொண்டுபோய் சிவத்தானிட்டை கொடுத்துமிருக்கிறன்.

சிவத்தான்ரை தகப்பன் செத்ததோடை அவன் படிப்பை விட்டிட்டான். தகப்பன் செய்த தோட்டத்துக்குள்ளை கொத்தி முறிஞ்சு மாடுபோலை உழைச்சவன். பொயிலைக்கண்டு, வெங்காயம் எண்டு போகத்துக்குப் போகம் மாறிமாறிச் செய்வான்.

மூத்த தங்கைக்காரியின்ரை கலியாணத்துக்கு முன்னம் கல் வீடு கட்டிக் குடி புகுந்திட்டான். வீடு குடி புகுந்த அண்டைக்கு, ''மச்சான்..... எப்பிடி வீடு? சின்னன்தான் எண்டாலும் எடுப்பாயிருக்கு என்ன?... டேய்... இது பொயிலை வித்துக் கட்டின வீடடா!... என்ரை தனி உழைப்படா!... என்ரை மூத்த தங்கைச்சிக்கு.......'' எண்டு தன்ரை உழைப்பின்ரை கெட்டித்தனத்தை உரிமையோடை எனக்குச் சொல்லி பெருமையடிச்சான்.

மூத்த சகோதரியின்ரை கலியாணம் முடிஞ்சு ஒரு மாதத்துக்குப் பிறகு ஒரு நாள் அவசர அவசரமாக என்னெட்டை வீடு தேடி வந்தான். சரியாகப் பதட்டப்பட்டான். அது வரைக்கும் அவன் எதுக்காகவும் அப்பிடிக் குழம்பிப் போனதை நான் காணேல்லை.

''மச்சான் எனக்கு இந்த உதவியைச் செய்தியண்டால் நான் உனக்கு காலடியுக்கை கிடப்பன்ரா...... ரஞ்சிதம் தன்னைக் 'காவிக் கொண்டு போ' எண்டு நிக்கிறாளடா...... நான் என்னடா செய்ய? இப்பதானே மூத்தவளின்ரை பொறுப்பு முடிஞ்சது. இன்னம் ரண்டு பேரெல்லே...? இளையவளின்ரை படிப்பையும் நான் பார்க்க வேணும்... இவள் ரஞ்சிதம் அவ்சரப் படுறாள். நீதான் மச்சான் அவளுக்குப் புத்திமதி சொல்லவேணும்....''

என்ரை சினேகிதனுக்காக ரஞ்சிதத்துக்குப் புத்திமதி சொல்லிச் சரியாக மூன்றாம் மாதம் முடிய அவளுக்கு ஒரு 'கிளாக்கர்' பொடியனைப் பார்த்து பஞ்சாட்சரத்தார் கலியாணம் முடிச்சுவைச்சிட்டார். நானும் கலியாணத்துக்குப் போய் வந்தனான்தான்.

அதுக்குப் பிறகு இண்டை வரைக்கும்

வதிரி. இ. இராஜேஸ்கண்ணன்

ஒருநாள் தன்னும் சிவத்தான் ரஞ்சிதம் பற்றிக் கதைத்ததாகவோ கவலைப்பட்டதாகவோ எனக்குத் தெரியவில்லை.

நடுவிலாளை வெளிநாட்டிலிருந்த ஒரு மாப்பிளைக்குக் கட்டிக் கொடுத்து முடிய ஒருமுறை நானும் என்ரை மனிசியுமாக அவன்ரை வீட்டை போனம். அவனோடை தனியாக் கதைச்சம். அப்ப எனக்கு மூத்த பிள்ளை பிறந்து விட்டாள். ஒண்டா விளையாடின காலத்திலை இருந்து இப்பவரைக்கும் அவன்தான் என்ரை சுகதுக்கங்களிலை முன்னுக்கு நிக்கிறவன். அவனை அப்பிடியே விட எனக்கு எப்பிடி மனம் வரும்?........ பின்னடிக்கு அவன் தனிச்சுப் போடுவான் எண்ட ஏக்கம் என்னெட்டை இருந்து கொண்டே வருது.

''மச்சான்.....நீ உப்பிடியே இருக்கேலாது. இப்ப என்னெட்டை ஒரு ஒழுங்கு இருக்கு. நல்ல குடும்பம். பெட்டை பரவாயில்லை. உன்ரை நிலமையும் அவைக்குச் சொல்லியாச்சு. அவை அதுக்கெல்லாம் உதவியா இருப்பினம். நீ ஓமெண்டால் சரி.'' எண்டு கதைச்சுப் பார்த்தன். அந்த நேரம் சிவத்தான்ரை மூத்த சகோதரிக்கு இப்ப கலியாணம் கட்டின மூத்த மருமோள் பிறந்திட்டாள்.

''டேய். எனக்கு இனி இது என்னத்துக்கடா? காலம் போட்டுது. மூத்தவளுக்கும் பொம்பிளைப்பிள்ளை பிறந்திருக்கு. அவளின்ரை பிரியனும் வெளிநாடு போக ஒழுங்கு பண்ணுறார். அதுகளுக்கும் துணையாக நான்தானே நிக்க வேணும். இனி உந்தப் பேச்சை விடு''........ எண்டு மொட்டையாகப் பேசி தட்டிக்கழிச்சுப் போட்டான். எனக்கெண்டால் கோபம் கொதிப்பாய் வந்துது - தன்னைப் பற்றி யோசிக்காத மோடனாக்கிடக்கெண்டு.

''அப்ப நீ உப்பிடியே இருந்து சகோதரியள், மருமக்கள் எண்டு பாத்துக் கொண்டேயிரு. உன்னை ஆர் பாக்கிறது.... பேயா...?'' எனக்கு வந்த கோபத்திலை புழுத்தபாட்டாய் பேசத் தொடங்கினன்.

''ஏன்டா... கோவிக்கிறாய்? பொறுப்புகளைச் செய்து முடிக்கிறதுதானே வாழ்க்கையின்ரை அர்த்தம்.''

சிரித்துக் கொண்டே தத்துவம் பேசி என்ரை கதையை அத்தோட 'கட்' பண்ணிப் போட்டான்.

என்ரை வயதோட்டைக்காரன் சிவத்தான். நான், மனுசி மூண்டு பிள்ளையளோடை சந்தோசமாயிருக்க, உவ்வளவு செய்து போட்டும் ஒரு ஓரமாக நிக்கிற நிலை வந்திட்டுது அவனுக்கு. நினைக்க எவ்வளவு வேதனையாக் கிடக்கு. ஒரு பக்கத்திலை கொதியாவுங் கிடக்கு.

அவர் பெரிய தியாகி?...... மடையன். ஒத்தை மரம் மாதிரி ஒரு ஓரத்திலை நிக்கிற நிலைக்கு வைச்சிட்டாங்கள். இதுக்கு முந்தி உந்தச் சம்பிரதாயங்களெல்லாம் பாத்தவங்களே?.... அவன்தானே தனி மனிசனா நிண்டு சகோதரிமார் மூண்டு பேருக்கும் பேச்சுக்கால் தொட்டு பிள்ளைப் பெத்து வரைக்கும் எல்லாம் செய்து வைச்சவன். இப்ப மட்டும் என்ன சம்பிரதாயம்? எங்கை இருந்து குதிச்சது?.....

எனக்கு வாற கோபத்துக்கு வாயிலை வந்திடப்போகுது - நாகரிகமில்லாமல்.

புதிசாக் காசு பணம் வந்தவுடனை வாய் பாத்த சம்பிரதாயங்கள் அவைக்கு.

சரி மாப்பிளை வீட்டுக்காரருக்கு பிடிக்காவிட்டாலும் சிவத்தான்ரை மூத்த மச்சான்- அவர் புதிய வெளிநாட்டுப் பணக்காரனுக்கு என்ன மதி?...... அவை சொல்லச் சொன்னால் அவரும் சொல்லிப் போடுறதே?... அவற்றை கலியாணத்துக்கும் சிவத்தான் தானே முன்னுக்கு நிண்டு எல்லாம் செய்தவன்... அப்ப எங்கை போனது சம்பிரதாயம்?

பாவம் சிவத்தான் - துடிச்சுப் போனான். மற்றவைக்குக் காட்டிக் குடுக்காமல் - சமாளிச்சுப் போட்டான்.

பாவம் அவன்....... ஆசையோடை பட்டுச் சால்வையாலை தலைப்பா கட்டிக் கொண்டு, தாலிக்கூறைத் தட்டைக் காவிக் கொண்டு, மண்டபத்திலை இருந்த ஆக்களெட்டை சபையுக்கை இறங்கி ஆசீர்வாதம் வேண்டிக்கொண்டு வரயுக்கை, சரி மாமான் தானேயெண்டு அவனை அப்பிடியே விட்டிருக்கலாந்தானே? அதுக்கை அர்த்தம் நோண்டிப் பாக்கிறாங்கள்.

அவன்ரை மூண்டு சகோதரிக்கும் அவன்தானே அதைச் செய்தவன். வேறை ஆரும் செய்யேல்லை.....மறிக்கவுமில்லை....

அவர் மாப்பிள்ளையின்ரை அப்பர் பெரிய சம்பிரதாயக்காரன் மாதிரி. சம்மந்தியெட்டை காதுக்குள்ளை குசுகுசுக்க அவரும் தன்ரை மச்சான்காரனைப் பற்றி ஒண்டையும் யோசிக்காமல் ஓடிப்போய் சிவத்தாண்ரை காதுக்குள்ளை ஏதோ சொல்லிப்போட்டு தாலி கூறைத் தட்டை வாங்கிறார். என்ன மனிசர்? அவன் தலைப்பா கட்டியிருந்த புட்டுச் சால்வையை அவனைக் கொண்டு அவிழ்ப்பித்து வேறை ஒராளெட்டை வாங்கிக் குடுக்கிறார்.

சிவத்தான்ரை முகம் அப்பிடியே இருண்டு போச்சு. மெதுவாக அந்த இடத்தை விட்டு நழுவினான். பிறகு ஏதோ வேலை இருப்பதைப் போலை நடிச்சுக் கொண்டு அவசரமாகச் சமையல்கட்டுப் பக்கம் போனான். போனவன் திரும்பி வரவில்லையெண்டு தான் நான் எழும்பித் தேடிப் போனனான்.

''என்னடா...... நான் தாலி கூறைத் தட்டுக் காவக் கூடாதாம். சம்மந்த வழியிலை சொல்லீனமாம். ஆரும் கலியாணங்கட்டிப் பிள்ளைப் பெத்தவையளை விடட்டுமாம். அத்தான் சொல்லுறார். கண்டிருப்பாய் தானே...!'' என்று சொன்னவனின் குரல் தளதளத்தது. எனக்கு வந்த கோபம் அடங்கவேயில்லை.

நான் திரும்பி வந்து மண்டப வாசலில் கழற்றிவிட்ட செருப்பை காலிலே மாட்டிக் கொண்டு நிக்க -

''மாமா... எங்கை பிள்ளை...? 'போட்டோ' எடுக்கேல்லை.. ஆளைக் காணேல்லை.....''

சிவத்தானை படம் பிடிக்கிறதுக்காக தேடி ஆரவாரப்படுகினம்.

அவனைப் படம்பிடிச்சு வைச்சு என்ன செய்யப் போகினம்...?

அவனை உயிரோடை சாகடிச்சுப் போட்டு படம்பிடிக்கத் தேடித் திரியினம்.

சம்பிரதாயம் பாக்கிறவை. வெளியிலை வாசலிலை வைச்ச குத்துவிளக்கு நூந்து போய் கிடக்கு. உள்ளுக்கு படம் பிடிச்சுக் கொண்டு நிக்கீனம்.

கோபம் வராதே பின்னை......? நீங்கள் சொல்லுங்கோ பாப்பம்.

*

## தமிழே! வா!!

செங்கையணி 'வளை'குலுங்கச்
சிரசமதில் 'மணிமுடிந்து'
துங்கமணி மின்னிடையில்
தூய'மேக லை'விளங்க,
தங்கமணிக் 'குண்டலங்கள்'
தாமசைந்தே ஒளி துலங்க,
செங்கமல மலர்மீதுத்
திருநடனம் செய்திடவே,
திங்கள் மணி 'சிலம்பொ' லிக்கும்,
'திருக்குறளு'க் கேற்றபடி,
எங்கேதான் பயின்றனையோ?
இக்கலையைப் பேரழகே!
மங்கை செந் தமிழணங்கே!
மானிலத்தின் மொழியரசீ!
மங்கலங்கள் பொலிந்திடவே
மலர்க்கொடியே வந்திடம்மா!

-''பேரோன்''




# குதிரையைப் பிடிக்க தூண்டில் போட்ட கதை

பரமார்த்த குருவிற்கும் அவரது சீடர்களுக்கும் குதிரையின் மேல் கொண்ட மோகம் சற்றும் குறையவில்லை. வெளியூரில் உள்ள செல்வந்தர் ஒருவரைக் காண குருவும், அவரது ஐந்து சீடர்களும் ஒருநாள் பயணமானார்கள். சித்திரை மாதத்து வெயில் உச்சந்தலையைப் பிளந்தது. வழியில் ஏரிக்கரையொன்றில் அடர்ந்த மரங்கள் அடங்கிய தோப்பு ஒன்று இருந்தது. வெயிலுக்கு இதமாக சற்றுநேரம் அங்கே இளைப்பாறிச் செல்ல அவர்கள் நினைத்தார்கள். குருவை உட்கார வைத்து அவரைச் சுற்றி அமர்ந்து சீடர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள்.

இப்போது மிலேச்சனுக்குத் தண்ணீர் தாகம் எடுத்தது. அவன் ஏரிக்குச் சென்று தண்ணீரில் இறங்கினான். இறங்கியவன் அப்படியே ஸ்தம்பித்து நின்றான். பிறகு பயத்தால் இரண்டு அடிகள் பின்னோக்கி எடுத்து வைத்தான். அவனுடைய பயத்திற்குக் காரணம் என்ன? தண்ணீருக்குள் குதிரை ஒன்று தெரிந்தது. தண்ணீருக்குள் குதிரையா என்று ஆச்சரியப்படாதீர்கள். அது ஒரு நிழல் குதிரை. அதாவது, அங்கிருந்த ஐயனார் கோவிலில் இருந்த மண் குதிரையின் நிழல்.

வெயில் நேரமாக இருந்ததாலும் தண்ணீர் தெளிவாக காணப்பட்டதாலும் மண் குதிரையின் நிழல் அச்சாகத் தண்ணீருக்குள் தெரிந்தது.

பீதியுடன் தண்ணீரைக் குடிக்காமல் கரையேறிய மிலேச்சன் நிழலையே சற்றுநேரம் உற்றுப் பார்த்தான். பின்னர் மண் குதிரையைப் பார்த்தான். தண்ணீரில் தெரிவது இதன் நிழலாக இருக்குமோ... என்று சற்று நேரம் ஐயுற்றான்.

குழப்பமாய் இருந்தது. முடிவெடுக்க முடியவில்லை.

அப்போது காற்று வீசியது. ஏரித்தண்ணீர் அசைந்தது. தண்ணீர்க் குதிரை ஆடியது. மண்குதிரை அசையாது நின்றது.

இது குதிரையின் நிழலாக இருக்க முடியாது. தரையில் ஆடாத குதிரை தண்ணீரில் மட்டும் எப்படி ஆடும்? காற்று நின்று விட்டது. மறுபடியும் அதே நிழல். பெரிய கல் ஒன்றை நிழலின் மேல் தூக்கிப் போட்டான். தண்ணீர் குதிரையைக் காணவில்லை. சற்றுப் பொறுத்துப் பார்த்தான். மீண்டும் குதிரை தெரிந்தது

''வா, வா! இங்கே வந்து நிற்கிறியா, வசமா மாட்டிக் கிட்டே'' என்று சொல்லிக்கொண்டே சென்ற மிலேச்சன் குதிரையைப் பற்றிக் குருவிடம் சொன்னான். குருவிற்கும், சீடர்களுக்கும் படு ஆச்சரியமாய் போய்விட்டது.

அவர்கள் அனைவரும் ஓடிவந்து பார்த்தார்கள். மிலேச்சன் சொன்னது உண்மைதான்.

''தண்ணீர் குதிரையைத் தந்திரமாக மந்திரம் போட்டது போல் பிடிப்பது எப்படி?'' குரு கேட்டார்.

''குருவே! குதிரைக்குக் கொள் என்றால் கொள்ளை ஆசை என்பது உங்களுக்குத் தெரியாதா? கொள்ளை அவித்து ஒரு கூடையில் போட்டு அதன் கண்ணில் காண்பித்தால், நாக்கில் எச்சில் ஊறும், நம்மை நோக்கி வந்துவிடும்.''

''போடா முட்டாள், கொள்ளுக்கு எங்கே போவது? அப்படியே கொண்டு வ்ந்து அவித்து அதன் கண்ணில் காட்டுவதற்குள் இரவு வந்துவிடும். குதிரை தூங்கப் போய்விடும். உடனே குதிரையைப் பிடிக்க, ஒரு பிடி அருகம்புல் போதும். புல்லைப் பார்த்தால் துள்ளி ஓடிவந்துவிடும்.''

''போடா மடையா, குதிரைக்கு இங்கே கிடைக்காத புல்லா? குதிரை போல் நாம் கரையிலிருந்து கனைத்தால் போதும். நம் இனம் வெளியே நிற்கிறது என்று நினைத்து ஓடிவந்துவிடும்.''

''மட்டி! உன் யோசனையை நினைத்தால் சிரிப்புதான் வருகிறது. முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும். எருமை ஒன்றைத் தண்ணீருக்குள் விட்டோம் என்றால் அது கலக்குகிற கலக்கில் குதிரை வெளியே வந்துவிடும். பின் நாம் லபக்கென்று பிடித்துக் கொள்ளலாம்.''

''பேதை, நீ ஓர் அறிவிலி. எருமையை எங்கே தேடுவது? எருமைக்கும், குதிரைக்கும் தண்ணீருக்குள் சண்டை நடந்தால் எருமைத் தான் ஜெயிக்கும் என்பதற்கு என்ன உத்தர வாதம்? எருமையின் தொப்பை வயிற்றில் குதிரை ஓர் உதைவிட்டால் எருமையின் வயிறு கிழிந்து அங்கேயே எமலோகம் போய் விடாதா? நான் சொல்லும் யோசனையைக் கேளுங்கள். தண்ணீருக்குள் இருக்கும் எந்தப் பொருளையும் நாம் தூண்டில் போட்டுத்தான் பிடிக்க வேண்டும். அதுதான் புத்திசாலித்தனம்.''

''குதிரையைப் பிடிக்கும் அளவிற்கு பெரிய தூண்டிலாக வேண்டுமே.''

''வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம். இதோ ஒரு நொடியில் செய்து தருகிறேன்.''

மறு நிமிடம் குருவின் கைத்தடி மீன்பிடிக் குச்சியானது. குருவின் அங்கவஸ்திரம் கயிறானது. கதிர் அறுக்கும் அரிவாள் ஒன்று தூண்டில் முள்ளானது. கட்டுச்சோற்று மூட்டை தூண்டில் இரையானது.

குதிரையை பிடிக்கத் தூண்டில் போட்டது மிலேச்சன்தான். சிறிது நேரத்தில் மீன்கள் கட்டுச்சோற்றை மொய்க்க ஆரம்பித்தன. உஷாரானான் மிலேச்சன். தூண்டிலை இழுத்தான். கட்டுச்சோற்றைக் கட்டிய துணி கிழிந்து சோறு தண்ணீருக்குள் கொட்டிவிட்டது.

இழுத்தான் இழுத்தான், இழுத்துக்கொண்டே இருந்தான் மிலேச்சன். கோரைப்புற்களும் மரத்தின் வேர்களும் நிறைந்த இடத்தில் கதிர் அரிவாள் சிக்கிக்கொண்டது.

''ஓடியாங்க டோய், வசமா மாட்டிகிட்டது.'' சீடர்களும், குருவும் கைத்தடியைப் பலம் கொண்ட மட்டும் பற்றி இழுத்தார்கள். குருவின் அங்கவஸ்திரம் மிகவும் பழையதாக இருந்ததால் அது டர்ரென்று கிழிந்தது. தூண்டில் கம்பைப் பிடித்திருந்த ஆறு பேரும் மல்லாந்து தரையில் மடேரென்று விழுந்தார்கள்.

அவ்வமயம் அங்கு வந்த வழிப்போக்கர் ஒருவர் விவரம் கேட்டார். அவர்கள் ஆதி முதல் அந்தம் வரை நடந்த கதையைச் சொன்னார்கள்.

அவர்களது அறியாமைக்கு இரங்கிய வழிப்போக்கர், ''அது மண் குதிரையின் நிழல்'' என்றார். அவர்கள் அதை ஏற்றுக்கொள்ள வில்லை. ஒரு போர்வையால் மண் குதிரையை மூடி, ''இப்போது என்ன தெரிகிறது பாருங்கள்'' என்றார். அவர்களுக்குத் தெளிவு பிறந்தது.

''உங்களுக்குக் குதிரைதானே வேண்டும்?''

''ஆமாம், ஆமாம்.''

''குதிரை ஒன்றை இலவசமாகக் குருவிற்கு நான் தருகிறேன். நாளை தேவிபட்டினம் வந்து என்னைச் சந்தியுங்கள். என் பெயர் சந்திரன்.'' என்றார்.

அவர்கள், ''நன்றி, நன்றி'' என்றனர்.

(தொடரும்)



## அழகாக நிறம் தீட்டுங்கள் 60



தம்பி, தங்கைகளே! அருகே உள்ள படத்துக்கு அழகாக நிறம் தீட்டி எமது முகவரிக்கு அனுப்பி வையுங்கள். மிகச் சிறந்த முறையில் நிறம் தீட்டப்பட்டு தெரிவுசெய்யப்படும் படம், உங்கள் பெயர், தரம், பாடசாலை போன்ற விவரங்களுடன் பிரசுரமாகும். எங்கே உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள் பார்க்கலாம்.

## சிறந்த முறையில் நிறம் தீட்டப்பட்ட படம்

### அழகாக நிறம் தீட்டுங்கள் 57



ஆர்.எம். விநோத், தரம் 03. சென் தோமஸ் கல்லூரி, கல்கிசை.

### பாராட்டுப் பெறுவோர்...

1. பி. சுதாஜினி, 97, கோவில் வீதி, குருமன்காடு, வவுனியா.
2. எஸ். சஞ்ஜீவன், கொ/ விபுலானந்த த.ம.வி. கொழும்பு - 09.
3. ஏ.எம். மிஸாத் அஹமட், தரம் 4 ஏ, மின்ஹாத் தேசிய பாடசாலை, திக்குவல்லை.
4. ஜே.எச்.பாத்திமா மரியம், தரம் 3, ஸெயினப் மகளிர் மகா வித்தியாலயம், புத்தளம்.

## சிறுவர் கைவண்ணம்



சந்தியா. தரம் - 02. கிங்ஸ்டன் சர்வதேசக் கல்லூரி, வெள்ளவத்தை.



ஜெ. யாழினி. தரம் - 1 கிளி/ புனித திரேசப்பர் முன்பள்ளி, கிளிநொச்சி.



வி.அப்பானா. தரம் - 03. கிங்ஸ்டன் சர்வதேசக் கல்லூரி, வெள்ளவத்தை.



சுரேகா. தரம் - 03. கிங்ஸ்டன் சர்வதேசக் கல்லூரி, வெள்ளவத்தை.

# வண்ண வண்ண கூந்தல்

'பின்னிய கூந்தல் கருநிற நாகம்' என்று கூந்தலைப் பற்றிய அழகான கற்பனைகள் காற்றில் மிதக்கின்றன. கவிஞர்கள் மட்டுமல்ல. பளபளப்பாக இருக்கும் கூந்தலைப் பார்த்தால் சாமானியருக்கும் கவிதை பிறக்கும். நம் முன்னோர்கள், கருமையான, அடர்ந்த நீளமான கூந்தலை அழகு என்கிறார்கள். ஆனால், கால மாற்றத்தால் பழுப்பு, சிவப்பு, மஜந்தா, நீலம், தங்கநிறம், சுருள்சுருள் மற்றும் வெவ்வேறு அலங்காரம் செய்யப்பட்ட கூந்தல்கள்தாம் அழகு என மாறியிருக்கிறது.



பொடுகு, முடி உதிர்தல் போன்ற பிரச்சினைகள் வழமையாக ஒழுங்கற்ற உணவுமுறை, தவறான வாழ்க்கைமுறை, நோய், கர்ப்பகாலம் அல்லது பருவகால மாற்றத்தின் காரணமாக ஏற்படலாம். இத்தகையோர் உணவில் இரும்புச் சத்து, புரதம் மற்றும் கல்சியம் அடங்கிய உணவுப் பொருட்களை உட்கொள்ளவேண்டும். அத்தோடு தலைமுடியைச் சுத்தமாக வைத்திருக்கக் கவனம் செலுத்த வேண்டும்.

**கூந்தலுக்கு நிறமேற்றுதல்**

'நிறமேற்றுதல்' அதாவது 'கலரிங்' இன்று நேற்று ஏற்பட்டதல்ல. பல நூற்றாண்டுகளுக்கு முன்பே பெண்கள் தலைக்கு மருதாணி, நீலம். அக்ருட் என்று கூந்தலுக்கு நிறமேற்றியிருக்கிறார்கள். கூந்தலுக்கான நிறம் எவ்வளவுகாலம் இருக்கவேண்டுமென்பதையும் அவரவர்களே முடிவு செய்துகொள்ளலாம். அதாவது, 'நிரந்தரம்' (பெர்மனென்ட்), சிறிது காலத்துக்கு மட்டும் (செமி - பெர்மனென்ட்) மற்றும் தற்காலிகம் (டெம்ப்ரரி) என்ற மூன்றில் தங்கள் விருப்பத்துக்கேற்றவாறு தேர்ந்தெடுக்கிறார்கள். நிரந்தர நிறம் என்பது 4-5 ஷாம்பு குளியல் வரை தங்கியிருக்கும் அதேபோல் சிறிது காலத்துக்கு மட்டும் சேர்க்கப்படும் நிறம் 2-3 வாரம் வரை தங்கியிருக்கும். தற்காலிக நிறமென்றால் அதற்கு 'ஹேர் மஸ்காரா', 'கலர் டியூப்ஸ்' ஆகியவை வருகின்றன. இவை சில மணிநேரம் முதல் சிலநாட்கள் வரை இருக்கும்.


இந்த நிறங்களில் சிறிதளவு அமோனியா கலந்திருப்பதால் தலைமுடியின் இயற்கையான நிறம், அதன் அமைப்பு மற்றும் மண்டைஓடும் பாதிப்படைகின்றன. நிறமேற்றிய பிறகு தலைமுடி கடினமாகிறது. இதற்கும் எண்ணெய் 'மசாஜ்' மிக அவசியம்.

'மசாஜ்' செய்ய முதலில் எண்ணெயை வெதுவெதுப்பாக சூடுபடுத்தவேண்டும். தலைமுடியைப் பகுதிகளாகப் பிரித்துக்கொள்ளவும். பிறகு பஞ்சை எண்ணெயில் முக்கி மயிர்க்கால்களில் தடவவும். விரல்நுனியால் தலைமுடியை நேர்மறையாகவும் மற்றும் எதிர்மறையாகவும் வட்டமாகச் சுற்றி லேசாக அழுத்தியபடி மசாஜ் செய்யவும். வலுவாக இருந்தால் இன்னும் நன்றாக மசாஜ் செய்யவும். ஒருவேளை தலைமுடி பலவீனாக இருந்தால் லேசாக 'மசாஜ்' செய்யவும், எண்ணெயை எப்போதும் மண்டை ஓட்டில் தடவவும். முடியில் தடவ வேண்டாம்.

தலைமுடியில் 1முதல் 2 மணி நேரம் வரை எண்ணெய் தடவி வைக்கவும். மசாஜுக்குப் பிறகு சூடான டவல் சிகிச்சை கொடுக்க வேண்டும். அதன்பிறகு 'ஹேர் பேக்' தடவவும். இந்த பேக் கடையில் ரெடிமேட்டாகக் கூடக் கிடைக்கிறது. விரும்பினால் வீட்டிலேயே கூட இந்த பேக்குகளைச் செய்ய முடியும். இதற்கு 2 ஸ்பூன் சியக்காய். நெல்லிக்காய் பவுடரில் சிறிதளவு தயிர் சேர்க்கவும். பிறகு அதில் முட்டை, வெங்காயச் சாறு, வெந்தயம், ஒரு ஸ்பூன் ஹென்னா மற்றும் கண்டிஷனர் சேர்த்து தலைமுடிக்குத் தடவவும். இந்த பேக்கை 1/2 மணிநேரம் தலைமுடியில் ஊறவிடவும்.

அன்றைய தினம் வெளியே செல்வதாக இருந்தால் தலைமுடியை வெறும் நீரில் அலசி மறுநாள் ஷாம்போ போடவும். மற்றப்படி நீரில் அலசி ஒன்று முதல் இரண்டு மணி நேரம் கழித்து ஷாம்பு போடவும். ✦

# பளபள உதடுகள்



பெண்களின் உதடுகளை மிருதுவான மலர்களுக்கு ஒப்பிட்டுச் சொல்வர். மனதில் உள்ளதை வெளிப்படுத்தும் உதடுகளுக்கு உரிய மரியாதையே தனிதான்.

இங்கிலாந்தின் லூயிஸ்லியே பல்கலைக்கழக விஞ்ஞானிகள் செய்த ஆய்வில் ஈரப்பதமான உதடுகளே கவர்ச்சியாக உள்ளன எனக் கண்டறிந்துள்ளனர். இதனால், முக அழகும்கூடும். அழகான மற்றும் கவர்ச்சியான உதடுகளுக்குத் தேவை சரியான பராமரிப்பும், கவனமும் ஆகும்.

பெண்களின் ஆளுமையின் அடையாளமே உதடுகள்தான். விஞ்ஞானிகளின் கருத்துப்படி உங்கள் உதட்டின் அமைப்பே உள்ளத்தைப் பறைசாற்றி விடுமாம். அதாவது, உதாரணத்துக்கு ஒரு பெண்ணின் உதடு சாதாரணமாக இருந்தால் - அதாவது மேல் உதடு மெலிதாகவும், கீழ் உதடு சற்று தடிமனாகவும் இருந்தால் - இத்தகைய பெண்கள் இலட்சியவாதியாகவும் மிகவும் துணிச்சலுடனும் காணப்படுவர். மேலும் இவர்கள் வாங்குவதைவிட மேலும் தரமுடியும் என்ற நம்பிக்கை கொண்டவர்கள்.

அதிக காதல் நிறைந்த பெண்களின் உதடுகள் ஒரே மாதிரி இருக்கும். இவர்கள் தாங்கள் கண்ட கனவை நனவாக்க வானத்துக்கும் பூமிக்கும் குதித்து விடுவ மிகவும் துணிச்சல் உடையவராகவும், வாழ்க்கை வாழ்வதற்கே என்ற கொள்கை உடையவராகவும் இருப்பர்.

நீண்ட உதடுகள் உள்ள பெண்கள் கூச்ச சுபாவம் உள்ளவர்களாக இருப்பர். இவர்கள் ஆடம்பரத்தை விரும்புவர். அழகியப் பொருட்களை கலை ரசனையுடன் காண்பர்.

வட்டவடிவ உதடுகள் உள்ள பெண்களின ஆளுமை கவர்ச்சியாக இருக்கும். இவர்கள் வாழ்நாளில் தோல்வியைத் தழுவவே மாட்டார். இவர்கள் ஒவ்வொரு நாளும் உற்சாகத்துடன் செயல்படுவர்.

உதடுகளைக் கவர்ச்சியாக்க லிப்ஸ்டிக்கை சரியான முறையில் பூசிக்கொள்வது அவசியம். லிப்ஸ்டிக் பூசிக்கொள்ளம் முன்பு, தங்கள் உதடுகளை நன்கு துடைக்க வேண்டும். இதற்கு மிருதுவான துணி அல்லது பஞ்சைப் பயன்படுத்த வேண்டும். அப்போதுதான் உதடுகளில் உள்ள பிசுபிசுப்புத் தன்மை அகலும், உதடுகள் பளபளப்பாக, லிப்ஸ்டிக் அதிக நேரம் இருக்க லிப்ஸ்டிக் மேலே லிப்க்ளாஸ பயன்படுத்தவும். லிப்க்ளாஸ் இல்லையெனில் வாஸலினை பயன்படுத்தவும்.

எப்போதும் லிப்ஸடிக்கை அகற்ற உதடுகளைத் தேய்க்கக்கூடாது. ஏனெனில், உதடுகள் மிகவும் மிருதுவானவை.

இரவு தூங்கப் போகும் முன்பு லிப்ஸ்டிக்கை அகற்றுவது மிகவும் அவசியம். பஞ்சில் சிறிதளவு க்ளென்சரைத் தடவி உதடுகளில் உள்ள லிப்ஸ்டிக்கை அகற்றவும். அப்போதுதான் அவை நல்ல காற்றை உள்வாங்க முடியும்.

மாறும் பருவ காலமும் உதடுகளைப் பாதிக்கக் கூடும். குளிர் காலங்களில் உதடுகள் வறண்டு விடக் கூடும். அப்படி வறண்டு உதடுகளிலிருந்து ரத்தம் கூட வரலாம். அப்போது உதடுகள் பார்க்க கவர்ச்சியாக இருக்காது. அவை தனது அழகை இழந்துவிடக்கூடும். புத்தம் புதிதான ரோஜா மலர் இதழ்களை அரைத்து 1/2 சிறிய தேக்கரண்டி பாலில் சேர்த்து இரவு முழுவதும் தூங்கப் போகும் முன்பு உதடுகளில் தடவிக்கொள்ள வேண்டும். இதனால் உதடுகள் ஈரப்பதத்துடனும், ரோஜா நிறத்துடனும் பளபளப்பாக காட்சி அளிக்கும். ✦

# அங்கே என்னதான் நடக்கிறது?

தென்கச்சி சுவாமிநாதன்

"என்ன சார்... இந்த நேரத்துலே வந்திருக்கீங்க?"

"சும்மா கொஞ்ச நேரம் பேசிக்கிட்டுப் போகலாம்னு வந்தேன்! ஆமா, ஏதோ புத்தகம் படிச்சிட்டு இருக்கீங்களே... நாவலா?"

"இல்லே. இது வேறே...!"

"என்னன்னுதான் சொல்லுங்களேன்...?"

"நாம இந்த உலகத்துக்கு வர்றதுக்கு முன்னாடி எங்கே இருந்தோம்?"



"அது யாருக்குத் தெரியும்?"

"நான் அதைக் கேக்கலே. நாம பிறக்கறதுக்கு முன்னாடி ஓர் இடத்துலே கொஞ்சநாள் தங்கியிருந்தோமே... அந்த இடம் ஞாபகம் இருக்கா?"

"எந்த இடத்தை சொல்றீங்க?"

"அதுதாங்க... கருப்பை!"

"ஓ... ஆமாம்!"

"அதைப் பற்றிய புத்தகம் இது. சரி, அங்கே என்ன நடக்குதுங்கிறதைப் பத்தி உங்களுக்கு ஏதாவது தெரியுமா?"

"ஹி... எதுவும் ஞாபக மில்லை!"

"இது நாள் வரைக்கும்... கருப்பைக்கு உள்ளே என்ன நடக்குதுங்கிறதை பத்தி யூகமாதான் சொல்லிகிட்டிருந்தாங்க. இப்ப அப்படி இல்லே... கேளா ஒலி வரைவுகள் மூலமா அங்கே என்ன நடக்குதுங்கிறதை நல்லா புரிஞ்சிக்க முடியுது"

"அப்படி என்னதான் நடக்குதாம் அங்கே?"

"கருப்பைக்குள்ளே இருக்கிற குழந்தை கொட்டாவி விடுதாம்! விரல்களை சப்புதாம்... கைக்கு எட்டறதை பிடிக்குதாம்... சோம்பல் முறிக்குதாம்.. கொட்ட கொட்ட விழிக்குதாம். முகத்தை கோணிக்குதாம்! இவ்வளவும் ஒரு டெலிவிஷன் திரையிலே பார்க்க முடியுது... அந்த அளவுக்கு ஒரு மருத்துவ விஞ்ஞானம் வளர்ந்திருக்கு!"

"சினிமா மாதிரி பார்க்கலாம் போலிருக்கே?"

"ஆமாம்! கருப்பைக்குள்ளே சிசு ஒரு திரவத்தில் மிதந்துக்கிட்டு இருக்கு. கண் விழிச்சதும் அது கொட்டாவி விட்டுக்கிட்டே தன் கை, கால்களை உதைச்சுக்குது. கைகளை நீட்டி தொப்புள் கொடியைப் பிடிக்குது. அதோடு கொஞ்ச நேரம் விளையாடுது. அதுக்கப்புறம் கை கட்டை விரலை வாயிலே வெச்சுக்குது!"

"சரி.. அந்த நேரத்துல அதுக்கு காது கேட்குமா?"

"கேட்கும்! தாயின் இதயத்துடிப்பு, செரிமான பாதையில் ஏற்படுகிற சத்தங்கள் இதையெல்லாம் கேட்டுக்கிட்டே இருக்கிறப்போ... தாயின் குரல் கேட்டுகிறதை உணர்ந்து அதை கவனிக்குது! தாய் எழுந்திரிச்சி நடக்கிறப்போ கருப்பை நீரின் லேசான குலுக்கல்லே மெய்மறந்து மறுபடியும் தூங்கிப்போவுது!"

"அடேங்கப்பா! இதுநாள் வரைக்கும் கருப்பைக்கு உள்ளே குழந்தை ரொம்ப அமைதியா இருக்கும்னுதான் நினைச்சிக்கிட்டு இருந்தேன்"

"ஒரு மைக் மூலமாக அங்கே உள்ள சத்தத்தையெல்லாம் கூட பதிவு பண்ணி இருக்காங்க! தாயின் இதயத்துடிப்பு அங்கே டம்... டம்னு கேட்டுக்கிட்டே இருக்கும். தாய் மூச்சு விடற சத்தம் கூட புஸ்... புஸ்.. னு கேக்குது!"

"தாய்க்கிட்டேயிருந்து வர்ற சத்தங்கள் அங்கே கேட்குதுங்கறீங்க. சரி... வெளியிலே ஒரு குயில் கூவுதுனு வச்சிக்குங்க.. அந்த சத்தம் அங்கே கேக்குமா?"

"அதுவும் கேட்கும். அதனால்தான் கருவுற்ற தாய்மார்கள் இருக்கிற அறையிலே ரேடியோவும் டி.வியும் அலறக்கூடிய அளவுக்கு சத்தத்தை அதிகப்படுத்தி வைக்கக் கூடாதுன்னு சொல்றது!"

"சத்தம் போட்டு பேசுறதும் தப்புதானே?"

"அதுமட்டுமில்ல, நாம சண்டை போடறதும் தப்பு. கருவுற்ற தாய்மார்கள் சத்தமான இடங்களிலே இருக்கக்கூடாது... அதுதான் நல்லது!"

"நீங்க சொல்றது சரிதான்! சரி, பசிச்சா அது என்ன பண்ணும்?"

"அங்கே அது எதையும் சாப்பிட வேண்டிய அவசியம் இல்லே. இருந்தாலும் கருப்பையிலே உள்ள திரவத்தை அது குடிக்குது. அப்படி குடிக்கிறப்போ சில சமயம் அதுக்கு விக்கல்கூட ஏற்படும். அந்த நேரத்துல தாயாருக்கு வயித்துக்குள்ளே ஒரு தவளை குதிக்கிறது மாதிரி இருக்கும்!"

"நீங்க சொல்றதைப்பார்த்தா வயித்துக்குள்ளே இருக்கிற குழந்தைக்கு சாப்பாடும் தண்ணீரும் ஒரு பிரச்சினை இல்லை!"

"சாதாரணமாக உள்ளே இருக்கிற குழந்தைக்குப் பசியோ தாகமோ ஏற்படாது! ஆனாலும், தாயார் சாப்பிடற ஆகாரத்துல சத்துப் பற்றாக்குறை இருந்தா.. குழந்தைக்கும் சத்துப் பற்றாக்குறை ஏற்படும்!"

"ஆக, கருவுற்ற தாய்மார்கள் சத்துள்ள ஆகாரம் சாப்பிடணும்!"

"ஆமாம்! அப்புறம், இன்னொரு செய்தி... ஒரு சிசு, கருப்பையிலே இருக்கிறப்போ ஒரு குறிப்பிட்ட தாலாட்டுப் பாட்டை பாடிக்கிட்டே இருந்தா.. அது அந்த பாட்டுக்கு ஏத்தபடி கை கால்களை ஒரு குறிப்பிட்ட வகையில ஆட்டிக்கத்துக்குமாம். குழந்தை பிறந்த பிறகு அதே பாட்டைப் பாடி, அழுகிற குழந்தையை அமைதிப் படுத்தி விடலாமாம்"

"அடடே... நல்ல டிப்ஸா இருக்கே!"

"உங்களுக்கு ஒரு கதை சொல்லவா?"

"சொல்லுங்க..."

"ஒரு வீட்டுல தொட்டில்ல ஒரு குழந்தை சத்தம் போட்டு அலறிகிட்டிருந்தது. அப்பா தொட்டிலை ஆட்டிக்கிட்டிருந்தார். வெளியில போயிருந்த அம்மா திரும்பி வந்தாங்க. 'சும்மா தொட்டிலை ஆட்டறீங்களே... குழந்தை எப்படி தூங்கும்? ஒரு தாலாட்டுப் பாடக் கூடாதா?'ன்னாங்க. அது முடியாதுன்னார் அப்பா. 'ஏன்...?'னு கேட்டாங்க இவங்க.

அதுக்கு அப்பா சொன்னார்: 'நான் தாலாட்டுப் பாட ஆரம்பிச்ச பிறகுதானே தூங்கிட்டிருந்த குழந்தை இப்படி அலறவே ஆரம்பிச்சது!' ✦

# பாக். உளவு அமைப்புக்கு எதிராக பெருகும் குற்றச்சாட்டுகள்

பாகிஸ்தானின் புலனாய்வு அமைப்பான ஐ.எஸ்.ஐயிற்கும் தலிபான், அல்-கொய்தா அமைப்புகளிற்கும் இடையிலான தொடர்புகள் குறித்த குற்றச்சாட்டுகள் 'சார்க்' மாநாட்டிலும் எதிரொலித்தன.

இவ்வாறான குற்றச்சாட்டுக் குறித்துத் தான் அதிர்ச்சியடைந்துள்ளதாக பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரஜா கிலானி


'சார்க்'கில் இந்திய - பாக் தலைவர்கள்

உறுதியான தடயங்கள் இவை என்கின்றனர் அதிகாரிகள்.

அமெரிக்கா மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து பாகிஸ்தானின் புலனாய்வு அமைப்புக்கள் ஆப்கான் தீவிரவாதிகளுக்கு தகவல்களை வழங்குகின்றன. ஏவுகணைத் தாக்குதல் குறித்து முற்கூட்டியே எச்சரிக்கையினை வழங்குகின்றன என்றெல்லாம் கூறப்படுகின்றது.

பாகிஸ்தானின் புலனாய்வு அமைப்பினால் ஆப்கான் தீவிரவாதிகளுக்கு தகவல்கள் வழங்கப்படும் விடயம் குறித்த அமெரிக்கா வின் கவலையை தெரிவிப்பதற்காக சி.ஐ.ஏ.யின் அதிகாரியொருவர் பாகிஸ்தானிற்கு அனுப்பப்பட்டார் என நியூயோர்க் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

ஜூலை 7ஆம் திகதி குண்டு வெடிப்பிற்கு முன்னதாகவே தாம் தகவல்களை இடைமறித்து கேட்டுவிட்டதாகவும் இதனை தொடர்ந்து சி.ஐ.ஏ.யின் பிரதி இயக்குநர் இஸ்லாமபாத் திற்கு அனுப்பப்பட்டார் என்றும் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐயினால் எவ்வகை யான தகவல்கள் வழங்கப்படுகின்றன என்பது குறித்து எதனையும் தெரிவிக்காத அமெரிக்க அதிகாரிகள், உயர் அதிகாரிகளின் உத்தரவுடனேயே இது இடம்பெறுகின்றது என்கின்றனர்.

செயற்படும் தீவிரவாத அமைப்புகளுடன் பாகிஸ்தானின் புலனாய்வு அமைப்பு நீண்ட காலமாகவே தொடர்புகளை பேணி வந்துள்ளது.

ஆப்கானிஸ்தானின் வளர்ச்சியை கட்டுப்படுத்துவதே இதன் நோக்கம். சமீப காலங்களில் ஆப்கானிஸ்தானில் இந்தியாவின் செல்வாக்கு அதிகரித்து வருவது, பாகிஸ்தானைக் கவலையடையச் செய்துள்ளது. ஹமீட் ஹர்சாய் அரசுடனான நெருங்கிய உறவுகளை இந்தியா வளர்த்துக் கொண்டுள்ளதை இஸ்லாம்பாத் அச்சத்துடன் பார்க்கிறது.

மௌலவி ஜலாவுடின் ஹகானி எனும் தீவிரவாதியொருவரின் குழுவே ஆப்கானில் இந்திய தூதரகம் மீது தாக்குதலை மேற்கொண்டிருக்கலாம் என அமெரிக்க அதிகாரிகள் கருதுகின்றனர். மௌலவி ஹகானிக்கும் அல்-கொய்தாவிற்கும் நெருங்கிய தொடர்புகள் உள்ளன.

அமெரிக்காவிற்கு விஜயம் மேற்கொண்ட பாகிஸ்தான் பிரதமரை சந்தித்த வேளை, ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. எவருடைய

பழங்குடி பகுதிகளிலிருந்து வரும் தீவிரவாதிகள் தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பிச்சென்று விடுவது குறித்து அமெரிக்க இராணுவ தளபதிகள் பல வருடங்களாக ஏமாற்றம் வெளியிட்டு வந்துள்ளனர்.

பயங்கரவாதத்திற்கு எதிரான போரின் புதிய மோதல் களமாக இப்பகுதி மாறியுள்ளது. ஆப்கான் - பாகிஸ்தான் எல்லைப் புறத்தில் 1500 மைல் நீளத்திற்கு


மௌலவி ஹகானி

விரியும் இப்பகுதியை பிரிட்டின் ஆட்சியாளர்கள் உருவாக்கியிருந்தனர்.

பாகிஸ்தானின் மிக வறிய - கல்வியறி வற்ற - போர்க்குணம் மிக்க - இப்பகுதி மக்கள் பல தீவிர குழுக்களின் உருவாக்கத் திற்கு துணைபோயுள்ளனர்.

அமெரிக்கா இப்பகுதிக்குள் பல தடவைகள் விமான தாக்குதலையும்

கொழும்பில் தெரிவித்தார்.

இந்திய - பாகிஸ்தான் பிரதமர்கள் மத்தியிலான சந்திப்பில் மன்மோகன் சிங் இது குறித்து கண்டிப்பான தொனியில் - நேரடியாகத் தெரிவித்திருக்கலாம் என்று கூறப்படுகிறது.

ஆப்கானில் இந்திய தூதரகம் மீதான தாக்குதலின் பின்னரே பாகிஸ்தான் - அல்-கொய்தா தொடர்பு குற்றச்சாட்டு பூதாகரமாக உருவெடுத்துள்ளது.

ஆப்கான் தலைநகர் காபூலில் இந்திய தூதரகத்தின் மீது ஜூலை 7 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தாக்குதலிற்கான திட்டமிடலை பாகிஸ்தானின் புலனாய்வு அமைப்பான ஐ.எஸ்.ஐ (I.Đ.I) மேற்கொண்டது என அமெரிக்க புலனாய்வு அமைப்புகள் உறுதியாக நம்புகின்றன.

பாகிஸ்தானிய புலனாய்வு அதிகாரி களுக்கும், குறிப்பிட்ட தாக்குதலை

கடந்த பல மாதங்களாக தமக்கு இருந்து வந்த சந்தேகம் இதன் மூலம் உறுதியாகி விட்டது என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

இந்தியத் தூதரகம் மீதான தாக்குதலை பாகிஸ்தான் புலனாய்வு அதிகாரிகளே திட்டமிட்டனர் என்ற தகவல் அமெரிக்க அதிகாரிகளிடமிருந்து வெளியாகியுள்ளதும் முக்கியமானது. சிலர் பாகிஸ்தான் அரசு, ஆப்கான் வன்முறையுடன் - குறிப்பாக அமெரிக்க படையினர் கொல்லப்படுவதுடன் - நேரடியாகத் தொடர்புபட்டுள்ளது என

கட்டுப்பாட்டில் உள்ளது எனக் கேள்வியெழுப்பியுள்ளதுடன் பாகிஸ்தான் உளவுத்துறையினருக்கும் தலிபான்களுக்கும் இடையிலான தொடர்புகள் பற்றிய தகவல்கள் குறித்தும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அல்-கொய்தாவுடன் தொடர்புடைய தீவிரவாத அமைப்புகளுக்கும், பாகிஸ்தானின் புலனாய்வு அமைப்பிற்கும் இடையே நீண்ட காலமாக இருந்து வரும் உறவை பாகிஸ்தானின் புதிய அரசினர் இலகுவாகக் கட்டுப்படுத்த முடியாது என வெள்ளை மாளிகை கருதுகின்றது.

இந்தியத் தூதரகத் தாக்குதலின் முக்கிய சூத்திரதாரி என கருதப்படும் ஜலாவுடின் ஹகானி 1980களில் ஆப்கானில் சோவியத் ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடியவர். இதேவேளை இவரிற்கு அமெரிக்காவின் சி.ஐ.ஏயுடன் நீண்ட காலமாக முறுகலும் காணப்பட்டது.

சி.ஐ.ஏயிடமிருந்து பெருமளவு ஆயுதங்களையும், நிதியையும் ஹகானி பெற்றிருந்தாலும் ஒஸாமா - பின் லாடன் மீதான அவரது விசுவாசம், அமெரிக்கா அவருடனான உறவுகளை துண்டிக்க காரணமாக அமைந்தது.

ஆப்கானில் தற்போது இடம்பெறும் வன்முறைகளுக்கு ஹகானியே காரணம் என மேற்குலகப் புலனாய்வு அமைப்புகள் கருதுகின்றன.

காபூலில் 'இந்திய தூதரகம் மற்றும் செரெனா ஹோட்டல்' ஆகியன மீதான தாக்குதலிற்கு இவர் தலைமையிலான குழுவே காரணம் என்றும் அவை நம்புகின்றன.

ஹகானி காஷ்மீரில் செயற்படும் லக்ஷர்-ஈ-தொய்பா அமைப்புடனும் தொடர்புகளை கொண்டுள்ளார். குறிப்பிட்ட அமைப்பே கடந்த மாதம் குனார் பகுதியில் அமெரிக்க காவலரண் மீது தாக்குதலை மேற்கொண்டது.

இதில் ஒன்பது அமெரிக்க இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

பாகிஸ்தான் எல்லையிலுள்ள

ரஜீவன்

ஏவுகணை தாக்குதலையும் மேற்கொண்டுள்ளது. எனினும், ஒவ்வொரு முறையும் முக்கிய நபர்கள் எப்படியோ தப்பிவிடுகின்றனர்.

புஷ் நிர்வாகம் இது குறித்து ஏமாற்றமடைந்துள்ளதுடன் அப்பகுதிகளில் சி.ஐ.ஏ. சுதந்திரமாக நடமாடுவதற்கான


பாக் - இந்தியப் பிரதமர்கள் சந்திப்பு

அனுமதியையும் கோரியிருந்தது.

பாகிஸ்தானின் புலனாய்வு பிரிவினர் பணத்திற்காக தகவல்களை எதிர்த்தரப்புக்கு வழங்கி வருகின்றனர் என நீண்ட காலமாக அமெரிக்கப் புலனாய்வு அமைப்புகள் சந்தேகம் கொண்டிருந்த போதிலும் அதனை நிரூபிப்பது கடினமாக விளங்கியது.

கடந்த ஜூன் மாதம் ஆப்கான் ஜனாதிபதி மீது மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சியொன்றிற்கு ஐ.எஸ்.ஐ.யே காரணம் என காபூல் வெளிப்படையாக குற்றம் சாட்டியிருந்ததுடன் பாகிஸ்தான் எல்லைக்குத் தனது படைகளை அனுப்பப்போவதாக எச்சரித்துமிருந்தது. எனினும், அவ்வேளை ஆப்கானால் ஐ.எஸ்.ஐக்கு எதிராக உறுதியான தடயமெதுவையும் முன்வைக்க முடியவில்லை.

எனினும், இந்திய தூதரக தாக்குதல் இறுதியில் இதனை உறுதிப்படுத்திவிட்டது என பிரிட்டிஷ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.


காபூலில் இந்தியத் தூதரகம் குண்டு வெடிப்பு

மேற்கொண்டவர்களுக்கும் இடையிலான தொலைத்தொடர்புகளை இடைமறித்துக் கேட்டதன் அடிப்படையில் அவர்கள் இந்த முடிவிற்கு வந்துள்ளனர்.

பிராந்தியத்தில் அல்-கொய்தா மற்றும் தலிபானிற்கு எதிராக அமெரிக்கா மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் விதத்தில் பாகிஸ்தான் செயற்படுவது பற்றிய

குற்றஞ்சாட்டுகின்றனர்.

இதன் தொடர்ச்சியாகப் பாகிஸ்தான் இனி மேலும் நம்பத்தகுந்த சகாவல்ல என்ற கருத்து அமெரிக்க அதிகாரிகள் மத்தியில் உருவாகத் தொடங்கியுள்ளது. பாகிஸ்தானின் எல்லை பகுதியில் அமைந்துள்ள தீவிரவாதி களின் தளங்கள் மீது அதிரடித் தாக்குதலை நடத்துவது குறித்தும் ஆராயப்படுகின்றது.

பாகிஸ்தானின் பழங்குடி இனப் பகுதிகளில்

## நாராய... (05 பக்கத் தொடர்ச்சி)

னால் கிடைத்த வரப்பிரசாதம்.

மாநாட்டு மண்டபத்தின் வெளிப்புறத்தே சிற்றுண்டி பரிமாறப்பட்டதாயினும் ஏனைய மாநாட்டு அழைப்பாளர்களோடு தானும் வெளியே வந்து தேடிச் சென்று வரிசையில் நின்று அவற்றைப் பெற்றுக்கொள்ளும் நிலையில் - தரத்தில் - நாராயணன் இருக்கவில்லை.

அதேவேளை, நாராயணன் போன்ற உயர் மட்டப் பிரமுகர்களுக்கு - ஏன் நாடுகளின் தலைவர்களுக்குக் கூட - மாநாட்டுக்கு இடையே ஏதும் உணவு, குடிபானங்கள் தனியாகப் பரிமாறப்படவுமில்லை.

இராகு காலத்துக்காக காலை 10.30 தாண்டி ஆரம்பமான ஆரம்ப நிகழ்வு சுமார் நான்கு மணி நேரம் நீடித்து பிற்பகல் 2.30 மணியளவில் பூர்த்தியான போது உயர் மட்டப் பிரமுகர்கள் கூட பசியால் வாடி வதங்கிப் போயிருந்தனர்.

இந்தப் பசிக் கொடுமை தாங்காது ஏனைய மூவரோடு அவர்களின் டாக்ஸில் ஏறிய நாராயணனுக்கு அதற்குப் பின்தான் சோதனை காலம் போலும்.

'சார்க்' மாநாட்டில் பங்குபற்றிய பிரமுகர்களுக்கான பாதுகாப்பு பல்வேறு தரப்பிடமும் பகிர்ந்து அளிக்கப்பட்டிருந்தது.

இந்தியப் பிரதமரின் பாதுகாப்பை இந்திய விசேட பாதுகாப்பு அணி பொறுப்பேற்றுக் கொண்டிருந்தது. ஏனைய இந்திய பிரமுகர்களைப் பொறுத்தவரையில் தாஜ்சமுத்திரா ஹோட்டலைச் சூழ இந்திய பாதுகாப்பு அணி பார்த்துக் கொண்டது. வெளியில் - வீதிகளில் - இலங்கை பொலிஸாரும், ஏனைய படையினரும் அமைச்சரவைப் பாதுகாப்புப் பிரிவினரும் கவனித்தனர். மாநாட்டு மண்டபத்திலும் சுற்றாடலிலும் பொறுப்பு ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவிடம்.

ஹோட்டல் டாக்ஸியில் ஏனையோரோடு பயணித்த நாராணயன் மாநாட்டு மண்டப வளாகத்தை விட்டு வெளியே வீதிக்கு வந்த பின்னர்தான் நிலைமையை உணர்ந்தார்.

மாநாட்டு பிரமுகர்கள் 'தாஜ்சமுத்திரா' ஹோட்டல் மற்றும் ஏனைய இடங்களுக்குச் செல்வதற்கு பல வீதிகளைப் பொதுப் போக்குவரத்துக்கு மூடி, அவற்றின் வழியே பிரமுகர்கள் செல்வதற்கான ஒழுங்குகளை செய்திருந்த பொலிஸார், ஹோட்டல் டாக்ஸி ஒன்றை அந்த விசேட பாதையில் செல்ல அனுமதிக்கவில்லை. அதனை பொதுமக்களின் வாகனங்கள் செல்லும் பாதைக்குள் திருப்பி விட்டு விட்டனர் - உள்ளே ஒரு முக்கிய பிரமுகர் இருப்பதை அறியாமல்.

டாக்ஸி டிரைவரும், பொதுமக்கள் போக்குவரத்துக்குப் பல வீதிகளும் மூடப்பட்டுக் கிடந்ததால் தனது டாக்ஸிக்கு உள்ளேயிருந்த பிரமுகரை 'தாஜ் சமுத் திரா'வுக்கு கிட்டவாகக் கூட்டிச் செல்ல பல வீதிகளையும் தெருக்களையும் சுற்றி அலைந்து கஷ்டப்பட வேண்டியவரானார். பல இடங்களில் ஏனைய வாகனங்களுடன் நீண்ட நேரம் காத்து தவம் கிடந்து டாக்ஸி டிரைவர் சிரமப்பட, அங்கு இந்திய வட்டாரங்களில் பெரும் பரபரப்புத் தொற்றிக் கொண்டது.

கையில் கைத்தொலைபேசியும் இல்லாமல், தமது வாகன அணியிலும் ஏறாமல், ஏனைய இந்தியத் தரப்பினருடனும் தொடர்பு கொள்ளாமல், மண்டப முகப்புப் பக்கத்திலிருந்து காணாமற் போன நாராயணன், தாஜ் சமுத்திரா ஹோட்டலுக்கும் வந்து சேராமல், அதற்கான பிரதான போக்குவரத்து மார்க்கத்தில் சென்ற வாகனங்களிலும் இல்லாமல் போகவே இந்திய அதிகாரிகள் அங்கு, இங்கு என்று அரக்கப் பரக்க அவரைத் தேடத் தொடங்கினார்கள்.

பாதுகாப்பு வாகன அணிகளுடன் வரும் பிரமுகர்களின் வாகனங்கள் மட்டுமே செல்வதற்கு இடமளித்து, தாஜ்சமுத்திரா ஹோட்டலுக்கான சகல பாதைகளும் மூடப்பட்டிருப்பதை உணர்ந்த டாக்ஸி டிரைவர் பொது மக்களின் பாதைகளில் பயணித்து தாஜ் சமுத்திரா ஹோட்டலுக்கு தமது டாக்ஸியில் உள்ள பிரமுகரைக் கொண்டு போய்ச் சேர்க்க முடியாது என்பதை நன்கு உணர்ந்து கொண்டார். அதன்பின் தம்மால் இயன்றவரை ஹோட்டலுக்கு நெருக்கமான இடத்துக்கு அவரைக் கொண்டு செல்ல முயன்றார்.

அதன்படி 'தாஜ் சமுத்திரா'வுக்குப் பின்னால் கொழும்பு, கொம்பனித்தெருவில் இராணுவப் படைத்தலைமையகப் பகுதிக்கு சற்றுத் தொலைவில் உள்ள வீதித்தடை வரை ஒருவாறு அவரைக் கொண்டு வந்து சேர்த்தார்.

அங்கு பாதை நிரந்தரமாக மூடிக் கிடந்தது. நாராயணன் தம்மை அறிமுகப்படுத்தியும் கூட, பாதையைத் திறந்துவிட அங்கு காவலுக்கு இருந்த படையினர் மறுத்து விட்டனர்.

சற்று நேரம் வாதிட்டுப் பார்த்த நாராயணன் கோபம் மேலிட்டவராகத் திட்டி விட்டுத் தம் பாட்டில் வீதி வழியே நடந்து 'தாஜ் சமுத்திரா' பக்கம் நடையைக் கட்டத் தொடங்கி விட்டார்.

அவ்வேளை, அந்த தடை முகாம் பகுதிக்கு வாகனத்தில் வந்து சேர்ந்த - வெளிவிவகார அமைச்சில் பணிபுரியும் - பிரசாத் காரியவாசம் என்ற இராஜதந்திரி அங்கு நடக்கும் விபரீதத்தை அவதானித்துப் பதறிப் போனார். சம்பந்தப்பட்ட மேலதிகாரிகளுக்கு அறிவித்து, அனுமதி பெற்று, தடைமுகாம் கதவைத்திறந்து, ஒரு வாகனத்தில் நாராயணனை அவர் கலைத்துப் பிடிப்பதற்குள் - தட்டத் தனியாய் - 'நடராசா'வாகச் சென்ற நாராயணன் - இராணுவத் தலைமையக முன்புறத்தையும் சுற்றிக் கொண்டு 'ஹொலிடே இன் ஹோட்டல்' முகப்பையும் தாண்டி விட்டிருந்தார்.

பின்னர் அங்கிருந்து காரியவாசம் தமது வாகனத்தில் அவரை ஏற்றிக்கொண்டு 'தாஜ் சமுத்திரா' ஹோட்டல் முகப்பில் கொண்டு போய் அவரை இறக்கிய போதுதான் அதுவரைப் பரபரப்பிலும், அதிர்ச்சியிலும் மூழ்கிப் போய்க் கிடந்த இந்தியத் தரப்பு அடங்கி சற்று ஆசுவாசப்பட்டது.

நீண்ட அலைச்சலின் பின்னர், தனித்து பாதுகாப்பின்றி இழுபட்டு தனியார் வாகனங்களில் ஏறி இறங்கியும் நடந்தும் ஒருவாறு ... தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் தமது ... டலுக்கு மீண்டதால் எழுந்த இராஜதந்திர நெருக்கடியை உணர்ந்து கொண்ட இலங்கைப் பாதுகாப்புத் தரப்பு, அதனைச் சமாளிப்பதற்காக பாதுகாப்புக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் ஒருவரை - அன்று மாலையே - நேரடியாக நாராயணனிடம் அனுப்பி மன்னிப்புக் கோர வைத்து சமாளிக்க முயற்சித்தது.

ஆனால் விடயம் அடங்கியபாடில்லை.

நாராயணன் விவகாரத்தை ஒட்டிக் கிளம்பிய இராஜதந்திர முறுகல் பல மட்டத்தில் புகைச்சலையும் உரசலையும் கிளப்பியிருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன. அவற்றின் விளைவு இனித்தான் போகப்போக வெளியே வரும்.


மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPHY)

இளம்வயதில் வாலிபத் தூண்டுதலால் புரியாமல் செய்யும் தவறுகளால் ஆளுமைக்குறைவு, சக்தி குறைவு, ஞாபக மறதி ஏற்படுதல் மற்றும் பயம், நடுக்கம், நித்திரை குறைவுடன் தாழ்வு மனப்பான்மை போன்ற நோய்களுக்கும்

- ஆரம்ப மன நோய்களை உடனே குணமாக்கலாம்.
- ஆஸ்மா, நீரிழிவு, தலையிடி, வாதம், குழந்தைப்பேறு இன்மைக்கும் பெண்களுக்கும், வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்வீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு.

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம்

SEXUAL DISORDERS (ஆண்மைச் சக்தி குறைவு)

மனித உறுப்புக்கள் அனைத்துக்கும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சிலபிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. இதற்காக வெட்கப்படவோ வேதனைப்படவோ தேவையில்லை. (பிறவியிலேயே ஆண்மையற்றவர்கள் தவிர) இதற்குப் பல காரணங்கள் உண்டு.

- அளவுக்கதிகமாக விந்தை விரயமாக்கியது.
- கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது.
- உடலுறவின் போது விந்து விரைந்து வெளியேறுதல்.
- முதல் தடவையாக உறவுகொள்ளும் போது ஏற்படும் பயத்தினால் உறவில் திருப்தியின்மை.

இக்குறைகளாலும், தோல்வி அவமானத்தாலும் இனி நமக்கு வாழ்வே இல்லை என்ற தாழ்வு மனப்பான்மை வளர்ந்து முற்றாக ஆண்மை குன்றலாம். பயப்படாதீர்கள் எமது மனோதத்துவ வைத்திய முறையிலும், திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

டாக்டர் ஆறுமுகம்
அவர்களை சந்திக்கும் இடங்கள்

வவுனியாவில்...
(தொலைபேசியில் தொடர்புகொள்ளவும்)
Vanni Inn,
2ஆம் குறுக்குத்தெரு, வவுனியா,
Tel No. 024 2222074
Hot Line: 0777 569205

கொழும்பில்...
2008 ஓகஸ்ட் 10 முதல் 27 வரை
New Ahmed Tourist Inn,
BangBang Building
2-2/2, Bankshall Street, Colombo - 11.
Tel No. 5368426, 5368427
Hot Line: 0777 569205

யாழ்ப்பாணம்...(பின்னர் அறிவிக்கப்படும்)

வெளிநாட்டினருக்கு விசேட
வைத்திய முறை செய்யப்படும்


வெளிநாட்டில் உள்ளவர்கள் தபால் மூலம் (தயவுசெய்து முத்திரை ஒட்டிய கடித உறையுடன்) விளக்கம் தருவதால் மனோதத்துவ வைத்திய முறையில் ஆலோசனை பெற்று அத்துடன் திறமான மூலிகை மருந்தும் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

கடிதத் தொடர்புகளுக்கும் ஏனைய நாட்களில் சந்திப்பதற்கும்

Dr. P. Arumugam,
51/5, Koolavady Road,
Batticaloa, Srilanka.
Resident Tel No. 065 2224019.
Hot Line: 0777 569205.

தயவு செய்து ரூபா.250/= செலுத்தி பதிவு செய்து கொள்ளவும்.





Study in the USA
The Experience of a Life Time

ஆகக்குறைந்த தகைமை G.C.E. O/L

- நியாயமான மற்றும் குறைந்த டியூசன் கட்டணம்
- இலவச ஆலோசனை / வழிகாட்டல்
- VISA நேர்முகப்பரீட்சைக்கான இலவசப்பயிற்சி
- மாணவர்களின் தகைமைக்கேற்ப VISA வை இலகுவாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் பொருத்தமான கற்கைநெறி தெரிவு செய்து தரப்படும்.
- Financial Arrangement (Sponsorship) இல்லாத மாணவர்களுக்கு Sponsor ஏற்பாடு செய்து தரப்படும்.



எமது நிறுவனத்தின் புதிய அணுகுமுறை மற்றும் திட்டமிடலினால் இறுதியாக விண்ணப்பித்த அனைத்து மாணவர்களும் Visa பெறுவதில் 100% வெற்றிப் பயணத்தை அடைந்துள்ளனர்.

அமெரிக்காவில் உள்ள சில பிரபல கல்லூரிகள் 16-22 வயதிற்கு உட்பட்ட சர்வதேச மாணவர்களை அதிகூடிய கவனத்தில் எடுத்துக்கொள்வதனால் Visaவை பெற்றுக்கொள்வதில் சலுகை வழங்கப்படுகின்றது. மேலதிக தகைமைகளைக் கொண்ட 22 வயதிற்கு மேற்பட்ட மாணவர்களும் இலகுவில் Visaவை பெற்றுக்கொள்ளலாம்.

உடன் அழையுங்கள் - 071 58207

SBS
Sydney Business School (Pvt) Ltd
130, Galle Road, Dehiwela. Tel : 4208094 /2718836

# சிறுவிளம்பரங்கள்

## திருமண சேவை

சுலபமான வாழ்கைத்துணைத் தெரிவுக்கு சுய தெரிவுமுறையே! சுயதெரிவு முறைபற்றிய வரன் முறையைத் தெரிந்திடத் திங்கள். புதன். வெள்ளி மாலை வேளைகளில் சுயதெரிவு முறைமுன்னோடி சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத் துநர் குரும்பசிட்டியூர் மாயெழு வேல் அமுதனிடம் தொடர்புகொள்ளுக! தொலைபேசி: 2360 488, 2360694, 4873929.

யாழ்ப்பாணம். அருள் முருகன் திருமணங்களை யும் மன நீதியின் பாற்படுகின்ற சேவைகளையும் விரும்புவோர். மன நீதியின் பாற்படுகின்ற பண்பு டையோர் தொடர்புகள். இங்கு அதிகளவு மணமக்கள் உள்ளனர். பதிவுப்படிவங்களை வவுனியாவிலும் கொழும்பிலும் பெறலாம். Tel : 011 4980208.

www.thaalee.com. என்கிற Website மூலமாக இயங்கும் திருமணசேவையில் 4500 இற்கும் மேற்பட்ட மணமக்களுடைய படங்கள். ஜாதகங்கள். சகல விவரங்கள் அடங்கிய Profile கள் உள்ளன. இதுவரை வாழ்க்கைத் துணையைத் தேடிக்க ளைத் தவர்களுக்கு www.thaalee.com ஒரு விடிவெள்ளி. எனவே. எமது Website ஐ நாடுங்கள்.

## வீடு விற்பனைக்கு

மட்டக்களப்பு எல்லைவீதியில் 10 பேர்ச்சஸ் காணியி னுள் அடங்கிய புதிதாக கட்டப்பட்ட 3 கடைகளுடன் சேர்ந்த மாடி வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு : 077 9794892

நுகேகொடை டவுனில் 20 பேர்ச்சஸ் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு : 071 3566656.

நீர்கொழும்பு வீதி. பேலியகொட. துட்டுகெமுனு மாவத்த. 127 / 4. அலன் கார்டன் லேன் 5 பேர்ச்சஸ் காணி வீட்டுடன் விற்பனைக்கு விலை. 22 லட்சம் தொடர்பு : 011 74066226.077 6047375.

இல.51 / 5. சென்மேரிஸ். மட்டக்குளி. கொழும்பு - 15 இல் 10. 6 பேர்சசஸ் 3 படுக்கையறைகள் ( 1 Bedroom A/C). கராஜ் 3 பாத்ரூம் தொலைபேசி உடன் கூடிய வீடு விற்பனைக்கு தொடர்பு : 077 4161923. 2521445.

வத்தளை. கெரவலப்பிட்டி. பரணவத்தை பாதையில் 16 பேர்ச்சஸ் காணி விற்பனைக்கு உண்டு. (8 பேர்ச் துண்டுகளாகவும் கொடுக்கப்படும்) தொடர்பு : 077 4274599. 011 4981239

கலேவெல. தம்புள்ள வீதியில் 36 பேர்ச்சஸ் காணி விற்பனைக்கு உண்டு. விலை பேசி தீர்மானிக்கப்படும். தொடர்பு கொள்ளவும்: 071 9116623.

## தேவை

வேலை ஆட்கள் தேவை. 25 வயதிற்குட்பட்ட ஆண்கள் அடையாள அட்டை.கிராம சேவையாளர் (வதிவிட) சான்றிதழுடன் நேரில் வரவும்.தங்குமிட வசதி உண்டு. No. 53, Maliban Street, Colombo - 11.

பாமசியில் வேலை செய்வதற்கு ஆண் / பெண் தேவை. ஆண்கள் வேலை தெரிந்தவர்களாய் இருக்க வேண்டும். தங்குமிட வசதி உண்டு. Sunrise Pharmacy, 301A, Dam treet, Colombo- 12. 071 4836582.

கண்டியில் பிரபல அச்சகமொன்றிற்கு Computer Type setters தேவை. தொடர்பு கொள்க. The Manager. 258, D.S. Senanayake Veediya, Kandy. 0777 812765

அனுபவமுடைய மேசன், பாத்ரூம் பிட்டிங்ஸ், டைல்ஸ் பதித்தல், லேபரர்ஸ், தச்சு பாஸ், இலக்ரீஸன் உடனடியாக வத்தளை வீட்டு வேலைக்கு தேவை. தங்குமிட வசதி உண்டு. தொடர்பு : 2981830.071 4142976.

கொழும்பில் உள்ள தனியார் நிறுவனத்திற்கு Electronic Helpers தேவை. தமிழ். சிங்களம் தெரிந்த ஆண்கள் விண்ணப்பிக்கவும். அனுபவம் அவசிய மில்லை. Light Engineering, 61/1B, St. Reetas Road, Ratmalana.

இரும்புத் தொழிற்சாலைக்கு பழைய இரும்பு (டோர் ஸ்டீல். M.S. ப்லேட். (கோச்சி பீலி) துண்டுகள் தேவை. தொடர்பு : 071 7727773.

மருதானையில் பிளாஸ்டிக் மெசினில் வேலை செய்வதற்கு தையல் தெரிந்தவர்கள். உதவியாளர்கள் தேவை. தொடர்புக்கு : 071 4910259.

கொழும்பில் இயங்கும் க்ளியரன்ஸ் ஏஜன்சி நிறுவனம் ஒன்றிற்கு Office, Clerk, Computer Clerk முதலான வேலைவாய்ப்புக்கள் காத்திருக்கின்றன. தகைமைச் சான்றிதழ்களுடன் உடனடியாக தொடர்பு கொள்ளுங்கள் . எம். வரதராஜ் தொலைபேசி இலக்கம் : 0777 425438.

கொழும்பு நகரில் இயங்கி வரும் பிரபல வியாபார ஸ்தாபனத்திற்கு வேலையாட்கள் தேவை. சம்பளம் 12.000/-ரூபாவுடன் தங்குமிட வசதிகள் உண்டு. மலையகத்தவர் மட்டும் விண்ணப்பிக்கவும். விரும் பியவர்கள் அடையாள அட்டை, கிராம அலுவலகரின் நற்சான்றிதல்களுடன் நேரில் அல்லது தபால் மூலம் தொடர்பு கொள்ளவும். Manager, 1106, Maradana Road, Borella, Colombo 08. Tel : 077 9521195, 0777 599233.

சேட்ஸ் மற்றும் காற்சட்டை தைக்கக்கூடிய ஆண் தையற்காரர்கள் தேவைப்படுகின்றார்கள். தொடர்பு கொள்க : New Star Tailors, 126, St. Anthony's Mawatha, Colombo - 13. Tel : 5835586, 077 5278928.

கொழும்பு 12இல் உள்ள வீடு ஒன்றிற்கு கொழும்பில் Car Driving செய்து நல்ல அனுபவமுள்ளவர் தேவை. வயது 55இற்கும் 60ற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். அருகில் வசிப்பவர் விரும்பத்தக்கது. கண் பார்வை நன்றாக உளளவர் மிகவும் விரும்பத்தக்கது. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். இன்று பகல் 12 மணிக்கு பிறகு தொடர்பு கொள் ளவும். 077 6294133.

சப்பாத்துக்கடைக்கு அனுபவமுள்ள Salesman தேவை. உடன் நேரில் வரவும் 14. Cross Road, Maharagama.

இரும்புக் கம்பனியில் Accounts செய்யக்கூடிய ஆண்.பெண் உடன் தேவை. இக் கம்பனியில் O2 கடர். பேள்டர் மற்றும் கடின வேலை செய்யக்கூடிய வேலையாட்கள் உடன் தேவை. கிராம சேவகர் பத்திரத்துடன் நேரில் வரவும். G.A.P. Metaal (Pvt) Ltd, No.101A, Station Road, Angulana, Moratuwa. Tel, 011 2636401. 0777 348243.

விற்பனை பிரதிநிதிகள் தேவை. நேர்முக பரீட்சைக்கு வரவும் மூலப் பிரதி சான்றிதழ்களோடு. Speed Pharma Distributors, No.28, Piyarathanarama Place off Allan Avenue, Dehiwela. தொலைபேசி : 2739899.

தேவை கொம்பியூட்டர் ஒப்ரேட்டர். முழுமையான தகைமைகளோடு மற்றும் லிகிதர் ஆங்கிலத்தில் நன்றாக பேசக்கூடியவர்கள் ஆண் அல்லது பெண். உங்கள் தகைமை விவரங்களை ஏசியன் லங்கா Est. பிவிடி லிமிட்டட் 93 3/1, பிரதான வீதி, கொழும்பு 11.

சைவ உணவகம் ஒன்றிற்கு உணவு தயாரித்து விற்பனையும் செய்யக்கூடிய ஒருவர் தேவை. தொடர்புகளுக்கு : 072 4480049. 060 2324414.

6 மாதகால ஆன்மீக பயிற்சிக்காக மலையக யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின் றன. நான்கு மதங்களைக் கற்று இறைவனை சென்றடையும் தூய வழியினை மக்களுக்கு போதிப் பதற்கான பயிற்சியானது. உணவு தங்குமிட வசதிகள். சம்பளம் வழங்கப்படும். Peace of Life Holy, Version Devosional Centre, No. 12, Vishnu Puram, 071 5397314.

## வாடகை

தொழில் புரியும் முஸ்லிம் வாலிபருக்கு அறையொன்று வாடகைக்கு உண்டு. நல்ல வசதி உண்டு. கொழும்பு 14. பி.ப 6.00 மணிக்குப் பின் தொடர்பு கொள்ளவும்.Tel : 072 2907023, 077 9677366.

இல.155. Layard Broadway யில் கடையாகவோ ஸ்டோராகவோ பாவிப்பதற்குரிய 750 சதுர அடி இடம் ரொட் ஓரமாகவுள்ளது. குத்தகைக்கு விடப்படும். தொடர்பு: நிரோஸ் 072 5376232.

சிறிய கடை வாடகைக்கு உண்டு. மற்றும் சிகை அலங்கார கடைக்குரிய தளபாடங்களுடன் கடை ஒன்று வாடகைக்கு உண்டு. தொடர்பு 69. புதுச் செட்டித்தெரு. கொழும்பு 13. Tel ; 077 9598042.

Full Furnished House Up Stair two Rooms, Three Toilets, TV, washing Machine 26,000/- Without Furniture 15,000/- Palliyawatta, Wattala 077 3228008. 2938806.

அரச நிறுவனம் ஒன்றில் தொழில் புரியும் ஒருவருக்கு முற்பணமற்ற தங்குமிட வசதி தேவை. (கொழும்பு) தொடர்பு: 077 3575001.

கொழும்பு 15. 4 படுக்கையறைகள் கொண்ட வீடு எல்லா வசதிகளோடும் ஒரு குடியிருப்புப் பகுதி வாடகைக்கு உண்டு. 25.000/-. 2 வருட முற்பணம் தேவை. (பேசித்தீர்க்கலாம்) 0777 209349. 011 2521508

கண்டி. மஹகந்த. பேராதனை பல்கலைக்கழகம் அருகில் 3 Bathrooms. 1 Hall. சமையலறை ஏனைய வசதிகளுடன் வாகனத் தரிப்பிட வசதியுடனும் வீடு வாடகைக்கு விடப்படும். தொடர்பு கொள்க : 060 2813000, 060 2541663.

வத்தளை, அக்பர் டவுண் சந்தியில் மூன்று கடைகள் வாடகைக்கு உண்டு. சகல வியாபாரங்களுக்கும் சிறந்த இடம். ஒன்றிற்கு 4,000/- ரூபா. ஒரு வருடத்திற்கு அட்வான்ஸ் தேவை. தொடர்பு கொள்க: 011 2936323.071 6225555.

வத்தளை நகரம் தெரியும் தூரத்தில் அல்விஸ் டவுண் பிரதான வீதியில் பிரசித்திபெற்ற சந்தியில் இரண்டு மாடி கட்டடம் மேல்மாடி.கீழ் மாடி கடைத் தொகுதிகள் வாடகைக்கு உண்டு. தொடர்பு : 011 2981994, 011 2930696.

வத்தளை Annex வாடகைக்கு உண்டு. மாதாந்த வாடகை ரூ. 6.500/-. ஒரு வருட முற்பணம். 011 4994579.

வீடு வாடகைக்கு 37/12. புதிய களனி பாலம் வீதி. தரிந்து மாவத்தை, இங்குறுகடைச் சந்தி, கொழும்பு - 14. விவரங்களுக்கு :071 3331002, 011 2473249.

கொழும்பு 15இல் வீடு வாடகைக்கு அல்லது குத்தகைக்கு. ரொட்ரிக்கோ பிளேஸ், மட்டக்குளியில். தொடர்பு : 2699633.

கடையோடு சேர்த்து (வெல்லம்பிட்டி) வீடும். டெக்னிக்கல் சந்தியில் றாசிக் லொஜ் (மருதானை) நாள் வாடகைக்கும் மாத வாடகைக்குமான ரூம்கள் உள்ளன. தொலைபேசி : 011 22347371, 0777 575638.

கந்தானை, நாகொடையில் ஒரு படுக்கையறை, சமையலறை, தனிகுளியலறை மற்றும் சகல வசதி களுடனான வீடு வாடகைக்கு உண்டு. தம்பதியர் விரும்பத்தக்கது. தொடர்பு : 060 2131670.

கல்வி கற்கும் வேலை பார்க்கும் ஆண்களுக்கான அறைகள் வாடகைக்கு உண்டு. முற்பணம் தேவை யில்லை, 531, ஹவ்லொக் றோட், பாமன்கடை, கொழும்பு 06.

சொய்சாபுர B வகை தொடர்மாடியில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. குசினி வசதியும் உண்டு. தொடர்பு : 2638452.077 5940392.

## கல்வி

பௌதீகவியல் அறிவானது விஞ்ஞானத்தின் அடிப்படைச் சக்தியாகும். அனுபவம் வாய்ந்த பட்டதாரி ஆசிரியரினால் வீடு வந்து கற்பிக்கப்படும். தொடர்பு 2943302.071 6040265.

யாழ். அனுபவமிக்க ஆசிரியரால் கொழும்பு வத் தளை பிரதேசங்களில் தர 5 - 11 வரையான தமிழ் மொழி மூலம் கணிதம். விஞ்ஞானம் வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும். தொடர்புகட்கு 077 3971663.

சற்றேனும் ஆங்கிலம் பேச முடியாதோருக்கும் Spoken English இலகு முறையில் நன்கு விளக்கத்துடன் வீடு வந்து கற்பிக்கப்படும். தொடர்பு : 071 6800531.

IELTS / TOEFL தனிப்பட்ட வகுப்பு, வெளிநாடு செல் வோருக்கு, குடும்பத் தலைவியருக்கு, தொழில் பார்ப் போருக்கு Spoken English மற்றும் English Medium மாணவர்களுக்கு English. தொலைபேசி : 071 68 50013.

IELTS Exam Preparation Class (IELTS இன் நான்கு பிரிவிலும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்) Qualified & Experience ஆசிரியரால் தனியாகவும் குழு வாகவும் கற்பிக்கப்படும். (With Special Individual Attention & Training) Results Guaranteed. Contact : 077 3063855.

Grade 10, 11, A/L மா வர்களுக்கு London & Local Maths, ஆசிரியரால் அனுபவமிக்க ஆசிரியரால் வீட் டிற்கு வந்து கற்பிக்கப்படும். (Resonable Rates) T. Kannan - 077 9988578.

ஜேர்மன் மொழி தனித்து கவனம் எடுத்து கற்பிக் கப்படும். பிரபாகரன். 078 6012004. 4951652.

A/L Chemistry பாடவிதானம், கடந்த, எதிர்கால வினா விடைகள் தமிழ் / ஆங்கிலம் மூலம் அதி சிறப்புப் பட்டதாரியினால் வீடு வந்து கற்பிக்கப்படும் தொடர்பு : 071 6828687. 011 2817381

யாழ். பிரபல B.Sc, பட்டதாரி ஆசிரியரினால் தரம் 6 - O/L கணிதம் A/L 2009, 2010, இணைந்த கணிதம். கணினிக்கல்வி வகுப்புக்கள் வீடு வந்து தனியாகவோ குழுவாகவோ சிறந்த விளக்கத்துடன் கற்பிக்கப்படும். தொலைபேசி: 077 1632656.

இத்தாலி நாட்டு மொழியினை Italian குறுகிய காலத்தில் எழுத, பேச, வாசிக்க இலக்கணத்துடன் கற்பிக்கப்படுகின்றது. இத்தாலி செல்பவர்களுக்கு மிக வும் பிரயோசனமானது. தமிழிலும் ஆங்கிலத்திலும் விளக்கங்கள். 077 1159606.

## சேவை

கௌரவமான, பாதுகாப்பான, நம்பிக்கையான இடத் தில் 24 மணி நேர தாதியர் வைத்திய பராமரிப்புடன் முதியோர்கள், நோயாளர்களுக்கான தங்குமிட வசதி சகல வசதிகளுடன் பம்பலப்பிட்டியில் உண்டு. தேவைப்படின் தொடர் : 071 5640013.

ஆலயங்களுக்குத் தேவையான முடியப்பட்ட தெற்பைகளும், வரலக்ஷிமி கௌரி நூல்களும் ஓடருக்கு செய்து தரப்படும். தொடர்பு : ஜெ. சிவகுமார சர்மா, வத்தளை. 060 2137224. கு.ஜெகதீஸ்வர சர்மா, யாழ்ப்பாணம். 077 6341338. 077 6349527.

கொழும்பில் வெளிநாடுகளுக்கு பொதிகள், ஆவணங்கள் என்பவற்றை உங்கள் வீட்டில் வந்து சேக ரிக்கப்பட்டு நான்கு வேலை நாட்களில் பாதுகாப்பாக உரியவரின் வீட்டில் ஒப்படைக்கப்படும். Kokul Lanka : 011 5750557.077 1607628, 078 526236.

குறைந்த விலையில் Art working, Type setting, Book setting, Album Designing, வேலைகள் செய்து தரப்படும். தேவைப்படின் பத்திரிகை வடிவமைப்பும் செய்யலாம். தொடர்பு : 077 3644566.

அடகு வைத்து மீளப்பெற முடியாத நகைகள் மீளப் பெற்று மிகுதி பணம் மீள வழங்கப்படும். Tel : 0777 599354.

முதியோர்கள் பராமரிப்பு இல்லம் ஆண் / பெண் இருபாலாருக்கும் எல்லாவிதமான வசதிகளுடன் அமைத்துள்ளது. Kind Care Elder Home, 17/1, George Mawatha, Mabole - Wattala. 071 4819033, Tel ; 2942554.

Canada அல்லது UK இல் குடியேற விரும்புகிறீர்களா? எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். நிபுணத்துவமிக்கவர்களின் நம்பிக்கைமிக்க சேவை. RF General & Sports Placement (Pvt) Ltd., No. 46 1/1, Castle Street, Colombo - 08. Tel : 011 4710686, Email : rfasialimited @yahoo.com.

Home Nursing Service முதியவர்களையோ நோயா ளிகளையோ தங்களுடைய வீட்டில் வைத்து பராம ரிப்பதற்கு பயிற்சி பெற்ற தாதியர் சேவை டாக்ட ரினால் நடத்தப்படுகின்றது. சேவை தேவைபபடின் தொடர்பு : 071 5640013

## வைத்தியம்

அற்புத வைத்தியம் " இஸ்முல் அஃளம்" எனும் இறையருள் கடாட்சம். 21 நாட்களுள் தீராத நோய்களுக்கும சுகம். சூனியங்கள். ஜின்ஷைத்தான். கண்ணூறு. மனநோய். பைத்தியம். தலைவலி. உடல் வலிகள். வாத நோய்கள. கொலஸ்ட்ரோல். ஆஸ்த்மா. குடற்புண். வியாபாரம். தொழில்துறை முன்னேற்றம். பொருளாதார செழிப்பும். கறாமத் நிறைந்த இந்த "இஸ்முல் அஃளம்"இறையருளால் 100% ஆண்மை சக்தி பெற அதிவிசேஷ தாது புஷ்டி குங்குமப்பூ இலேகியம். 60 நாட்களுக்குரிய ஔஷதம் 5000/- மட்டுமே. இஷ்ஷெய்குல ஹிகமத் S.M.N. மௌலானா ஹள்றமி ஷாதுலி. அரேபிய ஆன்மீக வைத்திய நிலையம். பதிவு இல. WB 1745, No. 201, முதலாம் மாடி. ஸ்ரீ சத்தர்ம மாவத்தை. மாளிகாவத்தை. கொழும்பு - 10. 071 4952309. 011 2689870. (Opex Agro (Pvt) Ltd. இற்கு அருகாமையில் )

பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த பிரபல சுதேச வைத்தியம் நிபுணர் Dr. V. Rajah அவர்களால் மயிர் உதிர்தல். பொடுகு. நாட்பட்ட தோல் நோய்கள். தேமல். எக்ஸ்மா. அலர்ஜி. முகப்பருக்கள் மற்றும் சகல பாலியல் குறைபாடுகளிற்கும் சிறந்த முறை யில் சிறந்த சிகிச்சை வழங்கப்படும். No. 253, G.R. De Silva Mawatha, 1st Floor, Kotahena, Colombo 13. Tel : 077 6167732, 060 2266844, E mail :rajaaherbel@yahoo.com சனி. ஞாயிறு தினங்களில் மட்டும் சிகிச்சை அளிக்கப்படும். தயவு செய்து முன்பு பதிவு பெற்று வரவும்.


## பழுது பார்த்தல்

Computer, Monitor, Printer, Repairs Service Maintance & Upgrading Net 2 phone, Net working, Software Installation ஆகியன தங்கள் இடத்திற்கு வந்து செய்து தரப்படும். தொடர்பு : 071 4448855.

Computer Repair, Software ADSL, Net 2 Phone, Installation & PC Sales at Your Place. We Provide Quick & Reliable Service. தொடர்பு: Tele'Net No. 22, காலி வீதி. தெஹிவளை. Tel : 011 2730872, 077 3934811

உடனடி சேவை. கண்டி. கொழும்பு பிரதேசங்களில் நேரில் வந்து Computer Repair செய்து கொடுக் கப்படும்.(Original Windows XP) Hardware, Software, Formatting, Installation, ADSL Internet Configuration and Virus Card Installation. (Monthly Service Accepted) தொடர்பு: முரளி - 077 3920739. 077 4412699.

TV, Projection TV, Plasma LCD, CD Set-up, Grinder, Fan, Washing Machine, Antenna, Satellite (45 Channels), House Wiring என்பன வீட்டிற்கு வந்து உத்தரவாதத்துடன் செய்து தரப்படும். தொடர்பு: 077 9498917.077 4050617.




**விபுலன்,**
**வெள்ளவத்தை.**

**கேள்வி:** என் கருத்தை மனைவி காதில் போட்டுக்கொள்கின்றாள் இல்லையே...!

**பதில்:** ஏன் பொய் சொல்கிறீர்? வைரத் தோடு வாங்கிக்கொடும். காதில் போடுகிறாளா இல்லையா என்று பார்க்கலாம்.

**முஹமட்,**
**கல்வானை,**

**கேள்வி:** செல்வியிடம் மயங்காத மனம் திருமதியிடம் குழைகிறதே. ஏன்...?



**பதில்:** 'பழகிய குதிரையில் சவாரி சுலபம்' என்பதனால் என்னவோ...?

**லாவண்யா,**
**நீர்கொழும்பு.**

**கேள்வி:** முகம் தெரியாத முட்டாள் தினமும் எனக்குக் காதல்கடிதம் அனுப்புகின்றானே...!

**பதில்:** உமது முகம் தெரிந்திருந்தால் காதல் கடிதமே போட்டிருக்கமாட்டான். அப்படித் தெரியாமல் போடுவதால் 'முட்டாள்' என்று குறிப்பிடுகின்றீரோ...!

**வி.சுகந்தி,**
**பெல்மதுளை.**

**கேள்வி:** விடாப்பிடியாக நிற்கும் பெற்றோருக்காகக் காதலனை இழப்பதா? அல்லது



அடம்பிடிக்கும் காதலனுக்காகப் பெற்றோரை இழப்பதா? எது சரி...?

**பதில்:** அது நீங்கள் உங்களை இழந்துவிட்டீர்களா என்பதைப் பொறுத்தது.

**ப.நீரஜா,**
**நீர்கொழும்பு.**

**கேள்வி:** முதலில் அன்பு கொள்வது ஆணா, பெண்ணா?

**பதில்:** முதலில் அன்பு கொள்வதும், ருசித்த பின் அன்பைக் கொல்வதும் ஆண்தான். அன்பைக் காட்டுவது (சில சமயங்களில் செருப்பால்) பெண்.

**அருள்,**
**நல்லூர்.**

**கேள்வி:** காதல் கல்யாணத்தோடு வேகமும் சேர்ந்தால்...?

**பதில்:** பிறகென்ன...? குசேலர் வீடுதான்!

**ஹனிபா,**
**கிண்ணியா.**

**கேள்வி:** அழகு என்பது...?

**பதில் :** இளம் விட்டில் பூச்சிகளின் விளக்கு!

**குமரேஸ்,**
**காவத்தை.**

**கேள்வி:** எனது நண்பர் நாற்பது வயதுப் பிரமச்சாரி. ஆனால், சந்தோஷமாகஇருக்கிறாரே...?

**பதில் :** வினாவில்தான் விடையும் இருக்கிறதே..!

**ரதீஸா,**
**முல்லேரியா.**

**கேள்வி:** பழக்கம் - சுபாவம். என்ன வித்தியாசம்?

**பதில்:** சுபாவம் பிறப்பில் வருவது. பழக்கம் இடையில் தொற்றிக்கொள்வது.

**அடம்ஸ்,**
**பொரளை.**



**கேள்வி:** திருமண வாழ்க்கைச் சுமை, தனக்கு சுவை என்கிறானே என் நண்பன்...?

**பதில்:** கழுதைக்கு சுமை சுமப்பது சுவையாகத்தான் இருக்கும்.

**வி.அமீன்,**
**சீனன்வாடி.**

**கேள்வி:** தெற்கு அரசியல்வாதிகள் நாணயம் மிக்கவர்களா?

**பதில்:** ஆம். பேரினவாதம் பேசுவதில் 'நாநயமும்', தங்கள் பொக்கற்றில் தாராளமாக நாணயமும் கொண்டவர்கள் அவர்கள்.

**சுபானி,**
**செங்கலடி.**

**கேள்வி:** மரபுக்கவிதை - புதுக்கவிதை. உறவு எப்படியோ...?

**பதில்:** மரபுக்கவிதை மாமி. புதுக்கவிதை மருமகள். மரபுக்கவிதையிடமிருந்து கருத்தாகிய மகனை மணந்து கொண்டு, புதுக் கவிதை மருமகள் மாமியாரை ஏளனம் செய்கின்றாள்...!

**எஸ்.ஸ்ரீ,**
**மருதானை.**



**கேள்வி:** அழகான பெண்களை பால் நிலவுடன் ஒப்பிடுகிறார்களே. ஏன்?

**பதில்:** பால் கெட்டுப் போகக் கூடியது. நிலவு தேய்ந்து போகக் கூடியது. சரியான உவமானம்தான்.

**வி.குமார்,**
**பேருவளை.**

**கேள்வி:** திருமணத்தால் இழப்பது எதுவோ...?

**பதில்:** ஓர் 'அரவு' மட்டும்தான். 'தூக்கம்' கெட 'துக்கம்' உம்மை அரவணைக்கும். 'தூ'வில் ஒரு துண்டை இழப்பீர். அவ்வளவுதான்.

**வி.சில்வா,**
**ஹிங்குராணை.**

**கேள்வி:** தொல்லை தரும் மனைவியின் கவனத்தை சமையலறைப் பக்கம் நாடவைக்க வழி ஏதும் சொல்வீரா பித்தரே...?



**பதில்:** தொ(ல்)லைக் காட்சிப் பெட்டியையும் தொ(ல்)லை பேசி இணைப்பையும் சமையலறைப் பக்கம் மாற்றும். எல்லாத் தொல்லைகளும் தீரும்.

**விவேகன்,**
**ஹாலி - எல.**

**கேள்வி:** வாலிப நோய் தீர திருமணம் நல்ல வைத்தியமா?

**பதில்:** ஆம். சுகம் வரும். ஆள் தப்பாது!

**ஸ்வப்னா,**
**செங்கலடி.**

**கேள்வி:** 'நாம் இருவர்; நமக்கு இருவர்' - என்ற கோஷம் இப்போது மாறி வருகின்றதா?

**பதில்:** ஆம். 'நாம் இருவர்; நமக்கு ஒருவர்' - என்கிறார்கள் இப்போது. நாடு படும் பாட்டைப் பார்த்தால் இன்னும் கொஞ்சக் காலம் சென்றதும் 'நாம் இருவர். நமக்கேன் மற்றொருவர்?' என்று கேட்கும் நிலை வந்தாலும் வரும்.

**பஷீர்,**
**காத்தான்குடி.**

**கேள்வி:** வாழ்க்கையிலே மேடு பள்ளங்களை ஒருவன் எப்போது காண்கிறான்...?

**பதில்:** பெரும்பாலும் திருமணத்தின் பின்னர்!

**ரமேஷ்,**
**ஹட்டன்.**

**கேள்வி:** கட்டினால் கொண்டாட்டமா? கட்டாவிட்டால் திண்டாட்டமா?

**பதில்:** பொங்கினவனுக்கு ஒரு புக்கை. பொங்காமல் தண்டினவனுக்கு பல புக்கை என்பார்கள். கட்டினவனுக்கு ஒரு வீடு. கட்டாதவனுக்குப் பல வீடு.



**வேலு,**
**டிக்கோயா.**

**கேள்வி:** மோகத்தால் விளைவது என்ன?

**பதில்:** மோசம்தான்!

**குருபரன்,**
**கொழும்பு.**



**கேள்வி:** 'கலாநிதி'ப் பட்டம் கூவி விற்கிறார்களே...!

**பதில்:** அது 'கல்(லா) நிதி'ப் பட்டம்!

**சயன்,**
**நிலாவெளி.**

**கேள்வி:** தமிழர் இன்று பாதுகாப்பாக வாழ என்ன வழி...?

**பதில்:** சாப்பிடவும், கொட்டாவி விடவும் தவிர மற்றப்படி வாயைத் திறவாமல் இருந்தால் சிலசமயம் தப்பிப் பிழைக்கலாம்.

**சூரியா,**
**வவுனியா.**

**கேள்வி:** 'அன்னையும் பிதாவும்' - முன்னறி தெய்வங்களா?

**பதில்:** அது தெரியாது. ஆனால், பலரும் 'பின்னடிக்கு இடைஞ்சல்' என்கிறார்கள்.

**பி.வரன்,**
**நாயன்மார்கட்டு.**

**கேள்வி:** 'நாய் போல அலைதல்', 'நாற்பதில் நாய்க்குணம்' என்றெல்லாம் கூறுகின்றார்களே...அது என்ன?

**பதில்:** நாக்கைத் தொங்கப்போட்டுக் கொண்டு அலையும் நாய்களை நீர் காண்பதில்லையா...? அந்தக் குணம்தான்!

## சொற்சிலம்பம் போட்டி இல. 326

சொற்சிலம்பம் 326 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பிவைக்கவேண்டிய கடைசித்தினம் ஓகஸ்ட் 17 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஓகஸ்ட் 24 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலும்பம் போட்டி இல.324 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150 ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல்மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.

## சொற்சிலம்பம் போட்டி இல.324

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 பி | ர | 2 ச | 3 வ | ம் | ■ | 4 ச | 5 தா |
| ர | ■ | 6 ம | லை | ■ | 7 அ | ர | ண் |
| 8 மா | 9 த | ர் | ■ | 10 அ | க | ண் | ட |
| 11 த | ரி | த் | 12 தி | ர | ம் | ■ | வ |
| ம் | ■ | 13 த | ரி | சு | ■ | 14 ஆ | ம் |
| ■ | 15 அ | ன் | பு | ■ | 16 அ | லை | ■ |
| 17 ப | ரு | ■ | 18 ரா | க | ம் | ■ | 19 ரோ |
| 20 சி | வி | கை | ■ | 21 வி | மா | ன | ம் |

## சொற்சிலம்பம் போட்டி இல. 324

1. ச.சுமதி,
197/1, 5வது ஒழுங்கை,
பண்டாரிகுளம்,
வவுனியா.
2. நா.அனோஜினி,
209 மார்கண்டு வீதி,
பாண்டிருப்பு 01,
கல்முனை.
3. எஸ்.என்.மணி,
106 மகிந்த மாவத்தை,
நுவரெலியா.

1. திருமதி.ச.சொர்னமலர்,
வவுனயா.
2. க.சகீலாபேகம்,
ஏறாவூர் - 02.
3. வடிவேல் வசந்தராஜ்,
கிளிநொச்சி.
4. திருமதி.எஸ்.ரெஜினோல்ட்,
பண்டாரவளை.
5. ஏ.டி.தேவதாசன் அல்மேடா,
முருங்கன்.
6. த.ரஜிதாரன்,
திருகோணமலை.
7. வ.திவசங்கர்,
புத்தளம்.
8. இ.சந்திரன்,
புளியங்குளம்.
9. ம.கமலநாதன்,
மட்டக்களப்பு.
10. செல்வி.ஜே.ஸனோ நஸ்ஹத்,
மஜீட்புரம், மல்வத்தை.
11. ப.நாகேஸ்வரி,
கல்கிசை.
12. முத்துசாமி பரந்தாமன்,
வெளிமடை.
13. திருமதி.வி.நாகுலேஸ்வரி.
முல்லைத்தீவு.
14. ச.சுரேந்தினி,
தெகிவளை.
15. எம்.எப்.எம்.ரிம்ஸாத்,
கிண்ணியா - 3.

## சொற்சிலம்பம் போட்டி இல.326

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | ■ | 4 | 5 | |
| | ■ | 6 | | 7 | | | ■ |
| 8 | 9 | | ■ | 10 | | ■ | 11 |
| 12 | | ■ | 13 | | | 14 | |
| ■ | 15 | 16 | | | ■ | 17 | |
| 18 | | | | ■ | 19 | | |
| 20 | | ■ | 21 | 22 | | ■ | |
| | ■ | 23 | | | | | ■ |

### சொற்சிலம்பம் போட்டி. இல. 326

**இடமிருந்து வலம்**

1. இணங்கு
4. பாதைக்குக் குறுக்காக நீர் பாய்வது இதன் வழியே.
6. பார்வைக்குக் கிட்டுதல் / நோக்குதல்.
8. பகுதி / நீரின் ஆழத்தை அளவிடும் அலகும் கூட.
10. அதிக / பாரமான.
12. வலிமை /பலம்.
13. அரற்றுதல் / (துணிபோன்றவற்றைக் கழுவுதல்).
15. தூர்த்தன் / காமத்தில் கொடூரம் இழைப்பவன்.
17. சேர்.
18. விளக்கில் வீழும் பூச்சி.
19. அனைத்து / சகல.
20. பனிமூசிப் பெய்யும் மாதம்.
21. விலத்துகின்ற செயல்.
23. பல வருடங்கள்.

**மேலிருந்து கீழ்**

1. உழைத்துப் பெறு.'
2. சமயம். யானைக்கும் பிடிப்பதுண்டு.
3. மூன்று.
4. பாடம் செய்தல் / மனதில் பதித்தல்.
5. தமது.
7. சகோதரிகளின் கணவன்மாரிடையேயான உறவு.
9. பார்வைக்கு வைக்கும் நிகழ்வு.
11. வலிமை உடையவன்.
13. நீங்குதல் / விலகிச் செல்லுதல்.
14. கூறு.
16. கிரீடம்.
18. விமான ஓட்டி.
19. அடைக்கலம் / தஞ்சம் புகுதல்.
22. மார்புக்கும் முதுக்கும் இடைப்பட்ட நெஞ்சறைப் பகுதி.


www.esermarketing.com
உங்களின் உடலினை நீங்கள் கட்டுக்கோப்புடன் வைத்துள்ளீர்களா ?
மிதமிஞ்சிய உடல் வளர்ச்சி, உடலின் எடை அதிகரித்தல், வயிறு வைத்தல், கெஸ்ட்ரிக் மற்றும் உயர் இரத்த அழுத்தம் போன்ற நோய்களினால் நீங்கள் கவலைப்படுகிறீர்களா ......
BODY SCULPTURE SINCE 1965
இதோ அதற்கான தீர்வு எம்மிடமிருந்து....
கட்டுமஸ்தான உடலினை பெற்றுக்கொள்ள ஆர்வமுடைய அனைவருக்கும் இது உகந்தது. இதனைப் பயன் படுத்துவதனால் உடற்பயிற்சி வகுப்புக்குச் செல்கின்ற நேரம் மற்றும் பணம் போன்றவற்றை குறைத்துக்கொள்ளலாம்.
இது ஆண் பெண் இருபாலாருக்கும் உகந்தது. இத்துடன் உடற்பயிற்சி பற்றிய அறிவூட்டும் புத்தகமொன்றும் இலவசமாக வழங்கப்படும்.
Body Strider
ரூ. 10,900/-
இது Fat Burning ( கொழுப்பினை கரைத்தல்) பயிற்சி உபகரணமாகும். உடலின் எடை அதிகரித்தல், வயிறு வைத்தல், கொலஸ்ட்ரோல் மற்றும் உயர் இரத்த அழுத்தம் போன்றவற்றினால் துன்பப்படுவோருக்கு இது பயன்தரவல்லது. தொடர்ச்சியாக ஒவ்வொரு நாளும் 20 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்வதனால் நல்லதொரு பிரதிபலனை நீங்கள் எதிர் பார்க்கலாம். நீச்சல், நடைபயிற்சி போன்றவைகளுக்கு ஒப்பான பயிற்சியினை இதனால் செய்துகொள்ளலாம். இக்கருவி ஆண், பெண் இருபாலாருக்கும் மற்றும் சகல வயதினருக்கும் உகந்தது.
Home GYM
ரூ. 29,500/- ரூபாவிலிருந்து
Plastic Dumbbells for Ladies
கிலோ ரூ. 75/- ரூபாவிலிருந்து
AB Pro
ரூ. 6,900/-
இவ்வுடற்பயிற்சி கருவியை பயன்படுதது வதால் உங்களின் வயிற்றுப் பகுதியில் ஏற்பட்டிருக்கும் மிதமிஞ்சிய தசையினை குறைதது உங்கள் இடையினை கச்சித மாகவும் கவர்ச்சியாகவும் மிகக குறுகிய கால உடற்பயிறசி யினால் பெற்றுக் கொள்ளலாம். இக்கருவியுடன் உடற் பயிற்சி வித்முறைகள் அடங்கிய CD மற்றும் புததகமும் உங் களுக்குஇலவசமாக வழங்கப்படும்.
ரூ. 39,500/- ரூபாவிலிருந்து
Electronic Treadmill
ரூ.12,300/- ரூபாவிலிருந்து
Weight Lifting Bench
Weight Lifting Belts
Total Trainer ( Total GYM )
ESER
ESER MARKETING (PVT) LTD.
கிளைகள்
புறக்கோட்டை - 2/10, சவுண்டர்ஸ் பிளேஸ், குணசிங்கபுர. (Market எதிரில்) தொ : 011 4327377
இராஜகிரிய - 997/9, கோட்டே வீதி, வெலிக்கடை. தொ:071 4440555, 5347632, 5357632
மொறட்டுவை - 649, காலி வீதி, ராவதாவத்தை. தொ: 5528888
நுகேகொடை - 213, ஹைலெவல் வீதி. தொ: 4304787, 4407242, 5529888
கண்டி - 266, பேராதெனிய வீதி. தொ: 081 5673333
குருநாகல் - 151/2 , விக்கிரம கட்டடம், கதுருகஸ் சந்தி, கொழும்பு வீதி, தொ: 037 5672562
களனி - 374, கண்டி வீதி, தலுகமை. தொ: 5552006
காலி - 66, கொழும்பு வீதி, கலுவெல்ல. தொ: 091 5457777
இரத்தினபுரி - 70 சி, பண்டாரநாயக்க மாவத்தை. தொ: 045 5678667
நீர்கொழும்பு - 433, கங்கந்தை சந்தி, கொழும்பு வீதி, தொ: 031 5678880
விநியோகஸ்தர்கள்
மட்டக்களப்பு - ஷைபின் ஸ்போட்ஸ், 362, பிரதான வீதி, காத்தான்குடி. தொ: 060 2652848, 077 3512341
மன்னார் - ஊஸா சேல்ஸ் சென்டர்.
யாழ்ப்பாணம் - "யாழகம்" 568, வைத்தியசாலை வீதி. தொ: 021 2225568
Punching Bag, Gloves
Boxing Man
Boxing Gloves
Electronic Bathroom Scales
Squat Rack Gloves
HOTLINE : 5 652 652

## நான் கண்ட பாரதி...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

"வள்ளுவன் தன்னை
உலகினுக்கே - தந்து
வான்புகழ் கொண்ட
தமிழ் நாடு - நெஞ்சை
அள்ளும் சிலப்பதி
காரம் என்றோர் மணி
ஆரம் படைத்த
தமிழ் நாடு"

ஆம், "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்" என்று பாரதியார் சொல்லி விட்டார் அல்லவா? இந்த அடியைப் படித்த விபுலாநந்தருக்கு பாரதியிடம் ஒருவித இறைமைப் பற்று (ஹீரோ வேர்ஷிப்) ஏற்பட்டதில் வியப்பு என்ன?

அந்த நேரத்தில் யாழ்ப்பாணத்திலும் மற்றும் சில பகுதிகளிலும் வாழ்ந்த தனித் தமிழ்ப் பண்டிதர்கள் சிலர் பத்தினித் தெய்வமான கண்ணகியை "இரக்கமற்ற முறையில் மதுரையை எரித்த அரக்கி, அவள் கதையான சிலப்பதிகாரத்தை வேண்டுமானால் காதைக் கொடுத்துக் கேட்போம். அதற்கு ஒரு போதும் நெஞ்சைக் கொடுக்க முடியாது. அது நெஞ்சை அள்ளும் பாடலாக இருக்க முடியாது" என்று மேடைகளில் பேசி பாரதியைச் சாடிக் கொண்டிருந்தனர்.

இதேபோலவே தமிழ் நாட்டுத் தமிழ்ப் பண்டிதர்களும், பாரதியின் பாடல்களில் கருத்துப் பிழையும், சொற் பிழையும், யாப்பிலக்கணப் பிழையும் கண்டுபிடித்து ஏளனம் செய்து கொண்டிருந்தார்கள். பாரதியை ஒரு மதிப்புக்குரிய கவிஞனாக ஏற்க மறுத்தார்கள். சேக்கிழாரும், வில்லிபுத்தூராரும் அந்த வரிசையில் இறுதியாக மீனாட்சி சுந்தரம்பிள்ளையும் கவிஞர்களாகத் தோன்றிய மண்ணில் பாரதி போன்ற ஒரு துந்தன்னா கவியும் ஒரு கவியா என்று கேட்டார்கள்.

இப்படி ஒரு வித்துவக் காய்ச்சல் எரிந்து கொண்டிருந்த வேளையில்தான் -

அதாவது, 1931 ஆம் ஆண்டில் திருகோணமலை இந்துக் கல்லூரி அதிபர் பதவியை இன்னொருவரிடம் கையளித்துவிட்டு, செட்டி நாட்டரசர் ராஜா சார் அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் வேண்டுகோளை ஏற்று சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முதலாவது தமிழ்ப் பேராசிரியராகப் போய் அமர்ந்தார் சுவாமி விபுலாநந்தர்.

சுவாமி விபுலாநந்தருக்கு இந்த உயர் பதவி கிட்டியதால் பாரதிக்கும் தமிழ்நாட்டில் உயர் பதவி கிடைக்கலாயிற்று.

அது எப்படி நிகழ்ந்தது என்பதை அடுத்த வாரம் பார்ப்போம்.

(தொடரும்)

## வானத்தில் ஒரு...

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவன் செய்ய வேண்டியது மெதுவாக தன் தாய்க் கலத்தைவிட்டு வெளிவந்து, விண்ணில் மிதந்து இன்ஸாட்டை அணுகி, அதைச் சரி பார்த்து... சரி பார்க்க ஒன்பது நாட்கள் எடுத்துக் கொள்ளலாம். அவ்வளவு ஒக்ஸிஜன், அவ்வளவு உணவு மாத்திரைகள் உள்ளன.

ஒன்பது நாட்கள் ஆகாது. சரியாக ஐந்து நிமிஷ வேலை. இங்கிருந்தே தெரிந்தது. ஒரு பெர்க்கஷன் பித்தான் செயல்படாமல் வெளியே நீட்டிக் கொண்டிருந்தது. அதை அழுத்தினால் போதும். உள்ளே இருக்கும் மருந்து வெடித்து பானல்கள் இரண்டும் விரிந்து கொண்டு விடும்.

வேலை முடிந்ததும் தாய்க் கப்பலுக்குத் திரும்பி வந்து கதவை மூடிக்கொண்டால் அப்புறம் வீடு நோக்கிச் செல்லும் பறவைதான்!

"துருவா!"

"கம் இன்"

"தயார் என்றால் நீ வெளியே செல்லலாம். பெஸ்ட் ஆஃப் லக்!"

அவன் வலது கை விரல்கள் செயல்பட, மெதுவாகக் குடுவையின் கதவு திறக்க, துருவா ஓர் அம்பு வெளியே மிதந்தான். தங்க நிறத் தொப்புள்கொடி அவனுடன் சுழன்று வந்தது. தாய். நவீன விஞ்ஞானத் தாய்! அவனுடன் நான் இணைந்திருக்கும் கொடி இது. இது இருக்கும் வரை எனக்குத் தொடர்பு பற்றிக் கவலையே இல்லை. தாய்க் கப்பலிலிருந்து என் உடலைச் சுற்றி இணைக்கப் பட்டிருக்கும் அத்தனை சாதனங்களும் மின் சகதி!

மெல்ல மெல்ல துருவா இன்ஸாட்டை அணுகினான். விநோத நடனம் அது. வெல்வெட் இருட்டில் எந்தவிதக் கட்டுப்பாடும் ஈர்ப்பும் கவர்ச்சியும் இன்றித் தனியாக மிகத் தனியாக மிதக்கும் உன்னத நிலை. துருவாவுக்கு உற்சாகம் தடம்புண்டது. எவ்வளவு அதிர்ஷ்டம் செய்தவன் நான்! இந்தக் காட்சியை அனுபவிப்பதற்கு...! முதலில் வந்த காரியத்தை பார். அப்புறம் காட்சிகள்...

துருவா தான் பழுது பார்க்கவேண்டிய இன்ஸாட் ஒன்பதின் அருகே வந்து... என்ன ஒரு விநோத சந்திப்பு இது! பூமியில் பங்களூரில் ஏறக்குறைய ஒரு வருஷத்திற்கு முன் பார்த்தது. இப்போது, 36,000 கிலோ மீற்றர் உயரத்தின் தனிமையில் ஒரு ஜியோ ஸ்டேஷனரி சந்திப்பு! விதி. நவீன விதி. இருபத்தோராம் நூற்றாண்டு விதி.

மேன்யுல் ஓவர்ரைட் என்று இருக்கும் சாதனம் எங்கிருக்கிறது என்று தெரியும் துருவாவுக்கு. அதை அழுத்தினால் சரியாய்ப் போய் விடும். இங்கே வந்து ஒரு பட்டனை அழுத்த மூன்று கோடி ரூபா! மூன்று கோடி ரூபா சின்ன மீன். இது இருபது கோடி. மீன்! இது செயல்பட்டால் நாட்டுக்கு எவ்வளவு லாபம்! இருபத்தி நான்காயிரம் இணைப்புகள்.

மெதுவாக ஜாக்கிரதையாக அதை அணுகி ஹாண்ட் செட்டைத் திறந்து அந்தச் சிறிய திறப்பில் விசையைச் செலுத்தி அந்தப் பட்டனை அழுத்த.. மௌனமாக ஆனால், வேகமாக அந்த ஸோலார் பானல்கள் விரிந்து திறந்து கொண்டன. அதன்மேல் சூரிய ஒளி பட்டு, புதிய சக்தி பெற்று, ஸாட்டி லைட்டின் பத்து மாத உறக்கம் கலைந்து அது செயல்பட...

பூமியில் கன்ட்ரோல் கேந்தி[illegible]திப் பென்று கைதட்டல் ஒலி கேட்[illegible]பசர் சர்மா தன் ப்ரொபசர்தனத்தை மற[illegible] வாயில் விரல் வைத்து 'உய் உய்' என்று விசில் அடித்தார்...

இன்ஸாட் ஒன்பதுக்கு உயிர் வந்துவிட்டது. அதன் சர்வ சக்திகளும் பெற்று, அதன் சாட்சியாகப் பூமிக் கேந்திரத்தில் பற்பல வண்ணம் விளக்குகள் கண் சிமிட்ட...

"ஹீரோ துருவா வாழ்க!"

"துருவா தி கிரேட்!"

"மன்னய்யா! ஒரு நிமிஷத்தில கண்டுபிடிச்சுட்டான் பாரு."

"துருவா!"

மௌனம்.

"துருவா ஃப்ரம் கண்ட்ரோல்!"

மௌனம். ஆயிரக்கணக்கான இடங்களிலிருந்து கேட்கும் விந்தை மௌனம்.

"துருவா ஃப்ரம் கண்ட்ரோல்! துருவா... துருவா!"

சர்மா வெடித்தார். "ட்ரை திஸ் டான்ட்பை சானல்! ட்ரை வி எச் எஃப்!"

அந்த இடத்து உற்சாகம் அடங்கிப்போய்ச் சட்டென மௌனம்.

'துருவா! துருவா! துருவா!' என்று ரேடியோ அலைகள் விண்வெளியில் ஆழப்பதிந்து தேடின.

அதே சமயம் துருவாவும் "கன்ட்ரோல். கன்ட்ரோல்" என்று கூவிக்கொண்டிருந்தான்.

ஏன் பதில் இல்லை. ஏன்? என்ன ஆயிற்று, இந்த மடையர்களுக்கு பதில் சொன்னால் என்னவாம்?

"கன்ட்ரோல், கன்ட்ரோல்!"

ஏன் பதில் இல்...

முதல் தடவையாக அதைப் பார்த்தான். கத்திக்குத்து போல வயிற்றில் உணர்ந்தான்.

(மிகுதி அடுத்தவாரம் தொடரும்)

## அணுசக்தி ஒப்பந்தத்தால்...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவிடம் சரணாகதி அடைந்தது போல பற்றெல்லாவற்றிலும். பாகிஸ்தான் சரணாகதி அடையும் காலம் வெகு தொலைவில் இல்லை.

பாகிஸ்தானில் உள்ள மிக சில புத்திசாலிகளில் ஒருவரான இம்ரான்கான் அண்மையில் "இந்தியா போல் வலுவான அரசமைப்பு எம்மிடம் இல்லாததே பெரும்குறை" என ஒப்புக் கொண்டார். "ராகுல் காந்தியை பார்த்தும் பூட்டோவின் மகன் பாடம் கற்கவேண்டும். படிப்படியாகவே அரசியல் தலைமைத்துவத்தை அடையவேண்டும்." எனவும் கூறியுள்ளார்.

சீனாவிடம் அடைக்கலம் புகுவது மட்டும் பாகிஸ்தானுக்கு உதவாது. சீனர்கள் பாகிஸ்தானியரை விட யுத்திசாலிகள்தான். ஆனால், அந்த சீனர்களின் பொருளாதார எழுச்சிக்கும் ஈடுகொடுக்க இந்தியா தயாராகி வருகிறது.

'பன்றியுடன் சேர்ந்த கன்றும் மலம் உண்ணும்' என்பது போல் பாகிஸ்தானுடன் சேர்வதால் சீனாவுக்குமே அழிவு ஏற்படக்கூடும். மொத்தத்தில் பாகிஸ்தான் தொடர்ந்தும் இந்தியாவை எதிர்த்தால் 'உலகின் சாபக்கேடு' என்ற அவப்பெயரை சம்பாதிப்பது நிச்சயமாகும். இந்திய - அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தத்தை எதிர்த்து பாகிஸ்தான் இடும் அவலக்குரல் உலக நாடுகளில் செவிடன் காதில் ஊதிய சங்காகவே விழுந்திருக்கிறது.

இந்திய தேசத்தை பின்பற்றி ஜனநாயகத்தை முன்னிறுத்தினால் ஒருவேளை பாகிஸ்தான் தப்பிக்கொள்ள இயலுமாகும். அந்நாட்டில் ஜனநாயகம் நிரந்தரமாக குழிதோண்டி புதைக்கப்பட்டு இராணுவ சர்வாதிகாரம் ஓங்குவது கூட அந்நாட்டின் கண்மூடித்தனமான இந்திய எதிர்ப்பு காரணமாகவே. இதையெல்லாம் பாகிஸ்தான் புரிந்துகொள்ளாத வரை அந்நாட்டுக்கு உய்வில்லை என்பது மட்டும் நிச்சயம்.

# ராசி பலன்

11-08-2008 முதல் 17-08-2008 வரை

பொ.சந்திரலிங்கம்




அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.

காரியசித்தியுண்டு. பிரயாணவாய்ப்புண்டு.பணம் இருக்கும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு உண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் உண்டு. தொழில்துறையில் மெதுவான முன்னேற்றம் இருக்கும். எதிர்பார்ப்புகள் நிறைவேறா.




கார்த்திகை 2,3,4. ரோகிணி, மிருகசீரிடம் 1, 2

காரிய சித்தியுண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசகமாக இருப்பர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறா. நண்பர்களால் பிரச்சினை வர வாய்ப்புள்ளது.




மிருகசீரிடம் 3,4. திருவாதிரை, புனர்பூசம் 1,2,3

காரியத்தடை இருக்கும். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் உதவுவர்; உதவியை எதிர்பார்ப்பர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் உண்டு. தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறா.




புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் உதவுவதாக பாசாங்கு காட்டுவர். தாய் நலம், தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு காலதாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.




மகம், பூரம், உத்தரம் 1

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பார்கள்.




உத்தரம் 2,3,4. அத்தம், சித்திரை 1,2

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் பகை கொள்ளக் கூடும். தாய் நலமில்லை, தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு காலதாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்ட மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.




சித்திரை 3, 4. சுவாதி, விசாகம் 1, 2, 3.

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகைகொள்ளக்கூடும். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.




விசாகம் 4, அனுசம், கேட்டை

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவுவர்; உதவியை எதிர்பார்ப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகைவர் நட்பாகலாம். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.




மூலம், பூராடம், உத்தராடம் 1.

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல்நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புக் காலதாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.




உத்தராடம் 2,3,4. திருவோணம், அவிட்டம் 1,2

காரியத்தடை இருக்கும். பணப்பற்றாக் குறை நிலவும். பிரயாண வாய்ப்பு காலதாமதமாகலாம். உறவினர், அயலவர் விலகி இருப்பர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு காலதாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் உண்டு. தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. நண்பர்களால் பிரச்சினை உருவாக வாய்ப்புள்ளது.




அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3

காரியத்தடை இருக்கும். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளில் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர்.




பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்புப் பாதிக்கலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக் கூடும். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் சேரும். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளில் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

# ஒலிம்பிக் திருவிழா



ஒலிம்பிக் மயத்தில் உலகம் தற்பொழுது பயணித்துக் கொண்டிருக்கின்றது. பலராலும் எதிர்பார்க்கப்பட்டிருந்த 29ஆவது ஒலிம்பிக் போட்டி சீனத் தலைநகர் பீஜிங்கில் வியக்கத்தகு ரசனைமிகு வாணவேடிக்கைகளுடன் ஆரம்பமாகின்றன.

இந்த ஒலிம்பிக் போட்டி தொடங்கிய ஆண்டு, நாள் மற்றும் நேரம் அனைத்திலுமே எட்டு என்ற இலக்கம் தொடர்புபட்டுள்ளமை விசேட அம்சமாகும். 2008ஆம் ஆண்டின் 8ஆவது மாதமான ஓகஸ்டில், 8ஆம் திகதி, சீன நேரப்படி இரவு 8 மணி 8 நிமிடம் 8ஆவது செக்கனில் போட்டி தொடங்குவது சிறப்பம்சமாகும்.

ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும் ஸ்டேடியங்கள் மிக அற்புதமாக வடிவமைக்கப்பட்டுள்ளன. பறவைக் கூடு வடிவில் அமைந்துள்ள நஷனல் ஸ்டேடியத்தை சீன ஓவியர் அய் வெய்வி வரைந்து கொடுத்தார். காகிதத்தில் இருந்த ஓவியத்தை கட்டடக்கலையாக மாற்றிய பெருமை சுவிற்ஸர்லாந்தைச் சேர்ந்த ஹெர்சாக் மற்றும் டீமுரானை சேரும்.

ராங்கன்

மற்றொரு சிறப்பம்சம் ஒலிம்பிக் கிராமம். பலராலும் பாராட்டுப் பெற்றுள்ள ஒலிம்பிக் கிராமமும் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது. ஹிட்லருக்கு தலைமை கட்டடக்கலை நிபுணராக இருந்தவரின் மகனான ஆல்பேர்ட் ஸ்பியர்தான் இந்த கிராமத்தை வடிவமைத்துள்ளார்.

திபெத் பிரச்சினை ஒருபுறமிருக்க, அண்மையில் சீனாவின் சிசுவான் மாகாணத்தில் ஏற்பட்ட பூகம்பத்துக்கு 70,000 பேர் பலியானமை அந்நாட்டு அரசை மேலும் இக்கட்டில் தள்ளியது எனினும், அவற்றிலிருந்து மீண்டு தனது பணியைத் திறம்பட நடத்துகின்றது அரசு.

2004ஆம் ஆண்டு ஏதென்ஸில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியின் தொடக்கவிழாவை விட மிகவும் மெருகூட்டப்பட்டதாக - அனைவரையும் சிலிர்க்க வைப்பதாக பீஜிங் ஒலிம்பிக் போட்டியின் பல்வேறு நிகழ்வுகள் நடந்தேறுகின்றன. இனி நடக்கப் போவது வீரர்களிடையேயான சமர்.

ஒலிம்பிக் போட்டியில் களமிறங்கும் ஒவ்வொரு வீரரின் இலட்சியமும் தங்கம் வெல்வதாகத்தான் இருக்கும். இறுதியில் தங்களிடம் இருக்கும் அபார திறமையை வெளிப்படுத்தி இலட்சியத்தை அடைபவர்கள் சிலரே. ஆனாலும், விளையாட்டு வீரனுக்குரிய அழகு கடைசிவரை போராடுவதுதான் அதுபோல் ஒவ்வொரு வீரனும் தன்னால் இயன்ற அளவுக்கு போராடுவார்கள் என்பதில் ஐயமில்லை.

கடந்த காலங்களில் பல உலக சாதனைகள் படைப்பதற்கு களம் அமைத்த ஒலிம்பிக் போட்டியில் இம்முறையும் பல சாதனைகளை எதிர்பார்க்கலாம். இடையிடையே பல சுவாரஸ்யமான நிகழ்வுகள் நடந்தேறலாம். ஊனங்களை வென்று, பல தடைகளைத் தாண்டி வெல்லத் துடிக்கின்றனர் பல வீரர்கள்.

அவர்களுக்கும் இந்த ஒலிம்பிக் மறக்கமுடியாத களமாக அமையட்டும்.

போட்டியில் கலந்துகொள்ளும் இலங்கை வீரர்கள், வீராங்கனைகளையும் ஏனைய அனைத்து வீரர்களையும் எமது அன்பு வாசர்களோடு சேர்ந்து நாமும் வாழ்த்துகிறோம்.







## பரத நாட்டிய அரங்கப்பிரவேசம்



திரு. திருமதி. ஷண்முகானந்த ஷர்மா அவர்களின் புதல்வியும், ஸ்ரீமதி திரிவேணி சங்கர் அவர்களின் மாணவியுமான குமாரி. பத்மப்ரியாவின் பரதநாட்டிய 'அரங்கப் பிரவேசம்' எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெறுகின்றது.

இந்நிகழ்வில் தஞ்சாவூர் பல்கலைக்கழகம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் முன்னாள் பேராசிரியர் திருமதி ஞான குலேந்திரன் பிரதம அதிதியாகவும், கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி கோதை நகுலராசா கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

